டிசம்பர் 9 | 28 பக்கங்கள் | ரூபா 14.00

# சுடர் ஒளி

THE SUDAR OLI
வார மலர்



# ஐ.தே.கவின் ஏழரை சனியன் நீங்கியது!

## கூட்டுத் தமிழினப் பணி வரலாறு ஆரம்பம்

# வடக்கு, கிழக்கில் வன்முறை முத்திரை பதித்த தேர்தல்

## முன் எப்போதுமில்லாதவாறு குடாநாடு கலங்கியது

இலங்கையின் வரலாற்றில் அதிகமான வன்முறைச் சம்பவங்களுடன் 12ஆவது நாடாளுமன்றத் தேர்தல் முடிவுக்கு வந்திருக்கிறது.

பல பகுதிகளிலும் பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்று பலர் கொல்லப் பட்டும் பலர் காயமடைந்தும் உள்ளனர். இந்த நிலையில் வடக்கு — கிழக்குப் பகுதிகளிலும் நாம் ஒன்றும் வன்முறைகளுக்குச் சளைத்தவர்கள் அல்லர் என்ற விதத்தில் தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளன.

தேர்தல் வன்முறைச் சம்பவங்களில் இம்முறை வடக்கு கிழக்கில் யாழ். மாவட்டமே முதன் நிலையைப் பெற்றிருக்கிறது. அடுத்து மட்டக்களப்பு மாவட்டமும் மூன்றாவது இடத்தில் வன்னி மாவட்டமும் இருந்து வருகின்றன.

திருகோணமலை மாவட்டம் இம்முறையும் தனக்கு நல்ல பெயரை தக்கவைத்துள்ளதாகவே தெரிகிறது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் தீவுப்பகுதியில் இடம்பெற்ற தமிழர் கூட்டமைப்பு மீதான தாக்குதலே பெரிய சம்பவமாகக் கருதப்படுகிறது. இந்தச் சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர்.

அடுத்த சம்பவம் 4ஆம் திகதி இடம்பெற்றது. ஐ.தே.கவின் தேர்தல் முகவர்கள் எட்டுப்பேர் 8 பிரேதப் பெட்டிகளுடன் நெடுந்தீவை நோக்கி குமுதினி படகில் சென்றுகொண்டிருந்தனர்.

அங்கே நெடுந்தீவுக் கரையில் காத்திருந்த சிலர் கத்திகள் பொல்லுகளினால் குமுதினி பயணிகள் படகை கரைக்கு வரவிடாமல் தாக்கினர்.

இதனால் தேர்தல் முகவர்களும் குமுதினிப் படகில் இருந்த பயணிகளுமாக 27 பேர் வரையானோர் காயமடைந்தனர்.

தேர்தலன்று இந்தச் செய்திகள் முக்கிய இடத்தைப் பிடித்தன.

### ஈ.பி.டி.பி — ஐ.தே.க. மோதல்

தேர்தல் நாளான 5ஆம் திகதி ஈ.பி.டி.பியினரும் — ஐ.தே.கவினரும் நேரடியாகவே பல்வேறு இடங்களிலும் மோதிக்கொண்ட சம்பவங்கள் இடம்பெற்றன.

வெளியிடங்களில் இருந்து காரைநகருக்கு வாக்காளர்களை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று தாக்கப்பட்டது.

மூளாய்ப் பகுதியில் உள்ள அரசடி என்ற இடத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. பிக்அப் வாகனத்தில் வந்த சிலர் லொறியை மறித்து லொறியின் நான்கு சில்லுகளுக்கும் வெடி வைத்தனர். காற்றுப் போன பின்பு லொறியில் இருந்தவர்கள் மீது அவர்கள் தாக்குதலிலும் ஈடுபட்டனர். இதில் பெண் ஒருவர் படுகாயமடைந்தார். இவர் பின்னர் யாழ் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

காரைநகர் வாக்காளர்கள் பலர் சித்தன்கேணி, வட்டுக்கோட்டை, மூளாய் ஆகிய இடங்களில் உள்ளனர். இவர்களை வாக்களிப்புக்காக ஏற்றிச் சென்ற சமயமே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. மகேஸ்வரன் காரைநகரை பிறப்பிடமாகக் கொண்டவர்.

### கோண்டாவிலில் கள்ள வாக்கு

அடுத்து கோண்டாவில் பகுதியில் உள்ள பரஞ்சோதி வித்தியாலயத்தில் இயங்கிய வாக்குச்சாவடியில் சிலர் கள்ளவாக்குப் போட முயற்சித்தனர். அங்கு கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட யாழ் பல்கலைக்கழக மாணவனான எஸ்.பிரபாகரன் என்பவர் அதனைத் தடுக்க முற்பட்டார். இவர் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான C.M.Vயின் உறுப்பினர் என்று தெரிவிக்கப்படுகிறது. கள்ளவாக்குப் போடுவதை இவர் தடுத்ததைப் பிடிக்காத சிலர் இவரை வானொன்றில் கடத்திச் சென்றிருக்கின்றனர். கடத்திச் செல்லப்பட்ட பிரபாகரன் கடுமையாகத் தாக்கப்பட்ட பின் மாலையில் விடுவிக்கப்பட்டார்.

*அவர் பின்னர் யாழ். திருக்குடும்ப கன்னியர் மட* வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

### திருநெல்வேலியில் அட்டகாசம்

இதேவேளை தேர்தல் வாக்களிப்பு முடிவடைந்த அன்று கத்திகள், பொல்லுகள், வாள்கள் போன்ற ஆயுதங்களுடன் பலர் லொறிகள் மூலம் திருநெல்வேலிச் சந்தியில் கொண்டுவந்து இறக்கப்பட்டனர்.

இவர்கள் அங்கிருந்து நல்லூர்ப் பக்கமும் சென்று ஐ.தே.கவினரைத் தேடித் திரிந்தனர். அப்போது பழம் றோட்டிலிருந்து பலாலி றோட்டை நோக்கி வானொன்றில் ஐ.தே.க வேட்பாளரான மகேஸ்வரன் வந்து கொண்டிருந்தார். அவரைக் கண்ட அந்தக் கும்பல் அவர் மீது தாக்குதல் நடத்த முயன்றது. அப்போது மகேஸ்வரன் வானிலிருந்து இறங்கி அருகிலிருந்த பொலிஸ் சோதனைச் சாவடி ஒன்றுக்குள் சென்றதை அடுத்து பொலீஸார் அவரைப் பாதுகாத்து வீட்டுக்கு அனுப்பிவைத்தனர். இதனைத் தொடர்ந்து அவரது வீட்டுக்கும் பெரும் பொலிஸ் படையின் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

மகேஸ்வரன் மீது தாக்குதலை நடத்த முடியாது ஏமாந்த ஆயுதக்குழு அந்த வழியால் வந்த யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறை விரிவுரையாளர் அன்ரனி எட்மன் றிச்சட் என்பவரையும் அவரது சகோதரரான அன்ரனி அனஸ்டீன் றோச் என்பவரையும் தாக்கியது.

நீங்கள் ஐ.தே.க ஆதரவாளர்கள்தானே என்று கேட்டபடி அக்கும்பல் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

இதில் காயமடைந்த இருவரும் யாழ்.வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவங்களை அடுத்து அன்று இரவு என்ன நடக்குமோ ஏது நடக்குமோ என பலரும் யாழ். நகரில் பீதியில் நடுங்கியபடியே இருந்தனர்.

ஆனால் மாலையில் படையினர் வந்து இந்த ஆயுதக் கும்பல்களைப் பிடித்து ஆயுதங்களைப் பறித்துக்கொண்டு விரட்டி விட்டனர் என்றும் —



யாழ்ப்பாணத்தில் வாக்களிப்பு

இதனால் நிலைமை ஓரளவு சீரடைந்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பதற்றங்களுக்கு மத்தியில் யாழ். மாவட்டத்தில் கணிசமான அளவு வாக்குகள் அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### வாக்காளரை நோக்கி ஷெல்

அடுத்து வன்முறையில் இரண்டாவது இடத்தினை வடக்கு கிழக்கில் பிடித்துள்ள மாவட்டம் மட்டக்களப்பு. இங்கு தேர்தல் அன்று தமிழர் கூட்டமைப்பைச் சேர்ந்த ரெலோ வேட்பாளரான பிரசன்னாவின் வீட்டின் மீது கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது. இன்னொரு தமிழர் கூட்டமைப்பு வேட்பாளரான வெள்ளிமலை தாக்கப்பட்டார்.

இதுதவிர மட்டக்களப்பில் — விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் 85 ஆயிரம் வாக்காளர்களில் 5 ஆயிரம் பேர் மட்டுமே வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர். ஏனையோரில் வாக்களிக்கத் தயாராக இருந்த பலர் ஷெல் வீசி துரத்தப்பட்டனர்.

படையினர் பாதைகளை மூடி ஏனையோரை வாக்களிக்காது தடுத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. அங்கு 56 வீத வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தன என்று அறிவிக்கப்பட்டது.

### நால்வருக்கு தண்டனை

அடுத்து வவுனியாவில் தேர்தல் நாளன்று 4 பேர் அதிகளவு வாக்காளர் அட்டைகளை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்களில் இருவர் புளொட் இயக்கத்தையும் இருவர் தமிழர் கூட்டமைப்பையும் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த 4 பேருக்கும் வவுனியா மாவட்ட நீதிவான் இளஞ்செழியன் 500 ரூபா தண்டப் பணமும் 14 நாள் சிறைத்தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

இரவு 9 மணியளவில் புளொட் இயக்க உறுப்பினரான *ரவிச் சந்திரன் என்பவர் வாள்* வெட்டுக்கு இலக்காகிய நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதுதவிர புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து வாக்களிக்க ஆயிரக்கணக்கானோர் தயாராக இருந்தபோதிலும் அவர்கள் வருவதற்கு ஏதுவாக உள்ள ஒரே பாதையான பிரமணாளங்குளம் மூடப்பட்டிருந்தது. பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி படையினர் இப்பாதையை மூடிவிட்டனர். இதனால் அங்கிருந்து வந்து வாக்களிக்கத் தயாராக இருந்தவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்ல நேரிட்டது. இதுபற்றி தேர்தல் ஆணையாளருக்கும் முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை பிரமணாளங்குளம் பாதையைத் திறந்து வன்னி மக்களை வாக்களிக்கச் செய்ய ஏதுவாக சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருந்த நிலையில் இறுதி நேரத்தில் பாதையைத் திறக்க படையினர் அனுமதி மறுத்தது வன்னி வாழ் மக்களின் வாக்குரிமையை தடைசெய்யும் செயலென வவுனியா அரச அதிபரும் தேர்வத்தாட்சி அலுவலருமான கே.கணேஸ் தேர்தல் ஆணையாளரிடம் முறையிட்டுள்ளார்.

இவ்வாறான அசம்பாவிதங்களின் மத்தியிலும் வன்னி தேர்தல் மாவட்டத்தில் 60 வீத வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன.

### அமைதியான வாக்களிப்பு

இதுதவிர திருகோணமலை மாவட்டத்தில் வன்முறை என்று எதுவும் பெரிதாக தேர்தல் நாளன்று நடைபெறவில்லை.

அங்கு 73 வீத வாக்குகள் அளிக்கப்பட்டுள்ள போதிலும் ஹல்லவட்டிய என்ற வாக்களிப்பு நிலையத்திலேயே இலங்கையில் ஆகக் குறைந்த வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தன. அங்கு 6 வாக்குகள் மட்டுமே போடப்பட்டிருந்தன.

அந்த 6 வாக்குகளுக்காகவும் அந்த வாக்களிப்பு நிலையத்தில் 6 தேர்தல் அதிகாரிகள் கடமையாற்றியது வேடிக்கையான விடயம்.

எப்படியோ தென்பகுதி மாவட்டங்களுக்குத் தாமும் சளைத்தவர்கள் அல்லர் என்று அடிபிடிப்பட்டுத் தேர்தல் நாடகத்தை நடத்தி முடித்திருக்கின்றன வடக்கு, கிழக்குக் கட்சிகள்.

— வன்னி மைந்தன்

# சீனப் பெருஞ்சுவரும் சின்னச் சிலந்திகளும்

1969 ஜூலை 19ஆம் திகதி. அன்றுதான் அப்பல்லோ 11 என்ற விண்கலத்தில் சென்று மனிதர்கள் நிலவில் கால் பதித்தனர்.

இப்படியாக விண்வெளியும், சந்திரனும் மனிதர்களின் ஆதிக்கத்தில் வந்துவிட்டன.

விண்வெளியில் இருந்து பார்த்தால் பூமியில் புலப்படக்கூடிய ஒரே பொருள் சீனப் பெருஞ்சுவர்தான்.

1684 மைல் நீளமாய் உள்ள இந்தச் சுவர் 30 அடி உயரமும், 32 அடி அகலமும் கொண்டது. 600 அடிக்கு ஒரு காவல் கோபுரம், 40 அடி உயரத்தில் உள்ளது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் உலகமே கண்டு வியக்கும் மாபெரும் மனித சாதனை இது.

விண்வெளிப் பயணம் மேற்கொண்டது ஒரு சாதனை என்றால், விண்வெளியில் இருந்து பார்த்தாலும் தெரியக்கூடிய அளவுக்கு ஒரு சீனப் பெருஞ்சுவரைக் கட்டியதும் அதற்கு இணையான சாதனைதான்.

மனிதர்களாகிய நாம் செய்த சாதனை இருக்கட்டும், சிலந்திகளும் விண்வெளியில் வரலாறு காணாத சாதனை படைத்துள்ளன.

சீனர்கள் மண்ணில் சுவர் எழுப்பி சாதனை படைத்ததைப் போல் சிலந்திகள் விண்வெளியில் வலைபின்னி வியக்க வைத்துள்ளன.

நாஸா விண்வெளி ஆய்வு மையம் விண்வெளியில் சிலந்திகளின் வலை பற்றிய ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. இதற்காக இரண்டு சிலந்திகள் விண்வெளிக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

அங்கே இரை கிடைக்காது என்பதை அறியாத இந்த அப்பாவிச் சிலந்திகள் விண்வெளியிலும் வலை பின்னித் தங்கள் கைவண்ணத்தைக் காட்டின.

இந்தச் சிலந்திகள் மண்ணில் பின்னிய வலைகளுக்கும், விண்ணில் பின்னிய வலைகளுக்கும் வேறுபாடு இருப்பதை ஆய்வாளர்கள் கண்டனர். மேலும் வலையின் பட்டு இழைகள் மண்ணில் இருந்ததை விட இருபது சதவீதம் மெல்லியவையாகக் காணப்பட்டன.

இந்த சிலந்திகள் விண்வெளியில் ஐந்து வலைகளைப் பின்னின. அவற்றில் நான்கு சிறியவை. இவற்றில் இழைகளின் திருப்புமுனைகள் தெளிவாகக் காணப்படவில்லை. அடுத்து அடுத்து உள்ள ஆர இழைகளைத் தொடாத, சுற்று இழைகளும் காணப்பட்டன.

புவி ஈர்ப்பு விசையே இல்லாத விண்வெளியில் சிலந்திகள் வலை பின்னி விஞ்ஞானிகளை வியப்பில் ஆழ்த்தியுள்ளன.

மனித சாதனைகளுக்குச் சற்றும் குறைவுபடாத ஒரு சாதனை என்றே இதைக் கருதலாம்.

# ஐ.தே.க.அரசு அமைக்கப்பட்டதும் சகோதரத்துவ தினம் பிரகடனம்!

## பாற்சோறு விருந்துக்கு ரணில் அழைப்பு

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அமைக்கப்பட்டவுடன் சகல எதிர்க் கட்சிகளையும் அழைத்து பாற்சோறு வழங்கி இந்நாட்டின் புதிய அரசியல் கலாசாரம் ஒன்றுக்கு அடிகோலும் சகோதரத்துவ தினம் ஏற்படுத்தப்படும் என ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் :—

வெவ்வேறு அணிகளாக பிரிந்து ஒருவரை ஒருவர் கொன்றொழிக்கும் அரசியல் கலாசாரத்தை கிராம மட்டத்திலிருந்து வேரோடு இல்லாமல் செய்ய வேண்டும். கிராமங்களில் பிரிந்து நின்று மோதலில் ஈடுபடும் பின்னணி நிலவும் போது முழு நாட்டிலும் சமாதானத்தை ஏற்படுத்துவது முடியாத காரியம். ஆகவே நாங்கள் முதலில் கிராமங்களில் சமாதானத்தை ஏற்படுத்துவது அவசியம். அதனால் தான் நாங்கள் சகோதரத்துவத்தை அறிவிக்கின்றோம். அத்தினத்தில் சகல கட்சிக்காரர்களையும் பாற்சோறு விருந்துக்கு அழைக்குமாறு நான் ஐ.தே.கட்சி மாவட்டத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளேன்.

நாங்கள் அந்த இடத்தில் இருந்து புதிய அரசியல் கலாசாரத்தை ஆரம்பிப்போம். அந்த இடத்திலிருந்து வன்முறை அரசியலை விட்டொழிப்போம். நாட்டின் அபிவிருத்திக்கு கட்சிபேதமின்றி ஒன்று படுவோம். இப்படி ரணில் விக்கிரமசிங்க கூறினார்.



கொழும்பு நகரின் கேந்திர பகுதிகளில் பொதுத் தேர்தல் தினத்தில் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

# கிழக்கில் கூடிய வாக்குகளுடன் தமிழர் பிரதிநிதித்துவம்

அம்பாறை மாவட்டதில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இம்முறை தெரிவான எழுவரில் நால்வர் புது முகங்கள். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசைச் சேர்ந்த பிரதமதேசிய அமைப்பாளர் சட்டத்தரணி எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் இளம் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தமிழர் விடுதலைக் கூட்டணி முதன்மை வேட்பாளர் சந்திர நேரு, பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் தேவாரப் பெரும ஆகிய நால்வமே புது முகங்களாவர்.

நாடாளுமன்றப் பிரதிநிதிகளாக இருந்து போட்டியிட்டோரில் மூவர் வெற்றிபெற நால்வர் தோல்வியடைந்துள்ளனர். வெற்றி பெற்றவர்கள் ஏ.எல். அதாவுல்லா(மு.கா) பேரியல் அஷ்ரப் (பொ.மு) பி.தயாரத்ன (ஐ.தே.க). தோல்வியடைந்தவர்கள் யூ.எல்.எம். மொகைதீன் (பொ.ஐ.மு)கு.சங்கர்(ஈ.பி.டி.பி) பி.கலப்பதி (ஐ.தே.க.) விமலவீரதிஸாநாயக்க (தே. முன்னணி). இதன் படி அம்பாறை மாவட்டத் தமிழர் பிரதிநிதித்துவம் வரலாற்றில் என்றுமில்லாதவாறு கூடிய வாக்குகளுடன் காப்பாற்றப்பட்டுள்ளது. (க)

# அம்பாறை மாவட்டம் மு.கா.வசம்; முஸ்லிம்கள்-4, சிங்களவர்-2, தமிழர்-1

பொதுத்தேர்தல் முடிவுகளின் படி. அம்பாறை மாவட்டத்தில் 4 முஸ்லிம் பிரதிநிதிகளும், 2 சிங்களப் பிரதிநிதிகளும் 1 தமிழ்ப்பிரதிநிதியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

முஸ்லிம்கள் சார்பில் ஸ்ரீலங்கா மு.கா.வைச் சேர்ந்த சட்டத்தரணிகளான எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் ஏ.எல்.அதாவுல்லா ஆகியோரும் முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் (பொ.ஐ.முன்னணி)யும் தெரிவாகியுள்ளனர். சிங்களவர் சார்பில் பி.தயாரத்ன (ஐ.தே.க) தேவாரப் பெரும (பொ.ஐ.மு) ஆகியோரும் தமிழர் சார்பாக அரியநாயகம் சந்திரநேருவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மு.கா.வைப் பொறுத்தவரையில் மூன்று தமிழ் பேசும் தேர்தல் தொகுதிகளுக்கும் மூவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அன்வர் இஸ்மாயில் (சம்மாந்துறை) ஹரீஸ் (கல்முனை) அதாவுல்லா (பொத்துவில்). தமிழர் பிரதிநிதித்துவம் வழமையாக பொத்துவில் தேர்தல் தொகுதியிலிருந்தே தெரிவுசெய்யப்படும். இம் முறையும் அதே தொகுதியில் திருக்கோயில் பிரதேசத்திலிருந்து சந்திர நேரு தெரிவாகியுள்ளார். மீதி 2 சிங்களப் பிரதிநிதிகளும் அம்பாறைத் தொகுதியில் தெரிவாகியுள்ளனர். (க)

# மலையக மக்களின் நம்பிக்கையை ஐ.தே.க அரசு நிறைவேற்ற வேண்டும்

## முன்னாள் எம்.பி. கனகராஜ்

அட்டன், டிச.08

''ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரத்தில் நம்பிக்கை வைத்து மலை யக மக்கள் அமோக வெற்றியை ஈட்டிக் கொடுத்துள்ளார்கள். எனவே, அவர்களின் அத்தியாவசியப் பிரச்சினைகளைத் தீர்க்க ஐக்கிய தேசியக் கட்சி அர சாங்கம் உறுதியாகச் செயற்பட வேண்டும்.

இவ்வாறு இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் உப தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்:—

''நாட்டில் பரவலாக எழுந்திருந்த யானைச் சின்ன அலையில் மலையக மக்களும் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார்கள். அவர்கள் நம்பிக்கை வைத்து வாக்களித்ததற்குக் கைமாறாக அவர்களின் கல்வி, சுகாதாரம், சம்பளம் மற்றும் வீட்டு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களின் இலட்சக் கண்க்கான வாக்குகளைப் பெற்றுக் கொண்டது போல, அவர்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கு மலையக அரசியல் தலைவர்கள் குரல் எழுப்ப வேண்டும்.

கடந்த காலத்தை விட அரசியல் ரீதியில் கூடுதலான அங்கீகாரத்தை மலையக மக்கள் எனக்கு வழங்கியுள்ளார்கள். இந்தத் தேர்தலின் மூலம் நிறையப் படிப்பினைகள் கிடைத்துள்ளன.

எதிர்காலத்தில் எனது அரசியல் நடவடிக்கைகளை இன்னும் தீவிரமாக முன்னெடுத்துச் செல்லவுள்ளேன்'' என்றும் குறிப்பிட்டார். (க)

# மக்களுக்குத் தொடர்ந்து சேவை செய்வேன் -பத்மநாதன்

''தமிழின விடுதலைப் போராட்டத்திற்கு மேலும் அணி சேர்க்குமுகமாக கூட்டமைப்பினூடாக தேர்தலில் போட்டியிட்டோம். எனக்கு அதிகப்படியான வாக்குகளை வழங்கிய பொது மக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு இரண்டாவது அதிகப்படியான வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் கனகசபை பத்மநாதன் எமது நிருபரிடம் தெரிவித்தார். ''அடாவடித்தனத்தையும், வன்முறையையும் எதிர்த்தவர்கள் எனக்கு வாக்களித்தனர். எனது சேவை மக்களுக்குத் தொடர்ந்து கிடைக்கும்'' என்றும் அவர் கூறினார். (க)

# யாழ்.குடாவில் குடும்ப பிணக்குகள் அதிகரிப்பு

யாழ்.குடாநாட்டில் குடும்ப முறிவுகள் மற்றும் சச்சரவுகள் அண்மைக்காலங்களில் பெருமளவில் அதிகரித்து வருவதாக யாழ்.பொலிஸ் நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த இரு மாதங்களில் மட்டும் முப்பதுக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதாகப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவற்றில் பெரும்பாலான முறைப்பாடுகள் திருமணமான சிலகாலங்களில் கணவன் அல்லது மனைவி வேறொரு பெண்ணுடன் அல்லது மனைவி ஆணுடன் தொடர்பு கொண்டுள்ள சம்பவங்கள் தொடர்பானவை.

இந்த முறைப்பாடுகளைப் பதிவு செய்த இளம் பெண்கள் தமது கைக்குழந்தைகள் சகிதம் தினமும் யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு வந்து தமது கணவன்மாரை மீண்டும் தம்முடன் இணைத்து வைக்குமாறு அழுது புலம்புவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவற்றில் சில பிரச்சினைகளில் பொலிஸார் தலையிட்டு உரிய முறையில் நடவடிக்கைகளை எடுக்க முடிந்தாலும் பல பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட முடியாதவையாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

காதலித்துத் திருமணம் புரிபவர்களில் பெரும்பாலானோர் விவாகப் பதிவை மேற்கொள்ளாமல் இருப்பதால் பிரிந்து சென்றவர்களை மீண்டும் இணைத்து வைப்பதில் சட்டப்பிரச்சினைகள் எழுவதாக இம்முறைப்பாடுகளை விசாரித்து வரும் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். (க)


யாழ்ப்பாண மண்ணில்....

2002 புதிய கல்வியாண்டு

புதிய வகுப்புனுள் காலடி எடுத்து வைக்கும் தரம் 9, 10, 11 வகுப்பு மாணவர்களே!

தமிழ் மொழியும் இலக்கியமும்

பாடத்தை இலகுவாக்கும் பாடக் குறிப்புகளைத் தபாலில் பெற்று உங்கள் பெறுபேறுகளில் உயர்வடைய சுய முகவரியிட்ட தபாலுறையுடன் எழுதுங்கள்:—

''ஆசிரியர்''
N.K. KAJAROOBAN
80, Amman Kovil Road.
Pandarikulam, Vavuniya.

உடனடித் தொடர்பு கஜருக்கே முன்னுரிமை

☎ 024-23644


# மக்களுக்கு ஏற்படுத்திய பாதிப்பே ஐ.தே.க வெற்றிக்குக் காரணம்

## அமைச்சர் பௌஸி குற்றச்சாட்டு

ஐக்கிய தேசியக்கட்சிக்கு இந்தத் தேர்தலில் எதிர்பாராத வெற்றி கிடைத்துள்ளது. மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள வாழ்க்கை செலவு அதிகரிப்பே இதற்குக் காரணம்— என்று போக்குவரத்து அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்:—

அரசாங்கம் சகஸ்ரபுர வீடமைப்புத் திட்டத்தை ஏற்படுத்தியது. ஆனால் அது சரியான முறையில் அமைக்கப்படவில்லை. மேல் மாடிகளை அநேகர் விரும்பவில்லை.

அது போன்ற வீடுகளை அமைப்பதிலும் பார்க்க புற நகர்ப் பகுதிகளில் உகந்த இடத்தில் வீடுகளை அமைத்திருந்தால் மக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்காது. அத்துடன் மக்கள் கஷ்டப்பட்டு உழைத்துக் கட்டிய வீடுகளை உடைத்து அதற்குப் பதிலாக சகஸ்ரபுர வீடமைப்பு திட்டத்தில் வீடு வழங்குவதாகக் கூறியதும் கொழும்பு மாவட்ட வாக்குகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

அவ்வீடுகளுக்குச் சுண்ணாம்பு கூட அடித்திருக்கவில்லை. அவற்றைக் காசு கொடுத்து வாங்குமாறு கூறப்பட்டது. அன்றாடம் வியாபாரம் செய்து வந்த பாதையோர வியாபாரிகளின் கடைகளும் உடைக்கப்பட்டன. இவைகளை நானும் எதிர்த்தேன், ஆனால் மக்கள் இறைவனிடம் முறையிட்டனர் என ஏ.எச்.எம்.பௌஸி கூறினார். (க)


O/L, தரம்-9, 10 மாணவர்களுக்கான
தமிழ் மொழியும் இலக்கியமும்
புதிய பாடத்திட்டம் (கட்டாயமானது)
ஆசிரியர்:
N.K. கஜரூபன்
S.T.ANTHONY'S
M.S.C.-II P.S.C
2002ல்
புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன
வவுனியா
மேலதிக தொடர்புகட்கு : 024-23644



என்டெனா பொருத்துதல்




Get it Installed by professionals

TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656.(TEL/FAX)
E-mail : telecave@eureka.lk



அவசர திருத்தங்கள்




Guaranteed repair & service by trained technicians

TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656.(TEL/FAX)
E-mail : telecave@eureka.lk

சுடர் ஒளி
டிசம்பர் 09, 2001
36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 074- 513112 - 5
E-mail: sudar@uthayan.com

## பொதுத் தேர்தல் உணர்த்தும் உண்மை

இலங்கைக்கு சுதந்திரம் வேண்டும் என்று இலங்கைத் தேசியத் தலைவர்கள் குரல் கொடுத்தபோது, ஜனநாயகம் பற்றித் தெரிந்து கொள்ளும் பக்குவம் இலங்கை மக்களுக்கு இன்னமும் வரவில்லை என்று பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் தெரிவித்தார்களாம்.

எங்களுக்கா ஜனநாயகத்தின் மதிப்புத் தெரியாது? நீங்கள் உங்கள் ஆதிக்கத்தை இங்கு தொடர்ந்து வைத்திருக்கவே இப்படிச் சொல்கிறீர்கள் என்று இலங்கைத் தலைவர்கள் கோபம் கொண்டார்கள்.

இலங்கை சுதந்திரமடைந்தபின் இங்கு ஜனநாயகம் படும்பாடுபற்றி வெள்ளையர்கள் இன்னும் வாய்திறந்து சிரிக்கவில்லை என்று சொல்லலாம்.

இதுவரை ஜனநாயக உரிமை என்றால் அது பெரும்பான்மைச் சமூகத்தவருக்கே உரியது. சிறுபான்மையினர் அதற்கு உரிமை கொண்டாட முடியாது என்று பெரும்பான்மைச் சமூகத்தவர் கூறிவந்தனர்.

பொதுத் தேர்தல்களில் பெருபான்மைச் சமூகங்களின் அரசியல் கட்சிகளுக்கு மக்கள் வழங்கும் ஆணைகளுக்கே மதிப்பளிக்கப் படும்; அவற்றை நிறைவேற்றுவதற்கே ஜன நாயகத்தில் உரிமை இருக்கிறதென்பது அவர்களின் விளக்கம்.

சிறுபான்மைத் தேசிய இனம் தனது பிரதிநிதிகளுக்கு வழங்கும் ஆணைகளை நிராகரிப்பதற்கு பெரும்பான்மை சமுகத்துக்கு உரிமை இருப்பதுதான் ஜனநாயகம் என்று பெரும்பான்மை சமுக அரசியல் வாதிகள் கருதிவந்தனர்.

பெரும்பான்மைச் சமூகத்துக்குள்ள வாக்குரிமை தான் ஜனநாயகம் என்பது அவர்களது கருத்து!

இப்பொழுது வன்செயல்களும் ஜனநாயக உரிமை என்று சிலர் நினைத்துக் கொள்கின்றனர் என்று தோன்றுகின்றது.

தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் நாட்டின் தலைவியான இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவே "அடிக்கு அடி; வெட்டுக்கு வெட்டு". என்று பேசியிருக்கிறாரென்றால் இதுவும் ஜனநாயக முறை என்று மக்கள் கருதுவதில் என்ன தவறு?

இலங்கையில் இதுவரை நடந்த பொதுத் தேர்தல் எதிலும் நடைபெறாதவகையில் இம் முறை, தீவைப்பு, குண்டு வீச்சு, வாள்வெட்டு, துப்பாக்கிச் சூடு, கல்வீச்சு சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆயிரத்து 500க்கு மேற்பட்ட முறைப்பாடுகள் காவல் துறையினரிடம் பதியப்பட்டிருக்கின்றன.

காவல்துறையில் பதியப்படாத சம்பவங்கள் இன்னும் பல இருக்கலாம். இவற்றுக்கெல்லாம் உச்சக் கட்டமாக தேர்தல் வாக்களிப்புத் தினத்தன்று வாக்குப் பெட்டிகள் இடைநடுவில் கைமாறி விடக் கூடாது என்பதைக் கண்காணிப்பதற்காக ஒரு மோட்டார்வானில் பின் தொடர்ந்து சென்ற இளைஞர்கள் மோட்டார் வானுக்குள்ளேயே வைத்துச்சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

ஜனநாயக முறையில் ஆட்சியை அமைப்பதற்காக மக்களுக்கு ஜனநாயகத்தில் வழங்கப்பட்டுள்ள வாக்குரிமையை அமைதியான முறையில் பயன்படுத்தி பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய இத் தேர்தல் நடைபெறுகிறது.

எப்படியும் தேர்தலில் வெற்றிபெற வேண்டுமென்பதற்காக ஜனநாயகம் வழங்கிய பேச்சுரிமையை இனத்துவேஷத் தைக் கிளப்பப் பயன்படுத்தி சமூகங்களுக் கிடையில் மோதலை ஏற்படுத்தி வன் செயல்களைப் பரப்பி அமைதியின்மையை உருவாக்கி தவறான வழிகளில் ஜனநாயக உரிமைகளைத் துஷ்பிரயோகம் செய்ய முனைந்தால் மக்கள் அமைதியாகத் தங்கள் தீர்ப்பை வழங்குவார்களா? இதை இத்தேர்தல் முடிவு உணர்த்தியிருக்கிறது.

ஜனநாயகம் நல்லதைத்தான் சொல்கிறது. செய்கிறது. அதைத் தவறான வழியில் பயன்படுத்துவதுதான் கேடு.

இந்தப் பொதுத் தேர்தல் முடிவு இனத்துவேஷத்துக்கு இடமில்லை என்பதையும் போர் வேண்டாமென்பதையும் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு அமைதியான தீர்வு வேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டியிருக்கிறது.

இதுவே ஜனநாயகவழி; இனிஇதைத்தொடர வேண்டியவர்கள் புதிய ஆட்சியாளர்கள் செய்வார்களா? பார்ப்போம்!

# இலங்கை எதிர்நோக்கும் புதிய அரசியல் சிக்கல்

## ஜனாதிபதி ஒரு கட்சி பிரதமர் மற்றொரு கட்சி

இலங்கையின் பன்னிரண்டாவது நாடாளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் காடைத்தனம், வன் செயல்கள், கள்ள வாக்குகள், மோசடிகள் ஆகியவற்றுக்கு மத்தியில் நடந்தாலும் தேர்தல் ஆணையாளர் இத்தேர்தலை முடிந்தவரை நேர்மையாக நடத்தியிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும்.

இதனால் தான் அரசாங்கத்தின் மீதுள்ள வெறுப்பை நாட்டு மக்கள் இந்த அளவுக்காவது எடுத்துக் காட்ட முடிந்திருக்கிறது.

இன்னும் நான்கு ஆண்டுகளுக்கு நாட்டின் அதி உயர் பதவியான நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகச் செயற்படவிருக்கும் சந்திரிகா குமாரதுங்க, தாம் நாட்டு மக்கள் அனைவருக்கும் தலைவி என்பதை மறந்து ஒரு கட்சியின் தலைவியாகவும் ஒரு பிரிவு மக்களின் தலைவியாகவும் நடந்து கொண்டார்.

### புலி, யானை, நரிக் கூட்டு

தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் ஒரு சாதாரண அரசியல்வாதியாகவே ஜனாதிபதி நடந்து கொண்டிருந்தார்.

புலி, யானை, நரிக் கூட்டு என்றும் நாடாளுமன்றத்துக்கு யானையின் துணையுடன் புலிகள் வரப்போகிறார்கள் என்றும் நாடாளுமன்றத்தைப் புலிகள் உடைத் தெறிந்துவிடுவார்களென்றும் ஜனாதிபதி சந்திரிக்கா தமது தேர்தல் பிரசாரத்தின் போது கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தேர்தலில் வெற்றி பெற்று பிரதம மந்திரியாக வந்தால் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தான் இலங்கையின் அடுத்த ஜனாதிபதி என்றும் கூட ஜனாதிபதி சந்திரிகா தேர்தல் பிரசாரத்தின் போது எடுத்துக் கூறியிருந்தார்.

ஜனாதிபதியே இவ்வாறு பேசியபோது பிரதமர் இரத்னசிறிவிக்கிரம நாயக்கா பற்றிச் சொல்லவே தேவையில்லை.

கடந்த ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் விடுதலைப் புலிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமுள்ள உறவு பற்றி பிரதமர் மேடை மேடையாகக் கர்ஜித்தார். இதன்பின் போர்க்களத்தில் புலிகளுடன் போர் புரிந்து வெற்றி பெறுவதற்கு பத்தாயிரம் இளைஞர்களைத் திரட்டுவதற்கு கதிர்காமத்திலிருந்து கிராமம் கிராமமாக யாத்திரை சென்றார்.

### புலி எதிர்ப்புப் பிரசாரம்

புலிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமுள்ள இரகசிய உறவுபற்றிக் கடந்த தேர்தலிலும் ஜனாதிபதி சந்திரிகாவும் பிரசாரம் செய்தார்.

கடந்த தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் இரத்ன சிறிவிக்கிரம நாயகா மற்றும் ஆளும் கட்சியினர் ஆகியோரின் புலி எதிர்ப்புப் பிரசாரம் தமிழர் எதிர்ப்புப் பிரசாரமாகி இனத்துவேஷமாக மாறிய போதும் மக்கள் அதற்கு அதிகம் செவி மடுக்கவில்லை. கடந்த தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகாவின் பொது ஜன ஐக்கிய முன்னணி ஒரேயொரு அதிகப்படியான வாக்கையே பெறமுடிந்தது.

கடந்த தேர்தலில் கிடைத்த இந்தப் படிப்பினையை உணர்ந்து கொள்வதற்கு அதிகார ஆணவம் ஜனாதிபதிக்குத் தடையாக இருந்தது. இதன் விளைவை அவர் இந்தத் தேர்தலில் அனுபவித்திருக்கிறார்.

பன்னிரெண்டாவது நாடாளுமன்றத்துக்காக இம்முறை நடந்த பொதுத் தேர்தல் புதியதொரு திருப்பு முனையை இலங்கை அரசியலில் ஏற்படுத்தியிருக்கிறது.

1956 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் சந்திரிகாவின் தகப்பனார் எஸ். டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயகா முதல் தடவையாக சிங்களம் மட்டுமே நாட்டின் உத்தியோக மொழி என்று மொழி வெறியையும் இனவெறியையும் கிளப்பி விட்டுத் தேர்தலில் அமோக வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தார்.

1956 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் முடிவுகள் இரவிரவாக வானொலியில் அறிவிக்கப்பட்ட போது கொழும்பு மத்திய தொகுதியில் எம். எஸ். தேமிஸ் வெற்றியீட்டிதுடன் தொங்கிய வெற்றி முடிவுகள் அடுத்தடுத்து தொடர்ந்து வெற்றி முடிவுகளாக அறிவிக்கப்பட்டன. இவற்றைக் கேட்டதும் மக்களும் பட்டாசுகள் கொளுத்தி வரவேற்றனர்.

### இனத்துவேஷ வளர்ச்சி

1956 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் ஆரம்பமான மொழி, இனவெறியாக மாறி நாட்டில் இரு இனங்களுக்கிடையிலும் பெரிய முரண்பாடுகளைத் தோற்றுவித்து இனப்பிரச்சினையை இன்றுவரை அவலநிலைக்குக் கொண்டு வந்து விட்டது.

1956 ஆம் ஆண்டின் பின் 1960 ஆம் ஆண்டு மார்ச் பொதுத் தேர்தலிலும் ஜூலை மாதப் பொதுத் தேர்தலிலும் நாட்டைப் பிரித்துத் தமிழரசுக் கட்சிக்குக் கொடுக்கப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஒன்றின் மீது ஒன்று குற்றம் சுமத்தி இனத்துவேஷத்தைத் தூண்டி விட்டன. 1956 ஆம் ஆண்டில் உருவான இனத்துவேஷம் 1960 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல்களில் வளர்ச்சி பெற்றது.

1965 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் சிறிமா பண்டார நாயகா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இனத்துவேஷத்தைக் கிளப்ப முயன்ற போதும் டட்லி தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி இதற்குப் போட்டியாக இனவெறிப் பிரசாரத்தில் ஈடுபடவில்லை. இந்தப் பன்னிரெண்டாவது பொதுத் தேர்தலில் சந்திரிக்காவின் இனவெறிப் பிரசாரத்துக்கு ரணில் விக்கிரமசிங்க பதிலுக்கு இனவெறியைத் தூண்டும் பிரசாரத்தில் இறங்காதது போலவே டட்லியும் அப்பொழுது தேர்தல் பிரசாரத்தை அடக்கி வாசித்தார்.

### உச்சக்கட்டம்

1965 ஆம் ஆண்டுத் தேர்தலின் பின் டட்லி தமிழ் அரசுக் கட்சியையும் மற்றும் பல கட்சிகளையும் சேர்த்து தேசிய அரசை அமைத்தார். இனவெறியர்களுடன் கூட்டுச் சேர்ந்த இடதுசாரிகளும் ஆளும் கட்சிக்குள்ளேயே இருந்த இனவெறியர்களும் நாட்டில் இன ஒற்றுமை ஏற்படவிடவில்லை.

1970 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் இலங்கையைக் குடியரசாக்கும் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு மக்கள் ஆணையைப் பெற்ற சிறிமா, தமிழ் மக்கள் அளித்த ஆணையை உதாசீனம் செய்து இனமுரண்பாடுகள் இனவெறியாக வளர்வதற்கே வழி வகுத்தார்.

1977 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் இனவெறி உச்சத்துக்கே சென்றது. தேர்தல் முடிவுகள் முற்று முழுதாக வெளிவருமுன்பே யாழ்ப்பாணத்தில் காவல் துறையினர் ஆரம்பித்த இனக் கலவரம் நாடுமுழுவதிலும் இரத்தக்களரியை ஏற்படுத்தியது.

போர் தொடர்ந்து கொண்டிருப்பதால் நாட்டு மக்கள் அலுத்துப் போய்விட்டனர். போரில் தங்கள் பிள்ளைகளை இழந்த பெற்றோர் மட்டுமல்ல போரினால் வாழ்க்கைச் செலவும் அதிகரித்து மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

எத்தனை நாளைக்கு வீராவேசம் பேசுவது? புலிகளை அழித்து ஒழிப்போம் என்று சூளுரைப்பது? இதை எத்தனை காலத்துக்கு மக்கள் பொறுத்துக் கொண்டிருப்பார்கள்?

நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும், நிம்மதியாக வாழ்க்கை வேண்டும். இதற்கு இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்பது தான் இத் தேர்தல் மூலம் நாட்டு மக்கள் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணம் தவிர்ந்த மக்கள் அளித்துள்ள முடிவு.

### நிரந்தர சமாதானம்

வடக்கு கிழக்கு மாகாண மக்களும் பேச்சுவார்த்தை மூலம் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர சமாதானத் தீர்வுகாண வேண்டும்மென்றே விரும்புகின்றனர். இந்தத் தீர்வுக்கு விடுதலைப் புலிகள் தான் தமிழ் மக்களின் விடிவிற்காக போராடுகின்றனர். அவர்களே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள். அவர்களுடனே பேச்சு நடத்தி முடிவு காண வேண்டும் என்று வடக்கு கிழக்கு மக்கள் தேர்தல் மூலம் தெளிவாகத் தெரிந்துள்ளனர்.

ஜனாதிபதியுடன் ஒத்துழைக்கத் தாம் தயாராக இருப்பதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவராகவும் பிரதமர் வேறு ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவராகவும் இருக்கும் நிலை இலங்கையில் இப்பொழுதுதான் ஏற்பட்டுள்ளது. பிரான்சில் ஜனாதிபதி மித்தரோன் ஒரு கட்சியையும் ஆளும் கட்சி வேறொன்றாகவும் இருந்து நாடு நல்லமுறையில் நிர்வகிக்கப்பட்டிருக்கின்றது.

அமெரிக்காவிலும் இதே வேறுபாடு பலதடவைகள் இடம்பெற்றிருக்கின்றன. நாட்டின் அமைதியையும் முன்னேற்றத் தையும் கருத்தில் கொண்டு இருதரப்பும் ஒத்துழைத்தால் இருவேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் சிறப்பாக நாட்டை நிர்வகிக்க முடியும். இனப்பிரச்சினைக்கும் நிரந்தரத் தீர்வு காண முடியும்.

## இனவாதம் பேசிய கட்சிகளால் வெற்றி பெற முடியவில்லை

### செங்கொடிச் சங்கச் செயலாளர்

"நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதற்காகவே தமிழ் மக்களும், சிங்கள மக்களும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்துள்ளார் கள் எனச் செங்கோடிச் சங்கப் பொதுச் செயலாளர் ஓ.ஏ.இராமையா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது :—

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் இரகசிய ஒப்பந்தம் உள்ளதாக அரசாங்கம் பிரசாரம் செய்துவந்தது. ஆனால், மக்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. நாட்டில் உண்மையான சமாதானம் ஏற்படவேண்டு மென்பதற்காகவே தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியை நாட்டு மக்கள் ஆதரித்துள்ளார்கள்.

தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் வாழ்கின்ற பிரதேசங்களில் மாத்திரமன் றிச் சிங்கள மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களிலும் ஐக்கிய தேசிய முன்ன ணிக்கு அமோக ஆதரவு கிடைத்துள்ளது. இனவாதப் பிரசாரம் செய்த பெரும் பான்மைக் கட்சிகளும் தோற்கடிக்கப் பட்டுள்ளன. மக்களின் எதிர்பார்ப்புக் கேற்ப நாட்டில் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நாட்டில் புரையோடிப் போயுள்ள யுத்தத்தை நிறுத்திச்சமாதானத்தை ஏற்படுத்த ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் இணைந்து செயற்பட வேண்டும்" — இப்படி அந்த அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க)

# புத்தகப் பூச்சிகளாய் பிள்ளைகளை வளர்ப்பதனால் இனிப் பயன் இல்லை

## மூலைக்கு மூலை கொம்பியூட்டர் வந்துவிட்ட காலம்

''எங்கட பிள்ளைகள் கதிரை தேய்க்கிற படிப்புக்குத்தான் ஆசைப்படுகினமே தவிர, நாளைக்கு உழைச்சுத் தங்கட சொந்தக்காலிலை நிற்க உதவுறபடிப்புகளை படிக்கிற மாதிரித்தெரியவில்லை'' அரட்டையை ஆரம்பித்தார் விநாசியர்.

''அது பிள்ளைகளின்ரை பிழையில்லை. பெத்தவையும்,கல்வி வழிகாட்டிகளும் விடுற பிழை. பாவம் பிள்ளைகள் என்ன செய்யிறது?''வாஞ்சையுடன் சொன்னார் மாஸ்டர்.

''சரியாகச் சொன்னியள் மாஸ்டர் தங்கட மகனோ மகளோ, டொக்டர்,இஞ்சினியர், அதைவிட்டா பள்ளிக் கூடத்திலோ, அலுவலகத்திலோ அழுக்குப்படாமல் வேலை பார்க்க வேணும் என்றுதானே,பெத்தவை நினைக்கினம். அப்படி அவையின்ரை ஆசையைப் பூர்த்தி செய்ய முடியாத பிள்ளைகள்.அதுக்குப் பிறகு என்ன செய்வினம் என்று ஒருத்தரும் நினைச்சுப் பார்க் கிறதில்லை''சமூகத்தைப் படம் பிடித்தான் டானியல்.

''இப்ப கொம்பியூட்டர் படிப்புக்குத்தான் நல்ல மார்க்கெட் ஆனால் அதிலை என்னத்தை எவர் படிக்கிறது என்று வழிகாட்டக்கூட ஆளில்லாமல் திக்கு முக்காடுதுகள்''பார்த்ததைச் சொன்னான் லோகன்.

''உண்மைதான் தம்பி, இப்ப டைப்ரைட்டர் மாதிரி எல்லா அலுவலகங்களுக்கும் கொம்பியூட்டர் வந்திட்டுது. எங்கடை பிள்ளைகள் கொம்பியூட்டரிலை பெரும்பாலும் பேஜ் மேக்கர், அது இது என்று டைப் அடிக்கிற மொழிகளைத்தான் படிப்பதில் ஆர்வமாக இருக்கினம்.''

''அதில்லை மாஸ்டர். கொம்பியூட்டர் லாங்வேஜ்' என்ற மொழிகளை சொல்லிக் கொடுக்கத் தெரிந்தவைமட்டும் தானே மூலைக்கு மூலை கொம்பியூட்டர் சென்டர்களை திறந்து வைச்சிருக்கி னம். அவையும் தங்களுக்குத் தெரிந்ததைத்தான் பெரிய படிப்பு என்று சொல்ல, பிள்ளைகளும் அதுகளைப் படிக்கினம்'' குறுக்கிட்டான் டானியல்.

''அதுவும் ஒரு வகையிலை உண்மைதான்,ஆனால் கொம்பியூட்டரிலை நாளைய உலகத்துக்குத் தேவையான படிப்புகள் இருக்கு. ஆனால் அதுகளைச் சொல்லித் தர ஆள் பற்றாக்குறை நிலவுகிறது. அதனாலை அப்படிப்பட்ட படிப்புகளை படிக்க செலவு அதிகமாகிறது. இதுக்கு ஒரு வழிசெய்து குறைந்த செலவிலை தொழில் வாய்ப்புகள் அதிகமுள்ள கொம்பியூட்டர் படிப்புகள் பெறுவதற்கு உதவினால் பிள்ளைகளின் எதிர்காலம் நல்லா இருக்கும்'' என்றான் லோகன்.

''கொம்பியூட்டரிலை புத்தகம் அச்சடிக்கிறது மட்டும்தான் இப்ப பெரிய வேலையாக இருக்கு. ஆனால் அதையும் தாண்டி எவ்வளவு தொழில் வாய்ப்புகள் அதிலை இருக்கு. அதைப் பற்றிக் கனபேர் கவலைப்படுறதில்லை. அதிலும் வெளிநாடுகளுக்கு போற எங்கடை பிள்ளைகள் கொம்பியூட்டர் படிச்சனாங்கள் என்று சொன்னால் அங்கை இருக்கிறவை சிரிக்கினமாம், ஏனென்றால் அங்கு படிப்பறிவில்லாத ஆள் ,கொம்பியூட்டரிலை செய்யிறதைத் தான் இங்கிருந்து எங்கட பிள்ளைகள் ஆயிரக்கணக்கிலை செலவழிச்சுப் படிச்சுக் கொண்டு போகினம்.'' வெளிநாட்டு நண்பர் ஒருவர் கூறியதைத் தெரிவித்தார் மாஸ்டர்.

அதெப்படி ,படிப்பறிவில்லாமல் கொம்பியூட்டர் படிக்கேலுமே?''

ஆச்சரியமாகக் கேட்டாள் சின்னாச்சி.

''நீ நினைக்கிற மாதிரி கொம்பியூட்டர் படிக்க , படிப்பறிவு அதிகம் தேவையில்லை என்பதுதான் உண்மை. கொம்பியூட்டர் என்றாலே ஏதோ பெரிய விஷயம் என்று ஒரு மாயையை உருவாக்கி வைச்சிருக்கிறது தான் பிழையான விஷயம். பக்கத்திலை இருக்கிற தமிழ் நாட்டிலை இன்ரர் நெற் பார்க்கிறதுக்கு தனியார் நிலையங்கள் இருக்கு. அங்கு 5ஆம் வகுப்பு 6ஆம் வகுப்பு பிள்ளைகள் எல்லாம் வந்து இன்ரர் நெற்றை தாங்களே பயன்படுத்திப் பார்க்கினம். ஆனால் இங்கு இன்ரர் நெற் பார்க்கிறதே ஏதோ புத்திசாலித்தனமான காரியம் என்று பயப்படுகிறோம்''. நிலைமையை விளக்கினார். மாஸ்டர்.

''கொம்பியூட்டர் படிப்பை விட்டுட்டு வேற எங்கேயோ




போறியள்''கடிவாளம் போட்டார் விநாசியர்.

''அண்ணைதான் கதைக்கேக்கை குழப்புவார். மற்றவை கதைக்கும்போது மட்டும் கவனமாக இருப்பார்'' கூறிச் சிரித்தான் லோகன்.

''இன்ரர்நெற்றிலை இருக்கிற இணையத்தள பக்கங்களை உருவாக்கிக் கொடுப்பவர்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்கு. ஏனென்றால்வெளிநாடுகளிலை ஒரு பெட்டிக் கடைக்குக் கூட தனியான இணையப்பக்கம் இன்ரர் நெற்றிலை இருக்கிற காலம் இது.

''இணையப்பக்கத்தை உருவாக்க கற்பனை வளத்துடன் ,கொம்பியூட்டர் அறிவும் இருந்தால் போதும் கொடிகட்டிப் பறக்கலாம்.

''இதை விட கொம்பியூட்டர் புரோகிராமிங் என்ற கொம்பியூட்டர் கட்டளைகளை உருவாக்கும் திறமை கூட இயல்பாக வருவது என்று இப்ப கூறுகினம். கொம்பியூட்டர்கள் வீட்டுக்கு வீடு வந்தாலும், அதுகளை திருத்திறவை குறைவுதான். இதற்கு அடிப்படைக் கல்வியுடன் அனுபவ அறிவும் அதிகம் உதவுகிறதாம். அதனால் பெரும்பாலும் கொம்பியூட்டர் மொழிகளைப் படிப்பதில்செலவிடுறநேரத்திலை,கொம்பியூட்டர் திருத்தவும்,இணையப் பக்கங்களை உருவாக்கவும், கொம்பியூட்டர் கட்டளைகளைத் தயாரிக்கவும் கொம்பியூட்டரிலை துணிடிசைன்கள்,விளம்பரங்கள் போன்றவற்றை உருவாக்கவும் அனுபவப் பயிற்சியை பெற்றுக் கொண்டு வெளிநாடுகளுக்கு வருவதே நல்லது என்று நண்பர் ஒருவர் சொன்னார்''

மூச்சு வாங்கிக் கொண்டார் மாஸ்டர்

''இந்தப் படிப்புகளை இப்பவும் இங்கு சிலர் படிக் கினம்தான் மாஸ்டர் . ஆனால் யுத்தத்தாலை சீர்குலைந்த வாழ்க்கையிலை எங்கடை பிள்ளைகள் செலவு செய்து படிக்க ஏலுமே?'' கவலையுடன் கேட்டார் விநாசியர்.

''யாராவது முயற்சி எடுக்கத்தான் வேணும் அண்ணை. இப்படியே விட்டுக் கொண்டு போனால் அட்வான்ஸ் லெவல் எடுத்த ஆட்களை விட கொம்பியூட் டர் மொழிபடிக்க ஆட்கள் கூடப் பேர் இருப்பினமே தவிர பிரயோசனம் இருக்காது. உலக அளவிலை எங்கடை பிள்ளைகள் பல ஆண்டுகள் பின்தங்கி விடுவினம். ஆனபடியால் எங்கடை அறிவு ஜீவிகள் அதிகார வர்க்கத் துக்கு வால்பிடிச்சு வயிறு வளர்க்கிறதோடை, எங்கடை பிள்ளைகளின் படிப்பை உலக மட்டத்தில் போட்டி போடக் கூடியதாக வடிவமைச்சு தரவும் வேணும்'' கூறினான் டானியல்

''தங்களை விடக் கெட்டிக்காரர் போட்டியாக வந்து விடக் கூடாது என்பதில் எடுக்கிற கவனத்தை அவை தமிழரின் கல்வித் தரம் உயரும் வகையில் பாடத்திட்டங்களை உருவாக்குவதிலும் காட்டினால் நல்லது''என்றான் லோகன்.

''ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பது போல வெறும் புத்தக அறிவுதான் முக்கியம் என்று எங்கடை சமூகம் நினைக்கிறதை மாற்ற வேணும். இப்ப எல்லா இடங்களிலையும் பழையகால அச்சியந்திரங்களுக்குப் பதிலாக 'ஒவ்செட்' மெஷின்கள் வந்து இறங்கிக் கொண்டிருக்கு. ஆனால் அவற்றை திருத்தத் தெரிந்தவையை விரல் விட்டு எண்ணலாம். இது போல விஞ்ஞான வளர்ச்சி தன் பாட்டுக்கு உயர்ந்து கொண்டே போகுது. ஆனால் நாங்கள் செக்கு மாடுகள் போல புத்தகப் பூச்சிகளாகவே எங்கடை பிள்ளைகளை வளர்த்துக் கொண்டு வருகிறம்.நாளைக்கு இது எங்கட சமுதாயத்தையே ஆட்டம் காணவைக்கப் போகுது'' பயத்தை வெளியிட்டார் மாஸ்டர்.

''இனப் பிரச்சினையை தீர்க்க முடியுதோ இல்லையோ ,எங்கடை அரசியல் வாதிகள் ,தொழில் கல்வித்துறையை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தினால் எதிர்காலத்துக்கு நல்லது.''

''எங்கை உது நடக்கப் போகுது அதையும் அரசு செய்து தரவேண்டும் என்று கோரிக்கை விடுவதோடை அவை நிற்கப் போகினம்'' என்றாள் சின்னாச்சி.

''அது தான் கூடாது, வாக்குப் பெறுவதற்காக அள்ளி எறிகிற அரசுப் பணத்தில் கொஞ்சத்தையாவது, எதிர்காலத்தில் தொழில் வாய்ப்புகள் உள்ள பயிற்சித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு செலவிட்டால் நல்லது''கூறினான் டானியல்.

''தேர்தல் முடிஞ்சு போச்சு. இப்ப நடக்கிற கூத்துக ளுக்குப் பிறகு.அடுத்த தேர்தலுக்குத்தானே அவைக்கு சனத்தின்ரை நினைவு வரும். எங்கடை பிள்ளைகள் குண்டுச்சட்டிக்குள்ளை குதிரையோட்ட வேண்டியது தான் விதி'' விசனித்தபடியே எழுந்தார் மாஸ்டர்.

தேரடி கலைந்தது.

—ஏகலைவன்

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 10.00–10.30 | சாட் ஷோ | ஆனந்தபவன் | ஆலோசனை நேரம் | பில்லர் | இப்படிக்கு நீங்கள் | | |
| 10.30–11.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | | |
| 11.00–11.30 | சின்னத்திரை | சனிதபதனி | புஷ்பாஞ்சலி | சீமான்களே சீமாட்டி.. | இப்படிக்கு தென்றல் | குட்டிச் சுட்டி | காலைக்கதிர் குட்டிச் சுட்டி |
| 11.30–12.00 | தேனிசை சங்கமம் | தேனிசை சங்கமம் | தேனமுது | சப்தஸ்வரங்கள் | திரை இசை | | |
| 12.00–12.30 | பி.பி.ஸி. செய்தி | பி.பி.ஸி. செய்தி | பி.பி.ஸி. செய்தி | பி.பி.ஸி. செய்தி | பி.பி.ஸி. செய்தி | சின்னச் சின்ன ஆசைகள் | |
| 12.30–13.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | | |
| 13.00–13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கென்ட் மெட்னி | சக்தி வீக்கென்ட் மெட்னி |
| | | | | | | | |
| 13.30–14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00–14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30–15.00 | | | | | | | |
| 15.30–16.00 | | | | | | இளையகானம் | ரிலாக்ஸ் |
| 16.00–16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | டைம் |
| 16.30–17.00 | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | செம்பருத்தி | ஜனனி |
| 17.00–17.30 | பூஞ்சோலை | தில்லானாதில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டு | தமிழ் கார்ட்டூன் | இயந்திரப் பறவை | சனிதபதனி |
| 17.30–18.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | தேனிசை சங்கமம் | தேனிசை சங்கமம் |
| 18.00–18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | பெப்ஸி உங்கள்... | தந்திர பூமி | ஆலோசனை நேரம் | இப்படிக்கு நீங்கள் |
| 18.30–19.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | சாட் ஷோ | ஆனந்தபவன் |
| 19.00–19.30 | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | செம்பருத்தி | சப்தஸ்வரம் |
| 19.30–20.00 | சின்னத்திரை | சனிதபதனி | புஷ்பாஞ்சலி | சீமான்களே சீமாட்டி ... | இப்படிக்கு தென்றல் | இளையகானம் | பில்லர் |
| 20.00–20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30–21.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | இயந்திரப்பறவை | ஜன்னல் |

# போதும் போதுமென்றாகுது யாழ் விமானப் பயணம்

## மூட்டை, முடிச்சுக்களுடன் சென்று ஏமாறும் அவலம்

கொழும்பு — யாழ், பயண சேவைக்கு பாதுகாப்பு அமைச்சின் பயண அனுமதியை பெற வேண்டும் என்ற புதுமையான விதிமுறை ஒன்று அமுலில் இருந்து வந்தது. தற்பொழு தும் அது நீக்கப்பட்டுவிட்டது என்ற பெயரில் அமுலில் இருந்து தான் வருகிறது.

விமானத்தில் என்றாலென்ன — கப்பலில் என்றாலென்ன யாழ்ப்பாணம் செல்வதானால் பாதுகாப்பு அமைச்சிடம் விண்ணப்பித்து அதற்கான அனுமதியை பெற வேண் டும்



பயணத்தின் சிரமங்கள் பாலுக்காய் அழும் குழந்தைக்குப் புரியுமா?

என்பதும் அந்த அனுமதியுடன் சென்றாலேயே பயணத்துக்கான டிக் கெட்டுக்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதும் எங்கேயும் எழுதப்படாத சட்ட விதி.

### பாதுகாப்பு அமைச்சின் திடீர் அறிவிப்பு

என்ன நடந்ததோ — ஏது நடந்ததோ தெரியவில்லை. சில வாரங்களுக்கு முன் திடீரென பாதுகாப்பு அமைச்சு கொழும்பிலி ருந்து யாழ்ப்பாணத் துக்கு விமான பயணத் துக்கான பயண அனுமதி நடைமுறையை விலக்கிக் கொள்ளப் போவதாக அறிவித்தது.

இவ்வாறான அறிவித்தல் ஒன்று வெளி யாகப் போவதை முன்னரே அறிந்தோ என் னவோ பல்வேறு அரசியல் வாதிகளும் பாது காப்பு அமைச்சருடனும் ஜனாதிபதியுடனும் படை உயர் அதிகாரிகளுடனும் தாங்கள் பேசித் தான் இந்த அனுமதித் தளர்வை ஏற்படுத்திய தாகத் தம்பட்டம் அடித்துக் கொண்டனர்.

தற்போது பயண அனுமதி முறை நடைமுறையில் இல்லாத நிலையில் யாழ். பயணத்துக்கான விமான டிக் கெட்டுக்களை பம்பலப்பிட்டியிலுள்ள கற்பகம் கட்டடத்தில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதாகவும் இதனால் முன்னைய அலைச் சல் கள் எல்லாம் விலகி விட்டன என்றும் பலரும் பூரித்துப் போயிருக்கிறார்கள்.

அத்துடன் முன்னர் காய்ந்து போய் ஆட்களில்லாமல் ஈஓட்டிக் கொண்டிருந்த ஹெலிடூர்ஸ் நிறுவனம் தற் போது பயண அனுமதி விலக்கப்பட்ட பின்னர் புத்துயிர் பெற்று விசேட சேவைகளை அதிகாலை 5 மணி முதல் நடத்தக் கூடிய அளவுக்கு முன்னேற்றம் கண்டிருக்கிறது.

### காரணம் என்ன?

இவ்வளவுக்கும் பின்னால் பயண அனுமதி நடைமுறை திடீரென விலக் கப்பட்ட காரணமென்ன? கப்பல் பயணத்தை விட விமானப் பயணத் துக்கு பயண அனு மதி கட்டாயம் தேவை என அடித்துச் சொல்லி வந்த பாதுகாப்பு அமைச்சு, திடீ ரென பயண அனுமதியை விலக்கிக் கொண்ட மாயம் என்ன? இவை புரியாத புதிராக இருந்த போது ஆராய களமிறங்கினோம்.

இரத்மலானையில் காலி வீதியில் உள்ள ஒழுங்கை ஒன்றில் மூட்டை முடிச்சுகளுடன் கவலை கவ்விய முகத்துடன் நின்ற ஒருவர் வாய் திறந்தார்.

''முன்பெல்லாம் பொலிஸ் நிலையத்துக்கும் — விமான பயணச்சீட்டு வழங்கப்படும் அலுவலகத்துக்கும் நடையாக நடந்த கஷ்டம் இப்போ இல்லைத் தான்.

''ஆனால் டிக்கெட் வாங்க வென நாம் பம்பலப்பிட்டி கற்பகம் அலுவல கத்துக்குச் சென்றால் அங்கே டிக்கெட்டுடன் ஒரு விண்ணப் படிவம் தருகிறார்கள். அந்த விண் ணப்பத்தை நிரப்பிக் கொடுத்தால் நான்கு நாட்களின் பின் பயணம் செய்யக் கூடியதாக பயண டிக்கெட் ஒன்றைத் தருகிறார்கள்.

''நாங்கள் டிக்கெட் கிடைத்த சந்தோஷத்தில் வீட்டுக்கு வந்து யாழ்ப்பாணத்தில் உள்ள எமது சொந்தங்களுக்காக அப்பிள்— முதல் ஆரஞ்சு வரை அழுகக் கூடிய பொருட்களை எல்லாம் வாங்கிக் கட்டிக் கொண்டு குறிப்பிட்ட பயணத்திகதியில் இரத்மலானை விமான நிலையத் துக்கு வந்தால் ஏமாற்றம் தான்.

''இங்கே பாதிப் பேருக்கும், உங்களுக்கு பயண அனுமதி கிடைக்கவில்லை எனக் கூறி திருப்பி அனுப்பி விடுகிறார்கள். எனக்கும் இப்போது இதுதான் நடந்தது'' என்று பொரிந்து தள்ளினார்.

''பயண அனுமதி முறை நீக்கப்பட்டு விட்டதென்றால் பிறகென்ன பயண அனுமதி கிடைக்கவில்லை என்ற கதை'' என்று எதுவும் புரியாத நிலையில் கேட்டோம்.

எங்களை அருகே இருந்து கவனித்துக் கொண்டிருந்த ஒருவர் மெதுவாக எமது பக்கத்துக்கு வந்தார். அவரது வாயை கிளறினோம். மனதிலே இருந்த வேதனைகளை எல்லாம் சேர்த்து வெம்பி வெடித்தார் அவர்.

''பயண அனுமதி நடைமுறை தளர்த்தப்பட்டதென்பதெல்லாம் வெறும் வியாபாரத் தந்திரம். பயணிகள் இல்லாமல் இருந்த யாழ் — விமான சேவையை இலாபத் தில் நடத்துவதற் காகவே இந்த பம்மாத்து விடப்பட்டிருக்கிறது.

''இந்த புதிய நடவடிக்கையின் படி நாம் கற்பகம் கட்டடத்தில் வைத்து நிரப் பிக் கொடுக்கும் விண்ணப் பம் ஏற்கனவே எந்தெந்த புலனாய்வு பிரிவுக் கெல்லாம் அனுப்பப் பட்டதோ — அங்கெல்லாம் இப்போதும் அனுப் பப்பட்டு வருகிறது.

''அதே போல் அங்கெல்லாம் முன்னர் வாரக் கணக்கில் இழுத்தடித்து பயணிக ளின் பெயர் விவரங்கள் பரிசீலிக்கப் படும். ஆனால் இப்போது உடனேயே பரிசீலனை செய்து அனுப்பும்படி உத்தர விடப்பட்டி ருக்கிறது என்று அறிகிறோம்.

''இதன்படி பழைய நடைமுறைகள் துரிதப்படுத்தப் பட்டிருகின்றனவே தவிர எந்தவித மாற்றங்களோ சலுகைகளோ மேற்கொள்ளப்பட வில்லை'' என்றார்.

இன்னும் சொல்லப்போனால் தற்போதுதான் பயண அனுமதி நடைமுறை வெகுவாக இறுக்கமாக்கப்பட்டிருக்கிறது என்ற குண்டையும் துக்கிப் போட்டார் அவர்.

''முன்னர் பயணத்துக்கு விண்ணப் பித்தால் இரண்டு வாரத்திலிருந்து 45 நாட் களுக்குள்ளான காலப்பகுதியில் எப்படியா வது பயண அனுமதி கிடைத்துவிடும். நாமும் அந்த அனுமதியுடன் டிக்கெட்டை எடுத்துக் கொண்டு துணிவாக பயணத்துக்கான ஆயத்தங்களுடன் செல்லலாம்.

''ஆனால் இப்போது அப்படியல்ல. நாங்கள் மூட்டை முடிச்சுக்களுடன் வானையோ, காரையோ, ஓட்டோவையோ பிடித்துக் கொண்டு உறவினர்களை வழி அனுப்பி வைக்க இரத்மலானைக்குச் சென்றால் அங்கே பயண அனுமதி கிடைக்கவில்லை. டிக்கெட்டுக்கு கொடுத்த பணத்தை திரும்பப் பெற்றுக் கொண்டு வீட்டுக்குப் போங்கள் என்கிறார்கள்.

நான்கு பிள்ளைகளுடன் பய ணம் செய்ய வந்த தந்தைக்கு பயண அனுமதி மறுக்கப்படுகி றது. நான்கு பிள்ளைகளும் யாழ்ப் பாணம் போய் என்ன செய்வது?

இது மட்டுமல்ல தாயும் மகளும் விண் ணப்பிதால் தாய்க்கு அனுமதி கிடைக்காமல் மகளுக்கு மட்டும் கிடைக்கிறது. அல்லது மகளுக்கு அனுமதி கிடைக்காமல் தாய்க்கு மட்டும் கிடைக்கிறது.

### ஹெலிரூர்ஸ் அதிகாரி விளக்கம்

இந்த விவரங்களுடன் பம்பலப்பிட்டியில் உள்ள கற்பகம் கட்டத்தில் இயங்கி வரும் ஹெலி ரூர்ஸ் நிறுவனத்தின் பொறுப்பதி காரியான பிளையிங் ஒவிசர் பிரேமவர் தனவைச் சந்தித்தோம்.

இவ்வாறான சிக்கல்களை எல்லாம் ஆற அமரக் கேட்டுக் கொண்ட அவர் ''எமக்கு கிடைக்கும் விண்ணப்பங்களை டி.ஐ.ஐ எனப்படும் புலனாய்வுப் பிரிவினருக்கு அனுப்புகிறோம். அவர்கள் தான் விண்ணப்பங்களை பரிசீலனை செய்து அனுமதி வழங்குவது பற்றி தீர்மானிக்கிறார் கள். இதில் எமது பங்பளிப்பு எதுவுமில்லை. ஆனால் இதே போன்ற குற்றச் சாட்டுகள் எமக்கு ஏற்கனவே கிடைத்துள்ளன. இதனையடுத்து எம்மால் முடிந்த மாற்று ஏற்பாடு ஒன்றை மேற் கொண்டிருக்கிறோம்.

''அதன்படி பயணம் செய்யும் பயணி தனது பயணத் திகதிக்கு முதல்நாள் 441044 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு — அதன் பின்பு 22540 அல்லது 22402 என்ற பரிவர்த் தனை (Exchange) இணைப்புக்கு தொடர்பு கொண்டால் பயணி யின் பயண அனுமதியை உறுதிப்படுத்திக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுதவிர பயண அனுமதி மறுக்கப்படும் பயணிக்கு அவர் விண்ணப்பத்தில்



காத்திருந்து காத்திருந்து சோர்ந்து போன பயணிகள்

குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு நாமும் கூடுமானவரை பயண அனுமதி மறுக்கப்பட்ட விவரத்தைத் தெரிவித்து வருகிறோம்'' என்றார்.

பயண அனுமதி விலக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்ட பின் இதென்ன புதுகுழப்பம் என்று கேட்டோம். ''பயண அனுமதி விலக்கப் பட்டது என்று கூறமுடியாது. விரைவு படுத்தப்பட்டிருக்கிறது என்றுதான் கூறவேண்டும்'' என்றார் அவர்.

சரி பயண அனுமதி மறுக்கப்படு வோர் இளவயதினராக இருந்தால் ஏற்றுக்கொள்ள லாம். இதென்ன 45, 50, 60 வயதி னருக்கெல் லாம் பயண அனுமதி மறுக்கப்பட்டிருக்கி றதே என்று கேட்ட போது ''அது பற்றி எமக்கு எதுவும் தெரியாது. நாம் விண் ணப்பத்தை அனுப் பிய பின் டி.ஐ.ஐ பிரிவே விண் ணப்பங்களை பரிசீலிக்கின்றது. அவர் களே பின்னர் பயண அனுமதியை மறுத்து கடிதம் அனுப்புகிறார் கள். நான் அறிந்த வரையில் சில பயணிகள் விண் ணப்பத்தில் சரியான விவரங்களைத் தருவதில்லை. பிழையான தரவுகளையே தருகிறார்கள்'' என்றார்.

நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் சிலவற்றையும் அவர் எடுத்துக் காட்டினார். அதில் ஒரு



பயணங்கள் சயனமாகிப் போனதால் தவணை வரும்வரை காத்திருக்கும் மூதாட்டி

விண்ணப்பத்தை குறிப் பிட்டு காட்டிய அவர் ''இதில் பொலிஸ் (வதிவிட) பதிவு இலக்கம் குறிப்பிடப் பட்டுள்ளது. அருகே உள்ள பொலிஸ் நிலையம் என்று குறிப்பிட்ட இடத்தில் புறக்கோட்டை பொலிஸ் என்று குறிப் பிடப்பட்டிருந்தது. அதன் படி புறக் கோட்டை பொலிசில் குறித்த பதிவினை பரிசீலனை செய்ய முற்பட்டால் அங்கு அந்த பெயரே இல்லை என்கிறார்கள். இவ்வாறாக தவறான தகவல்களைத் தருவோருக்கே அனுமதி மறுக்கப்படுகிறது'' என்றார்.

### தொலை பேசியில் தொடர்பு

இவ்வளவு தகவல்களுடன் வந்து எதற்கும் அவர் தந்த தொலைபேசி இலக் கத்துக்கு தொடர்பு கொண்டு பார்ப் போமே என்று இலக்கங்களை சுழற்றினோம்.

தேவைப்படும் பரிவர்த்த னைக்கு மாற்றும்படி அறிவுறுத் தல் வர அவ்வாறே பரிவர்த்த னையை மாற்றினோம்.

ஹெலி ரூர்ஸ் நிறுவனத் துக்கு பொறுப்பானஅதிகாரி அழைப்பிலே வந்தார். அவரிடம் நிலமையை விளக்கி னோம். ''பயணிகளின் கஷ்டங்கள் எமக்கும் புரிகின்றன தான். ஆனால் எம்மால் எதுவும் செய்ய முடி யாது. பயண அனுமதியை வழங்கும் வேலை டி.ஐ.ஐ. யே சாரும்'' என்றார்.

''ஏற்கனவே பல சலுகை களை அறிவித்திருக்கிறோம். காலப் போக்கில் பயணிகளின் நலன் கருதி முடிந்தால் இன்னும் வசதிகளை ஏற்ப டுத்துவோம்'' என்றும் அவர் சொன்னார்.

''ஏற்கனவே நீண்ட காலம் இழு பட்டதை விட இப்போது விரைவில் அனுமதி வழங்குகிறோமே இது நன்மை தானே?'' என்று எங்களிடமே அவர் திருப்பிக் கேட்டார்.

நாமும் பிடிகொடாமல் ''நன்மைதான் ஆனால் முன்னர் பயண அனுமதி கிடைக்காவிட்டால் போகுது என்று விட்டுவிட்டு இருந்து விடுவோம். ஆனால் இப்போது அப்பிளும் ஆரஞ்சும் வாங்கிக் கொண்டு பயணம் புறப்பட்டு திருப்பி விடப்பட்டால் பயணம் தடைப்பட்ட கவ லையைவிட பழங்கள் அநியாயமாக அழுகப்போகின்றனவே என்ற கவலை பெரிதாக இருக்கிறதே'' என்றோம்.

பெரிதாக ஆமா போட்டு அதனை ஏற் றுக்கொண்ட அவர் எங்களால் முடிந் ததை நாம் செய்கிறோம் என்று முடித்தார்.

— குமரன்

ஓயாத அலைகள்

வெளிவராத தகவல்கள்

**8**

# பனைவட்டுக்குள், பற்றை மண்டிய குழிக்குள் ஒளிந்திருந்து உயிர் தப்பிய சிப்பாய்கள்

18ஆம் திகதி அதிகாலை 1.30 மணிக்கு முல்லை முகாம் மீதான அதிரடித் தாக்குதல் ஆரம்பித்து— நான்கு மணி நேரம் கழியும் போது — விடியும் வேளையிலேயே முகாமின் கணிசமான பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டதையும்—

முகாமிலிருந்து தப்பிப் பிழைத்து வெளியேறிய படை அணிகள் இரு குழுக்களாகச் சேர்ந்து நின்று தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் வழி வகையில் ஈடுபட்டிருந்தனர் என்பதையும் முன்னைய தொடரில் பார்த்தோம்.

புலிகளின் அதிரடித் தாக்குதல் திடீரென உக்கிரத்துடன் ஆரம்பித்ததால் முகாமிலிருந்த படை அணி முற்றாக நிலை குலைந்து என்ன செய்வது என்று பதறிய போது—

பல பக்கங்களிலிருந்தும் மழை போல் முகாமுக்குள் தொடர்ந்து வந்து வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் படுகாயமுற்று ஆங்காங்கே விழுந்து கிடந்த படையினரையும், உயிரிழந்த சிப்பாய்களின் சடலங்களையும் அந்தந்த இடங்களிலேயே விட்டுவிட்டு உயிர் பிழைத்த சிப்பாய்கள் சிதறி ஓடினர்.

## மரம் ஏறித் தப்பினர்

எந்தப் பக்கம் ஓடுவது என்று தெரியாமல் நிலை குலைந்த சிப்பாய்களில் — மரம் ஏறத் தெரிந்த சிலர் புத்தியாக முகாமுக்குள் இருந்த சிலபனை மரங்களில் அவசர அவசரமாக ஏறி பனை வட்டுகளுக்குள் தஞ்சம் புகுந்து அங்கு தங்களை மறைத்துக் கொண்டனர். மற்றும் சிலர் முகாம் பகுதிக் குள்ளும் அதை அண்டிய பகுதிக்குள்ளும் — கைவிடப்பட்டு — பற்றை மண்டிக் கிடந்த — பாழும் கிணறு போன்ற — குழிகளுக்குள் புகலிடம் தேடிக் கொண்டனர்.

முல்லைத்தீவு முகாம் புலிகளால் முற்றாகத்துடைத்தழிக்கப்பட்ட போதிலும் —

இவ்வாறு பனை வட்டுக்குள்ளும், பாழும் கிணறுக்குள்ளும் ஒளிந்துக் கொண்ட சில சிப்பாய்கள் புலிகளின் கண்களில் சிக்காமல் அந்த இடங்களி லேயே ஒளிந்திருந்து பின்னர் தப்பினர்.

## தப்பிப் பிழைத்த சிப்பாயின் அனுபவம்

அப்படித் தப்பிப்பிழைத்த சிப்பாய் ஒருவர் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் பின்வருமாறு கூறினார்.

"அதிடிரத் தாக்குதலால் நிலை குலைந்து போன நான் தப்புவதற்கு வேறு வழியின்றி முகாமுக்குள் இருந்த பனை மரத்தில் 'விறு விறு' என ஏறி வட்டுக்குள் ஒளித்துக் கொண்டேன். மழைபோல் ஷெல்கள் கூவிக் கொண்டு முகாமுக்குள் வந்து விழுந்து வெடித்த வண்ணம் இருந் தன. நான் அச்சத்துடன் ஒளித்திருந்தேன்.

"மரத்தின் உச்சியில் நான் இருந்ததால் ஷெல் சிதறல்கள் என்னைப் பாதிக்கவில்லை.

"காலை விடிந்த போது —

முகாமுக்குள் எதிர்ப்பில்லாத நிலை யில் — பல நூற்றுக்கணக்கான புலிகள் சரளமாக நடமாடுவதைக் கண்டேன்.

"அப்போது புலிகளின் தலைவர் ஒருவர் அங்கு வந்தார். அவர் திடீரென உரத்த குரலில் தமிழில் ஏதோ உத்தரவுக ளைப் பிறப்பித்தார். அவ்வளவுதான். நூற்றுக்கணக்கில் பொது மக்கள் எங்கி ருந்து வந்தார்கள் என்று தெரியாத மாதிரி முகாமுக்குள் படையெடுத்து வந்து சேர்ந் தனர். அவர்கள் ஆயுதம் ஏந்திப் போராடும் புலிகள் அல்லர். முகாமில் இருந்த ஆயுதங்களையும், ஏனைய பொருள்க ளையும் அள்ளிச் சென்று வாகனங்களில் ஏற்றும் வேலைகளில் முழு மும்முரமாக ஈடுபட்டனர். ஒரு சில மணி நேரத்தில் முகாமிலிருந்த பொருள்கள் அனைத்தும் துடைத்து வழிக்கப்பட்டு விட்டன"— இவ் வாறு அந்தச் சிப்பாய் கூறியதாக சம்பந்தப் பட்ட செய்தி நிறுவனம் தெரிவித்தது.

## பொது மக்கள் உதவினார்கள்

முல்லைத்தீவுப் படை முகாமிலிருந்த பொருள்கள் மற்றும் ஆயுதங்களை அங்கி ருந்து அகற்றி தமது வன்னித் தளங்களுக்குப் பாதுகாப்பாகக் கொண்டு போய்ச் சேர்ப்பதில் புலிகளுக்கு பக்கபலமாக பொதுமக்களும் இருந்தார்கள் என்பதை சில கொழும்புச் செய்தி நிறுவனங்களும் பகிரங்கப்படுத்தின.

இந்தச் செய்தி நிறுவனங்களும் — ஏன் விடுதலைப் புலிகள் அமைப்பும் கூட— படை யினரிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்கள், இராணுவத் தளவாடங்கள் மற்றும் பொருள் களை முல்லை முகாமிலிருந்து அகற்று வதிலும் மருத்துவ உதவி மற் றும் போருக் கான மற்றைய உதவி வேலைக ளிலும் தமிழ்ப் பொது மக்கள் ஈடுபட்டனர் என்பதை பகிரங்கமாக அறிவிப்பதன் மூலம்—

விடுதலைப் புலிகளின் ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் போராளிகள் மட்டுமல்லாமல் முழுத் தமிழ்ச் சமூகமே இணைந்து கொண்டுவிட்டது என்ற கருத்தை சர்வதேச மட்டத்தில் ஊன்றச் செய்ய முடியும் எனக் கருதியிருக்கக்கூடும்.

## புலிகளுக்கு ஏற்பட்ட நெருக்கடி

ஆனால் இந்த வேலைகளில் பொதுமக்கள் ஈடுபட்டதால் தமக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை மட்டும் புலிகள் பகிரங்கப்படுத்தவில்லை; சம்பந்தப்பட்ட செய்தி நிறுவனங்களும் தெரிந்தோ, தெரியாமலோ அது குறித்து தகவல்களையும் வெளியிடவில்லை.

முல்லை முகாமைத் தாக்குவதற்கான திட்டத்தை புலிகள் கனகச்சிதமாக வகுத்திருந் தார்கள்; கைப்பற்றும் ஆயுதங்களை தமது தளத்துக்குக் கொண்டு செல்வதற்கான ஏற் பாடுகளும் செய்யப்பட்டி ருந்தன; புலிப் போராளிகளுடன் இப்பணியில் ஈடுபடுத் துவதற்கு பல நூற்றுக் கணக்கான பொது மக்களும் ஒழுங்கு செய்யப்பட்டி ருந்தனர்; அவர்களுக்கு உரிய அறிவுறுத்தல் களும், பயிற்சியும் கூட, வழங்கப்பட்டிருந்தன.

ஆனால் அது செயற்படுத்தப்பட்ட போது சரியான கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

## புலிகளின் நிலை

தாக்குதல் ஏற்பாடுகளின் போது இருந்த 'டென்ஷன்'—

இரவு முழுவதும் தாக்குதலில் ஈடுபட்டதால் ஏற்பட்ட களைப்பு—

விடிந்த போது முகாமின் கணிசமான பகுதி தங்கள் கைகளில் வீழ்ந்ததால் வந்த மகிழ்ச்சி—

இந்த வெற்றிக்காக களப் பலியான தமது தோழர்களின் மறைவால் ஏற்பட்ட கவலை—

இவ்வளவு எதிர்பாராத வகையில் பெருமளவு ஆயுதங்கள், இராணுவத்



தளவாடங்கள், முகாம் பொருள்கள், இராணுவ ஆவணங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றியதால் ஏற்பட்ட திகைப்பு.

தங்களின் கட்டுப்பாட்டில் வந்துள்ள முகாம் பகுதியை அரசுப்படைகளின் மீட்பு அணிகள் வந்து மீண்டும் கைப்பற்ற முன்னர் அல்லது விமானக் குண்டு வீச்சு விமானங்கள் வந்து குண்டு வீசி அழிக்க முன்னர் இந்த ஆயுதங்களையும், பொருள்களையும் அங்கிருந்து அவசரமாக எப்படியாவது அகற்றியாக வேண்டும் என்பதால் ஏற்பட்ட மலைப்பு—

இவை போன்ற காரணங்களினால் இந்த விடயத்தில் புலிகளின் துணைத் தளபதிகள் சிலர் அவசரப்பட்டுவிட்டனர் என்றே கூறப்படுகின்றது.

இது தவிரப் போரில் களப்பலியான புலிகளின் சடலங்களையும், உயிரிழந்த படையினரின் சடலங்களையும் கூட பாதுகாப்பாக—

தகுந்த மரியாதையோடு—

முகாம் பகுதிகளிலிருந்து அவசர அவசரமாக அகற்ற வேண்டிய தேவையும் புலிகளுக்கு இருந்தது.

இந்த அவசரங்கள் கருதி உதவிக்கு தாங்கள் ஏற்கனவே ஏற்பாடு செய்து வைத்திருந்த ஆட்களுக்கு மேலதிகமாக — சில மைல் தொலைவுகளில் இருந்த கிராம வாசிகள், பொதுமக்களையும் இப்பணிக்கு அவசரமாக அழைத்து வந்தனர் புலிகள்.

## விடுப்புப் பார்க்கவும் சிலர் வந்தனர்

இத்தகைய யுத்தகளப் பின்னணியில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று சரியாக முன்னரே அறிவுறுத்தப்படாத இத்தகைய பொதுமக்கள்—

அவர்களில் அநேகமானோர் 'முல்லைத் தீவு முகாம் புலிகளின் கைகளில் வீழ்ந்து விட்டதாம்! விடுப்புப் பார்ப்போம்!!" என்ற எண்ணத்துடன் புலிகளின் வாகனங்கள், மினிபஸ்களில் தொற்றிக் கொண்டவர்கள்—

முகாமுக்குள் நூற்றுக்கணக்கில் கொண்டு வந்து இறக்கப்பட்டால் நிலைமையைச் சொல்லவும் வேண்டுமா?

## எரியும் வீட்டில் பிடுங்குபவர்கள்

யாழ். குடாநாட்டின் பெரும்பகுதி அரச படைகளிடம் வீழ்வதற்கு முன்னர், அங்கு அடிக்கடி விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம் பெறுவது வழமை. குண்டு வீசிய விமானங்கள் வானத்தில் எழுந்து மறைவதற்குள், குண்டு வீச்சுக்கு இலக்கான பகுதிக்கு விடுப்புப் பார்க்க விரையும் நம்மவர்கள் சிலர் — காயமுற்றவர் களை அவசர அவசரமாக ஆஸ்பத்திரிக்கு அனுப்பும் வேலை ஆரம்பிப்பதற்கு முன்னரே — 'எரிகின்ற வீட்டில் பிடுங்கியது லாபம்' என்ற கணக்கில் குண்டு வீச்சால் சேதமுற்ற வீடுகள், பொது இடங்களிலிருந்து பொருள்களைச் சுருட்டிச் செல்வதில் தீவிரமாக இருப்பது எமக்குத் தெரியும்.

அதுவும் யாழ். குடாநாட்டிலிருந்து கையில் அகப்பட்ட பொருள்களுடன் வன்னிக்கு இடம் பெயர்ந்து, காடுகள், வயல்கள், குடியேற்றங்கள் போன்ற பகுதிகளில் குடியமர்த்தப்பட்டு, வேலை, தொழில், ஊதியம் இன்றி பெரும் கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டு அடிப்படை வசதிகள் இன்றித் தவித்துக் கொண்டிருந்த மக்களை போதிய அறிவுறுத்தல் இன்றி இத்தகைய இடங்களில் 'பொது வேலையில்' ஈடுபடுத்திக் கொண்டு போய் இறக்கினால் என்ன நடக்கும்?

## ஆயுதங்கள் அபேஸ்

தமது தாக்குதல் நடவடிக்கையைத் தொடர்வதிலும்—

தப்பிப் பிழைத்த படைகளைத் தேடி அழிப்பதிலும்—

கைப்பற்றிய முகாமை மீட்பதற்கு வரக்கூடிய அரசுத் துருப்புகளின் மீட்பு அணிகளைத் தடுத்து நிறுத்துவதிலும்—

விடுதலைப்புலிக் போராளிகள் தீவிரமாக இருக்கும் போது — இத்தகைய யுத்த உதவி வேலைகளில் ஈடுபடுத்தப்பட்ட பல நூற்றுக்கணக்கான பொதுமக்களின் நடவடிக்கைகளை சரியாகக் கண்காணிக்க முடியாமல் போயிற்று.

விளைவு? களத்தில் இறங்கியவர்களில் கணிசமானோர் முகாமிலிருந்த பொருள்களில் ஒரு பகுதியைச் சுருட்டிக் கொண்டனர். வெறும் பொருள்களைச் சுருட்டிக் கொண்டால் அது குறித்து அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

ஆனால் முகாமிலிருந்த சிறு ரக ஆயு தங்கள், கிரனேட்டுக்கள், பிஸ்டல் கள் போன்றவை — இவ்வாறு பொதுமக்க ளினால் 'அபேஸ்' செய்யப்பட்டு, கொண்டு செல்லப்பட்டுவிட்டன.

முல்லைத்தீவு முகாமைத் துடைத் தெறியும் நடவடிக்கையில் ஈடுபட்டி ருந்த புலிகள் அப்போது இது குறித்து அதிகம் கவலைப்படவில்லை.

ஆனால் ஓரிரண்டு நாள்கள் கழிந்த பின்னர்தான் கிடைத்த உளவுத் தகவல்கள் நிலைமையின் விபரீதத்தை புலிகளின் தலைமைப் பீடத்துக்கு உணர்த்தின.

## பொதுமக்களின் கைகளில் ஆயுதங்கள் இருந்தால்...

காட்டுக்குள் திக்குத திக்காக இருக்கும் பொது மக்கள் வசம் கணிசமான அளவு ஆயுதங்கள் சிக்கிக் கொண்டு விட்டதால் அதன் விளைவு ஆபத்தானதாக இருக்கும்.

தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத் தைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பதில் அது நெருக்கடியை ஏற்படுத்தும். ஏன் தமது போராளிகளின் பாதுகாப் பைக் கூட அது கேள்விக் குறியாக்கிவிடும் என்பதை உணர்ந்த புலிகள், பொதுமக்கள் அல்லது விடுப்புப் பார்க்க வந்தவர்கள் அள்ளிச் சென்ற ஆயுதங்களை மீட்பதற்காக பகிரங்க அறிவிப்புகளை விடுத்தனர். முல்லை முகாமை அண்டிய பிரதேசங்களில் இருந்த கிராமங்களுக்கு ஒலிபெருக்கிகள் பூட்டப்பட்ட வாகனங்களில் சென்ற புலிகள் அங்கு பகிரங்க அறிவிப்புகளை விடுத்தனர்.

(தொடரும்)

## "ஓயாத அலைகள்" பெயர்ப் பொருத்தம்

முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதல் நடவடிக்கைக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் "ஓயாத அலைகள்" என்ற பெயர் சூட்டியிருந்தார். கடலலைகள் ஓய்வதில்லை; தொடர்ந்து கொண்டே இருக்கும். அது போல முல்லைத்தீவு முகாம் முற்றாக விழும் வரை தமது தாக்குதல் ஓயாமல் தொடரும் என எண்ணித்தான் அந்தப் பெயரை அவர் சூட்டினாரோ என்னவோ!

ஆனால் முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதல் பற்றிய தகவலை கொழும்பில் வெளியிட்ட படையதிகாரிகள் புலிகளின் தாக்குதல்களுக்கு முகாமிலிருந்த படையினர் முகங்கொடுக்க முடியாமல் போனதை நியாயப்படுத்துவதற்காக— "தாக்குதலுக்கு வரும் புலிகள் விழ, விழ புதிது புதிதாக புலிகள் திரண்டு வந்து முகாமைத் தொடர்ந்து தாக்கிய வண்ணம் இருந்தனர். மனித அலை போல் புலிகள் தொடர்ந்து வந்து தாக்கியதால் முகாம் படையினர் நெருக்கடிக்கு உள்ளாகினர்" என்ற சாரப்பட செய்தியாளர்களிடம் விளக்கம் கூறினார்.

புலிகளின் தலைவரின் இந்தத் தாக்குதல் யுக்தியை "மனித அலை தாக்குதல் தந்திரோபாயம்" என்றும் அவர்கள் வர்ணித்தனர்.

தனது போராளிகளின் உயிர்களைப் பற்றிச் சிந்திக்காமல், முகாமை வீழ்த்துவதற்காக கண்ணை மூடிக்கொண்டு அவர்களை புலிகளின் தலைவர் பலிகொடுத்தார் என்ற தொனியில் படை அதிகாரிகளின் விளக்கம் அமைந்திருந்த போதிலும் — அலை அலையாகப் புலிகள் எழுந்து வந்து தாக்கியதை ஒப்புக் கொண்டதன் மூலம் அத்தாக்குதல் நடவடிக்கைக்கு 'ஓயாத அலைகள்' என பிரபாகரன் பெயர் சூட்டியது சரியானதே என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

# நத்தார் தாத்தாக்கள் அமைதியாக இருக்கட்டும்




டிசம்பர் மாதம் என்றால் நத்தார் தாத்தாக்களின் நடமாட்டம் உலகில் அதிகரித்து விடும். மேல் நாடுகளிலுள்ள அங்காடிகளில் வாடிக்கையாளர்களைக் கவருவதற்காக நத்தார் தாத்தா பொம்மைகளை வைத்து விடுவார்கள். நியூஸிலாந்திலுள்ள "வெஸ்ட்டாப்" நிறுவனம் ஆறு பேரை வேலைக்கு அமர்த்தி அவர்களுக்கு நத்தார் தாத்தா உடைகளை அணியச் செய்திருக்கிறது. அதே நேரத்தில் அவர்களுக்கு ஒரு உத்தரவும் பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. நத்தார் தாத்தாக்கள் "ஹோ ஹோ ஹோ" என்று சத்தமிட்டு சிரிக்கக் கூடாது. குழந்தைகள் அஞ்சி விடுவார்கள் என்று எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது.



# மீன் தின்னும் பறவைகளை விரட்டியடிக்க ஒரு கருவி

குளத்தில் மீன்கள் அதிகரித்தால் பறவைகள் வட்டமிடும் என்பார்கள். ஆனால் வட்டமிடும் பறவைகள் மீன்களை அப்படியே கபளீகரம் செய்து விட்டால் மனிதன் என்ன செய்வான்? எனவே நீர் நிலைகளை நோக்கிப் படையெடுக்கும் பறவைகளை விரட்டியடிக்க வேண்டியிருக்கிறது. வெடிகளை அதிரவைத்தும் துப்பாக்கியால் சுட்டும் பறவைகளை விரட்டுவது உயிர்க் கொலை என்று உயிரியல் வல்லுநர்கள் கண்டனம் தெரிவிக்கிறார்கள். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நவீன விஞ்ஞான முறையில் தீர்வு காணப் பட்டிருக்கிறது. பறவைகளை அச்சுறுத்தும் ஒலி– ஒளிகளை ஏற்படுத்தும் ரோபோ படகுகளை ஆற்றில் மிதக்க விடுகிறார்கள். பறவைகள் பறந்து சென்று விடுகின்றன.

# பனி மீது சறுக்கினாலும் நிதானம் தவறுவதில்லை!



பனிமலை மீது ஏறிச் சறுக்குவது மேல்நாட்டவர்களின் வீர விளையாட்டு. அரங்குகளில் பனித்தரையை அமைத்து அதன் மீது சறுக்கி நடனமாடுவது ஜிம்னாஸ்டிக் விளையாட்டு ஆகும். ரஷ்யாவிலுள்ள சென். பீட்டர்ஸ் பர்க் நகரில் நடந்த பனிச்சறுக்கல் கிராண்ட் பிரி போட்டியில் கலந்து கொண்ட பிரெஞ்சு ஜோடி சாரா அபிடோல் ஸ்டீபன் பெர்னாடிஸ் பல்வேறு கோணத்தில் ஜிம்னாஸ்டிக் ஆட்டத்தை அபிநயித்து மூன்றாவது பரிசைப் பெற்றனர்.



# சுரங்க ரயிலில் 123 ஜோடி ஒன்றாகக் கூடி திருமணம்

நிலத்திற்குக்கீழ் சுரங்கப் பாதைகளை அமைத்து ரயில் வண்டிகளை ஓட விடுகிறார்கள் மேல் நாட்டவர்கள். இந்த வசதி எத்தனையோ நாடுகளில் இல்லை. ஹொங்கொங் தீவில் சுரங்க ரயில் சேவை மிகவும் பிரபல்யமானது. அண்மையில் ஒரு சுரங்க ரயிலில் 123 ஜோடிகள் ஒரே நேரத்தில் திருமணம் செய்து கொண்டார்கள். விரைந்து ஓடிய சுரங்க ரயிலில் ஜோடிகள் ஒட்டி உறவாடி திருமணத் தம்பதிகளாயினர். அபூர்வமான நிகழ்ச்சி அபூர்வமான அனுபவம்.



"டிரா குலா எனப்படும் பேய் மனிதனைப் பாத்திரமாக சித்திரித்து ஆங்கிலத்திரைப் படங்கள் கடந்த நூற்றாண்டில் வெளிவந்து ரசிகர்களை கவர்ந்திருக்கின்றன. இது மில்லேனியம் யுகம். டிரா குலாவின் வருகை முற்றுப் பெறவில்லை. "டிரா குலா மீண்டும் உதயம்" என்னும் பெயரில் ரோமானியாவில் தயாரிக்கப்படும் படத்தில் பிரிட்டிஷ் நடிகர் ஸ்டீக் பில்லிலடன் நவீன டிராகுலாவாக இவ்வாறு தோன்றுகிறார்.

# மில்லேனியம் யுகத்தில் 'டிராகுலா'வின் விஜயம்



நவம்பர் 25, சுடர்ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகர் வையாபுரியுடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு.

1. எம். தயாபரன், வவுனியா.
2. ஏ. ஞானமணி, அப்புத்தளை.
3. எஸ். எம். ஜாபீர், கொத்தாந்தீவு.

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

# ஒளிந்திருக்கும் முகம் எது?

கடந்த வாரம் (02.12.2001) மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரியவர் யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? கேரள நாட்டிலிருந்து தமிழகம் வந்த திவ்யமான நடிகை.



இந்த முகத்திற்குரியவரைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர்ஒளி'
36/2, பிரெட்ரிக்கா வீதி
கொழும்பு – 06.

# கிழக்கில் இன முறுகலுக்கு தூபமிடும் தீய சக்திகள்

## நீறுபூத்த நெருப்பாக இருந்து வரும் கசப்புணர்வுகள்

மட்டக்களப்பு, வாழைச்சேனை பிரதேசத்தில் பூதாகரமாக வெடிக்க இருந்த ஓர் இனக்கலவரம் ஒருவாறு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. அத்துடன் இந்த இனமோதல் உருவாவதற்கு பின்னால் இருந்து செயற்பட்டு வந்த சக்திகளும் பொதுமக்களால் இனங்காணப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஓட்டமாவடி, வாழைச்சேனை, மாவடிச்சேனை, கறுவாக்கேணி, சுங்காங்கேணி போன்ற பிரதேசங்களில் முஸ்லிம்—தமிழ் கலவரம் பாரிய அளவில் வெடித்து விடக் கூடிய அபாய நிலை ஒன்று கடந்த வாரம் காணப்பட்டு வந்தது.

வாகரையைச் சேர்ந்த மணாளன் மகேசன் என்ற மீன் வியாபாரி அண்மையில் மாவடிச்சேனை என்கின்ற முஸ்லிம் கிராமத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். இச் சம்பவத்தைத் தொடர்ந்து ஆரம்பமான இனமுறுகல் கடந்த 29 ஆம் திகதி அதே பிரதேசத்தில் இடம்பெற்ற மற்றொரு வன்முறைச் சம்பவத்தின் பின்னர் ஓர் இனக் கலவரமாக வெடித்துவிடும் அளவிற்கு விஸ்வரூபம் எடுத்தது.

முஸ்லிம் பகுதிகளில் விறகு வியாபாரம் செய்வதற்கென்று சென்ற கறுவாக்கேணியைச் சேர்ந்த தம்பிராசா புண்ணியமூர்த்தி, சின்னத்துரை மனோகரன், சின்னத்தம்பி தேவராசா ஆகியோர் மாவடிச்சேனையில் வைத்து கடுமையாகத் தாக்கப்பட்டனர். கத்திக் குத்துக்கும், வாள் வெட்டுக்கும் உள்ளாகினர்.

இதன் பின்னர் வாழைச்சேனை தமிழ்ப் பகுதிகளுக்குள் சென்ற முஸ்லிம்கள் அங்கு வைத்துத் தாக்கப்பட்டனர். அவர்கள் பயணம் செய்த ஓட்டோக்களும் அடித்து நொறுக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து வாழைச்சேனை தமிழ் கடைத் தொகுதியை நோக்கி முஸ்லிம் பகுதியில் இருந்து கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அதேபோன்று 30 ஆம் திகதியும் வாழைசசேனை விபுலானந்த வீதியில் தமிழ்ப் பகுதியை நோக்கிய மற்றொரு கைக்குண்டுத் தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் இடம்பெற்றன.

இவ்வாறு ஆரம்பமான வன்முறைகள் சில தரப்பினரால் திட்டமிட்டு பரப்பப்பட்ட வதந்திகளை உள்வாங்கி விஸ்வரூபம் எடுக்கத் தலைப்பட்டன.

கறுவாக்கேணி, சுங்காங்கேணி, வாழைச்சேனை போன்ற தமிழ் பிரதேசங்களில் வைத்து முஸ்லிம்கள் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும், ஓட்டமாவடி முஸ்லிம் பிரதேசங்கள் ஊடாகப் பயணம் செய்த தமிழர்கள் முஸ்லிம்களால் வெட்டப்பட்டுள்ளனர் என்றும் பலவிதமான வதந்திகள் வெளியாகி மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தின.

இதன் காரணமாக ஓட்டமாவடியிலும், கறுவாக்கேணியிலும் பல வாகனங்கள் கல்வீச்சுக்கு இலக்காகின. குறிப்பாக கறுவாக்கேணி பிரதேசத்தில் இடம்பெற்ற கல்வீச்சினால் நியூ ஈஸ்டன் பஸ் கம்பெனிக்குச் சொந்தமான இரண்டு பஸ்கள் சேதமடைந்தன. பஸ் சாரதி ஒருவர் உட்பட நான்குபேர் காயமடைந்தனர். முதலாம் திகதி மாலை சுங்காங்கேணி வழியாக வந்து கொண்டிருந்த தென்பகுதியைச் சேர்ந்த லொறி ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட கல்வீச்சுத் தாக்குதலில் ஒரு சிங்களச் சாரதி படுகாயமடைந்து வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

1985 மற்றும் 1990 ஆம் ஆண்டுகளில் இப்பிரதேசங்களில் பாரிய அளவில் இடம்பெற்ற முஸ்லிம்— தமிழ் கலவரங்களில் இரு தரப்பிலுமாக நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருந்தனர். கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் சேதமாக்கப்பட்டன.

இந்தக் கடந்தகால துர்ச்சம்பவ நினைவுகள், மற்றொரு இனக்கலவரம் இப்பிரதேசத்தில் மூண்டுவிடக்கூடாது என்கின்ற எச்சரிக்கை உணர்வை இப்பிரதேச வாழ் மக்களிடம் ஏற்படுத்தியிருந்தன.

இதன் காரணமாக தமிழ்—முஸ்லிம் தலைவர்கள் கூடிப்பேசி இப்பிரதேசத்தில் எரிய ஆரம்பித்திருந்த இன முறுகல் நிலையை தற்பொழுது ஓரளவு தணித்துள்ளனர். ஆனாலும் தமிழர் — முஸ்லிம்களுக்கிடையேயான கசப்புணர்வுகள் தொடர்ந்தும் நீறு பூத்த நெருப்பாகவே இருந்து வருவதை இங்கு காணக்கூடியதாக இருக்கிறது.

இதேவேளை தமிழ—முஸ்லிம் ஐக்கியத்தை சீர்குலைத்து இரு இனங்களுக்கும் இடையே பகைமையையும், விரோதத்தையும் உண்டுபண்ணி இனக்கலவரங்களை ஏற்படுத்துவதன் மூலம் இலாபம் அடைய நினைக்கும் சில சக்திகள் இப்பிரதேசத்தில் இடம் பெற்ற சம்பவங்களுக்குப் பின்னே இருந்துவருகின்றன கல்குடா தொகுதி பள்ளிவாசல்கள் நிறுவனங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக சம்மேளனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தமிழ்—முஸ்லிம் உறவைச் சீர்குலைக்கும் நோக்கத்துடன் இவ்விரு இனங்களின் நலன்களிலும் அக்கறை இல்லாத மூன்றாவது சக்தி ஒன்றே திட்டமிட்டு இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டதாக குற்றம் சுமத்தியுள்ளது.

மீன் வியாபாரி கொலைச் சம்பவத்தில் கொலைசெய்யப்பட்ட நபர் காலையில் ஓட்டமாவடிச் சோதனைச் சாவடியில் வைத்து கைது செய்யப்பட்டார் என்றும் —

பின்னர் அவரது சடலம் இனம் தெரியாதவர்களால் எடுத்து வரப்பட்டு முஸ்லிம் பிரதேசத்தில் போடப்பட்டதாகவும் பள்ளிவாசல் நிறுவனங்களின் சம்மேளனம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதேபோன்று தமிழ் விறகுவெட்டிகள் முஸ்லிம் பிரதேசத்தில் வைத்து தாக்கப்பட்ட சம்பவத்தின் போதும், இந்தப் பழி முஸ்லிம்கள் மீது விழவேண்டும் என்பதற்காக திட்டமிட்டு சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டன என்றும் சம்மேளனம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டி உள்ளது.

இதேவேளை தேர்தல் காலத்தில் இடம்பெற்ற இந்த இன வன்முறைச் சம்பவங்களில் குளிர் காய்ந்தபடி அவற்றை மேலும் வளர்த்தெடுத்து தமது வாக்கு வேட்டைகளுக்குப் பயன்படுத்த சில அரசியல் கட்சிகள் முனைந்ததையும் இங்கு குறிப்பிட்டேஆக வேண்டும்.

கல்குடாத் தொகுதியில் திட்டமிட்ட முறையில் ஏற்படுத்தப்பட்ட இன முறுகல் நிலை வெளிப்பார்வைக்கு தணிந்துள்ளதாக தோற்றம் அளித்தாலும் இந்த வன்முறைகளைத் தூண்டியதாகக் கூறப்படும் சக்திகள் இப்பிரதேசத்தில் தொடர்ந்தும் செயற்பட்டு வருவதால் மற்றொரு இனக்கலவர அச்சுறுத்தல் இன்னும் இருந்தே வருகிறது.

சாத்வீகன்

# ராசி பலன்

**09.12.2001 முதல் 16.12.2001 வரை**

**பொ.சந்திரன்.**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

புதன், ராகு, செவ்வாய் போன்ற கிரகங்கள் நன்மைசெய்யும். சந்திரன், கேது ஆகிய கிரகங்களால்ஓர் அளவு நன்மையுண்டு. பணப் பற்றாக்குறையாக இருக்கும். கல்வியில்கவனம் குறையலாம். மன அமைதி இருக்காது. கருதிய கருமத்தை செயல்படுத்த முடியும். பிரயாண வாய்ப்புண்டு. வீடு, வாகனங்களால்செலவு அதிகரிக்கும். முன்பு இருந்த நோய் விலகும். புது நோய் வரவாய்ப்பு இல்லை. தொழில்துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது.

**இடபம்: கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

குரு, சுக்கிரன் இவ்விரு கிரகங்களும் நன்மை செய்யும். செவ்வாய், சூரியன் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும் மனத்தில் அமைதியும் இல்லை. சஞ்சலமும் இல்லை. எண்ணிய எண்ணம் இலகுவாய் நலமாய் அமையும். வீடு, வாகனம் லாபம் தரும். திருமண வாய்ப்பு பிரசாகமாய் இருக்கும். உடல் நிலையில் ஆரோக்கியம் இருக்கும். தொழில் துறையில் பெரிதாக முன்னேற்றம் இருக்க வாய்ப்பில்லை.

**மிதுனம் : மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

புதன், செவ்வாய் ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். சூரியன், சந்திரன் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் தட்டுப்படலாம். கல்வியில் கவனம் குறையலாம். மன அமைதி இருக்காது. நினைத்த கருமத்தை செய்து முடிக்க முடியும். வீடு, வாகனம் லாபம் தரும். பிரயாண பலன் உண்டு. உடல் நிலையில் நல்ல ஆரோக்கியம் இருக்கும். தொழில் துறை சீராக முன்னேறும். பதவி உயர்வு வரவாய்ப்புண்டு.

**கடகம் : புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராகு, கேது, சனி போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். சூரியன், சுக்கிரன் ஓர் அளவு நன்மை செய்யலாம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த கருமத்தை தாமதமாகத் தான் நிறைவேற்றலாம். வீடு, வாகனங்கள் செலவை ஏற்படுத்தலாம். முன்பு இருந்த நோய்கள் விலகும். உடல் ஆரோக்கியமாக இருக்கும். தொழில் துறையில் சில பின்னடைவு வரவாய்ப்புள்ளது.

**சிங்கம் : மகம், பூரம், உத்தரம் 1**

சனி, குரு, சுக்கிரன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். செவ்வாய், ராகு ஓர் அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த கருமத்தை நிறைவேற்றலாம். ஆனால் தடை வரவாய்ப்புண்டு. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்புண்டு. உடல் நிலை நல்ல ஆரோக்கியமாக இருக்கும். தொழில் துறை முன்னேறும். இடமாற்றம் நிகழலாம்.

**கன்னி : உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2**

சனி, குரு, சூரியன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். ராகு, செவ்வாய் ஆகிய கிரகங்கள் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும், மன அமைதி இருக்கும். எண்ணிய எண்ணத்தை செயலாக்க முடியும். வீடு, வாகனம் லாபம் தரும். பிரயாண வாய்ப்பு பிரகாசமாக இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. உடற்சுகம் சிறிது பாதிக்க வாய்ப்புள்ளது. தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் இருக்கும்.

**துலாம் : சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3**

குரு, சுக்கிரன் ஆகிய கிரகங்களால் நன்மையுண்டு. ராகு, கேதுக்கள் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் தட்டுப்படலாம். கல்வியில் கவனம் குறையலாம். மன அமைதி இருக்காது. எடுத்த கருமத்தை தாமதமாக நிறைவேற்ற முடியும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்புண்டு. நோய் துன்பம் வரவாய்ப்பு இல்லை. தொழில் துறையில் சில பிரச்சினை வரவாய்ப்புண்டு. சமாளிப்பீர்கள்.

**விருச்சிகம் : விசாகம் 4, அனுஷம், கேட்டை**

சுக்கிரன், செவ்வாய், சந்திரன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். புதன், ராகு போன்றவை ஓர் அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த கருமத்தை சிரமத்தின் மத்தியில் தான் செய்து முடிக்கலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். உடல் நிலையில் சில பாதிப்புகள் வரவாய்ப்புண்டு. தொழில் துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது.

**தனு : மூலம், பூராடம், உத்தராடம் 1.**

குரு, புதன், சந்திரன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். செவ்வாய், சனி ஓர் அளவு நன்மை செய்யும். பணம் தட்டுப்படலாம். கல்வியில் கவனம் குறையலாம். மன அமைதி இருக்காது. எண்ணிய கருமம் இலகுவில் நிறைவேற்றலாம். வீடு, வாகனம் லாபம் தரும். திருமண வாய்ப்புண்டு, பிரயாண வாய்ப்புண்டு. உடல்நிலையில் சிறுபாதிப்பு வரவாய்ப்புள்ளது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும்.

**மகரம் : உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2.**

சுக்கிரன், சந்திரன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். ராகு, கேது ஓர் அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த கருமத்தை சிரமத்தின் மத்தியில் தான் நிறைவேற்றலாம். வீடு, வாகனம் லாபம் தரும். உடல் நிலையில் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பு இல்லை. தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் இருக்கும். பதவி உயர்வு இருக்கும்.

**கும்பம் : அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3**

குரு, புதன், சுக்கிரன் ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். சூரியன், கேது ஆகிய கிரகங்கள் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் கவனம் இருக்கும். மன அமைதி இருக்கும். எண்ணிய கருமத்தை இலகுவில் நிறைவேற்றலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்புண்டு. உடல் நிலையில் சில பாதிப்புகள் வரவாய்ப்புண்டு. தொழில் துறையில் எதிர்பார்த்த லாபம் இருக்காது.

**மீனம் : பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி**

புதன், சுக்கிரன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். சனி, கேது போன்ற கிரகங்கள் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும், கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த கருமத்தை ஓர் அளவு இலகுவாக நிறைவேற்றலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். பிரயாண வாய்ப்புண்டு, திருமண வாய்ப்பு உண்டு. உடல் நிலையில் நல்ல ஆரோக்கியம் இருக்கும். தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் இருக்கும்.

# ஜெயலலிதாவுக்குக் கிடைத்தது நிரந்தர விடுதலை அல்ல!

## உச்ச நீதிமன்றத்திற்கு விரைவில் மேன் முறையீடுகள்

ஊழல் வழக்குகளில் குற்றவாளியாகக் காணப்பட்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஜெயலலிதா மீண்டும் விடுதலைப் பறவையாகி விட்டார்.

ஊழல் வழக்கு நீதிமன்றங்கள் தன் மீது விதித்திருந்த தண்டனைகளை எதிர்த்து ஜெயலலிதா அப்பீல் செய்திருந்தார். அந்த அப்பீல் வழக்குகள் விரைவாக விசாரிக்கப்பட்டு தீர்ப்பு அளிக்கப்பட்டால் தனது சிறைத்தண்டனைகள் ரத்தாகும் அதன் மூலம் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு கிடைத்துவிடும் என்று ஜெயலலிதா எதிர்பார்த்தார்.

தமக்கு விதிக்கப்பட்டிருந்த ஆறுமாத காலக்கெடுவுக்குள் அந்தக் குற்றங்கள் எல்லாம் களையப்பட்டு தனக்கு விடுதலை கிடைத்து விடும் என்றும் எதிர்பார்த்தார்.

ஆனால் அப்பீல் விசாரணைகள் நீடித்துக்கொண்டே போயின. அதற்குள் ஜெயலலிதாவுக்கு முதலமைச்சர் பதவி வழங்கியது தவறு என்று குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை துரித கெதியில் நடந்து முடிந்து ஜெயலலிதாவின் முதலமைச்சுப் பதவியும் பறிக்கப்பட்டது.

அத்துடன் ஜெயலலிதா ஒதுக்கப்பட் டார். அவர் தனது கட்சிநிர்வாகத்தை இறுகப் பற்றிப் பிடித்துக்கொண்டு தனது பலத்தை வலுப்படுத்திக் கொண்டார். அதே நேரம் தனது அப்பீல் வழக்குகள் மீது முழுக் கவனம் செலுத்தினார்.

ஜெயலலிதாவின் மூன்று அப்பீல் வழக்குகளையும் ஒரே நீதிபதிதான் விசாரணை செய்தார் .அவர் மிகவும் துரிதகெதியில் விசாரணைகளை நடத்தினார். மூன்று வழக்குகளின் தீர்ப்புகளையும் ஒத்திவைத்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மூன்று வழக்குகளின் தீர்ப்புகளையும்நீதிபதி தினகர் ஒரே நாளில் வெளியிட்டார். அதன் மூலம் ஜெயலலிதாவின் வாழ்வில் ஒரு புதிய அத்தியாயம் தீட்டப்பட்டது.

நீதிபதி தினகர் முன்னிலையில் அப்பீல் வழக்கு விசாரணை நடைபெற்ற போது நீதிபதி சில கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.அந்தக் கருத்துக்களை பத்திரிகைகள் வெளியிட்டிருந்தன.

அந்தக் கருத்துக்களை ஊன்றிக் கவனித்தவர்கள் நீதிபதி தினகர் ஜெயலலிதாவுக்கு விரோதமான போக்கையே கொண்டிருந்தார் என்று நினைத்தார்கள். ஆனால் அவரோ சகலரையும் ஏமாற்றிவிட்டார்.

ஜெயலலிதா தரப்பினர் அப்பீல் விசாரணையில் சிறைத்தண்டனை குறைக்கப்பட்டாலே பெரிய வெற்றி என்று எதிர்பார்த்தனர். ஆனால் நீதிபதி தினகரோ ஜெயலலிதாவை 100 சதவீதம் விடுதலைப் பறவையாக்கி விட்டார்.



டான்சி மற்றும் கொடைக்கானல் ஹோட்டல் வழக்குகளில் இருந்து ஜெயலலிதா விடுதலை செய்யப்பட்டார். தனி நீதிமன்றம் அளித்த 3 ஆண்டு சிறைத் தண்டனையை உயர் நீதிமன்ற நீதிபதி தினகர் ரத்து செய்து தீர்ப்பு கூறினார்.

தமிழக அரசுக்கு சொந்தமான டான்சி நிலத்தை குறைந்த விலைக்கு வாங்கியதாக அப்போதைய முதல்வர் ஜெயலலிதா மீது வழக்கு தொடரப்பட்டது.

ஜெயா பப்ளிகேஷனுக்கு வாங்கியதாகவும், சசி எண்டர்பிரைசஸ் நிறுவனத்துக்கு வாங்கி யதாகவும் தனித் தனியாக 2 வழக்குகள் தொடரப்பட்டன.

ஜெயலலிதாவோடு சசிகலா, முகமது ஆசிப், டி. ஆர். சீனிவாசன், கற்பூர சுந்தரபாண்டியன், நாகராஜன் ஆகியோரும் குற்றவாளியாக சேர்க்கப்பட்டு இருந்தனர்.

இதே போல் கொடைக்கானலில் பிளசண்ட் ஸ்டே ஹோட்டலில் 7 மாடி கட்டுவதற்கு சட்ட விதிமுறைகளை மீறி அனுமதி கொடுத்ததாக ஜெயலலிதா, செல்வக்கணபதி ஆகியோர் மீது வழக்கு தொடரப்பட்டது. இதில் ஐ.ஏ.எஸ். அதிகாரி எச்.எம்.பாண்டே, ஹோட்டல் நிர்வாகிகள் ராகேஷ் மிட்டல், பாளை சண்முகம் ஆகியோரும் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டு இருந்தனர்.

டான்சி வழக்கில் ஜெயலலிதாவுக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதால் அவர் தேர்தல் சட்ட விதிமுறைப்படி கடந்த சட்டசபை தேர்தலில் போட்டியிட முடியவில்லை. ஆனாலும் அரசியல் சட்டம் அனுமதித்தபடி எம்.எல்.ஏ. ஆகாமலேயே 6 மாதம் வரை முதல்வராக இருந்துவிட்டு பதவி இழக்க நேரிட்டது.

டான்சி, கொடைக்கானல் வழக்குகளில் விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து ஜெயலலிதா அப்பீல் செய்தார். இந்த அப்பீல் மனுக்கள் மீது நீதிபதி தினகர் முன்னிலையில் விசாரணை நடந்தது.

இந்தத் தீர்ப்பு ஜெயலலிதாவை ஆனந்தக் களிப்பில் ஆழ்த்தி விட்டது. அவர் மீண்டும் முதலமைச்சாராகி தனது கைவரிசையைக் காட்டப்போகிறார்.

ஆனால் இந்த விடுதலைத் தீர்ப்பு ஒரு இறுதியான தீர்ப்பு அல்ல என்று சிலர் கருதுகின்றனர்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை எதிர்த்து புதுடில்லி மேல் நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்ய ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

உயர் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடருவேன். இவ்வாறு டான்சி வழக்கைத் தொடர்வதற்கு முதலில் அனுமதி பெற்ற சுப்பிரமணியசாமி கூறியுள்ளார். மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்வதற்கு தி.மு.க தரப்பிலும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 91–96ஆம் ஆண்டு அ.தி.மு.க ஆட்சி நடந்து கொண்டிருந்தபோது முதல்வராக இருந்த ஜெயலலிதாவுக்கு எதிராக வழக்குத் தொடர சுப்ரமணிய சாமிதான் முதன் முதலில் அனுமதி கேட்டார். டான்சி நிலத்தை வாங்கியது தொடர் பாக முதல்வர் ஜெயலலிதா மீது வழக்கு தொடரலாம் என்று அப்போதைய கவர்னர் சென்னாரெட்டி அனுமதி அளித்தார். தி.மு.க சார்பில் ஆலந்தூர் பாரதி தனிநபர் மனு ஒன்றையும் ஜெயலலிதாவுக்கு எதிராக தாக்கல் செய்தார்.

ஜெயலலிதாவை விடுவித்து உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு குறித்து சுப்ரமணியசாமி கூறியதாவது:–

டான்சி வழக்கில் உயர் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்வேன். இந்த வழக்கில் ஆதாரம் இல்லை என்று அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. வழக்கு விசாரணையின் போதும் நீதிமன்ற விவாதத்தின்போதும் நடந்த சில நடைமுறை குறைபாட்டால் விடுவிக்கப்பட்டுள்ளனர். இது ஊழல் வழக்கு. இதில் எத்தகைய வழி முறைகளை பின்பற்ற வேண்டும் என்பது எனக்குத் தெரியும். கடந்த ஆட்சியின் போது இந்த வழக்கை நானே நடத்தியிருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்காது. இருப்பினும் இதில் நான் சும்மா இருக்க மாட்டேன் என்றார்.

டான்சி நிறுவனத்தை ஜெயலலிதாவும் சசிகலாவும் வாங்கியது தொடர்பாக கடந்த ஆட்சியில் மூன்று வழக்குகள் தொடரப்பட்டன. ஜெயா பப்ளிகேஷன்ஸ், சசி எண்டர்பிரைசஸ், ஆர்.ஆர். இண்டஸ்ட் ரீஸ் என தொடரப்பட்ட இந்த வழக்குகளில் முதல் இரண்டு வழக்குகளில் ஜெயலலிதா வும் சசிகலாவும் குற்றவாளிகளாக சேர்க் கப்பட்டனர். இந்த வழக்குகளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ததும் அதில் கூறப் பட்டுள்ள குற்றச்சாட்டுகளை மறுத்து தங்களை விடுவிக்கக் கோரி மனுத்தாக்கல் செய்வது சட்ட நடைமுறை.

அதன்படி ஜெயலலிதாவும் சசிகலாவும் டான்சி வழக்குகளில் மனுத்தாக்கல் செய்தபோது இந்த மனுக்களை தனி நீதிபதி அன்பழகன் தள்ளுபடி செய்தார். தனி நீதிமன்றத்தின் முடிவை எதிர்த்து ஜெயலலிதா சார்பில் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அதனை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதி தங்கராஜ் அப்போது ஜெயலலிதாவை டான்சி வழக்கில் இருந்து விடுதலை செய்ய உத்தரவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று, நிலக்கரி ஊழல் வழக் கில் ஜெயலலிதாவை விடுதலை செய்ய தனி நீதிபதி ராதாகிருஷ்ணன் உத்தரவிட் டார். இந்த உத்தரவை எதிர்த்து கடந்த ஆட் சியில் உயர் நீதிமன்றத்தில் மேல் முறை யீடு செய்யப்பட்டது. அதனை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதி தங்கராஜ் தனி நீதி மன்ற தீர்ப்பை உறுதி செய்து தீர்ப்பளித்தார்.

நீதிபதி தங்கராஜின் இரண்டு உத்தர வுகளையும் எதிர்த்து கடந்த ஆட்சி உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. அதன்படி இரண்டு வழக்குகளையும் மீண் டும் விசாரிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட் டது. அதன் பிறகு வழக்கின் விசாரணை தனி நீதிமன்றத்தில் தொடர்ந்தது. டான்சி வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டு தற்போது மீண்டும் அதே உயர் நீதிமன்றத்தில் ஜெயலலிதா விடுதலை பெற்றுள்ளார். நிலக்கரி ஊழல் வழக்கு தனிநீதின்றத்தில் விசாரணையில் இருந்து வருகிறது.

சுப்ரமணிய சாமி மேல் முறையீட்டு மனுத்தாக்கல் செய்வதாக கூறியுள்ளார். அவரது மனுவுடன் தி.மு.க ஆதரவு வக்கீல்கள் சார்பாகவும் மனுத்தாக்கல் செய்யத் திட்டமிடப்பட்டு வருகிறது.

தற்போதைய விடுதலைத் தீர்ப்பின்படி ஜெயலலிதா முதலமைச்சர் பதவியை ஏற்று ஒரு மகாராணியாகக் கூடும். ஆனால் மேல் நீதிமன்றம் அவருக்கு மாறான விதத்தில் தீர்ப்பளித்தால் நிலைமை என்ன ஆகும்.

ஜெயலலிதாவிவகாரம்ஒரு தொடர்கதையாகத்தான் இருக்கப் போகிறது.

—கதாசி

# மாடுகளை பலி எடுக்கும் அந்திரக்ஸ்

மனித குலத்தை வேரோடு அழிக்கும் கொடிய அந்திரக்ஸ் நோய்க்கு சேலம் மாவட்டத்தில் 10க்கும் மேற்பட்ட மாடுகள் பலியாகி உள்ளன என்ற திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது.

'பேசிலஸ் அந்திரக்ஸ்' (Bacillus Anthrax) எனும் பாக்டீரியா கிருமி இன்றல்ல, நேற்றல்ல பல நூறு ஆண்டுகளாகவே உலகில் இருந்து வரும் கொடிய கிருமி என்பதை கால்நடை மருத்துவ நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர்.

பூமியில் உள்ள மண்ணில் மட்டுமே பேசிலஸ் அந்திரக்ஸ் கிருமியால் உயிர் வாழ முடிகிறது. சீதோஷ்ண நிலை மாறுபடும் போது பேசிலஸ் அந்திரக்ஸ் கிருமி மண்ணை விட்டு வெளியேறுகிறது.

புண்களோ, கொப்பளங்களோ உள்ள ஆடுகள், மாடுகள் மற்றும் விலங்குகள் புல்வெளிகளில் அல்லது கட்டாந்தரையில் மேயும் போது, மண்ணில் புதைந்துள்ள பேசிலஸ் அந்திரக்ஸ் கிருமி, அந்தநேரத்தில் ஏற்படும் சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப சட்டென கால்நடைகளின் கால்களில் காணப்படும் புண்களில் ஒட்டிக் கொள்கிறது. இதையடுத்து லட்சக்கணக்கான பேசிலஸ் அந்திரக்ஸ் கிருமிகள் அதிவேகமாக பரவிவிடுகின்றன.

அந்திரக்ஸ் தாக்கிய கால்நடைகளுக்கு 12 மணி நேரத்தில் கடும் காய்ச்சல் ஏற்படுகிறது. அடுத்த 12 மணி நேரத்தில் கால் நடைகள் இறந்து விடுகின்றன. இறந்துபோன கால் நடைகள் மூலம் கிருமிகள் மற்றைய கால் நடைகளிலும் அதிவேக மாகப் பரவுகின்றன. இதனால் ஆயிரக்கணக்கான கால்நடை கள் திடீர் திடீரென அழியும் நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

சேலம் மாவட்டத்தில் 2 இலட்சத்து ஆயிரத்து 866 பசு மாடுகளும், 1 இலட்சத்து 28 ஆயிரத்து 698 எருமை மாடுகளும் உள்ளன. இதேபோல் 2 இலட்சத்து 73 ஆயிரத்து 402 வெள்ளாடுகளும், 2 இலட்சத்து 71 ஆயிரத்து 502 செம்மறி ஆடுகளும் இருக்கின்றன.

சேலத்தில் நூற்றுக்கணக்கான கால்நடைகள் அந்திரக்ஸ் தாக்கத்துக்கு உள்ளாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

நோய் வாய்ப்பட்ட விலங்குகளிலிருந்து மனிதனுக்கு பின்வரும் வழிகள் மூலம் இந்த நோய் தொற்றலாம்.

1) விலங்குகளின் தோலில் இருந்து தொடுகைமூலம்.
2) சுவாச வழி மூலம்.
3) நோயுற்ற இறைச்சியை உண்பதன் மூலம்.
4) சில கடிக்கும் பூச்சிகள் மூலம்.

பொதுவாகக் கால் நடை வளர்ப்பவர்கள் இறைச்சி விற்பவர்கள், தோல் பதனிடும் தொழில் செய்பவர்கள், கம்பளி வேலை செய்பவர்கள் போன்றோரிலேயே இந்நோய் அதிகளவில் காணப்படுகின்றது. இந்நோய் மூன்று வழிகளில் மனிதனில் தொற்றலாம்.


1) **தோலில் தொற்று:**
இது தொடுகை மூலம் ஏற்படுகிறது. இதன் போது தோலில் கொப்பளங்கள் தோன்றி புண்ணாக மாறும். பின்பு கிருமிகள் இரத்தத்துடன் கலப்பதால் இறப்பு ஏற்படலாம். இறப்பு வீதம் 10–20 சதவீதம் ஆகும்.

2) **குடலில் தொற்று:**
இது நோயுற்ற விலங்குகளின் இறைச்சியை நன்கு சமைக்காமல் உண்பதால் ஏற்படுகின்றது. இவ்வகை நோய் அரிதாகவே காணப்படுகின்றது. இறப்பு வீதம் 50 சதவீதம் ஆகும்.

3) **சுவாசத் தொகுதியில் தொற்று:**
வித்திகளை(spore) சுவாச மூலம் உள்ளெடுப்பதால் இது மனிதருக்கு ஏற்படுகின்றது.

இதன் போது மனிதனுக்கு காய்ச்சல் , இருமல், மூச்சுத் திணறல் என்பன ஏற்படும். இதன் அறிகுறிகள் ஏனைய தொற்றுக்களை ஒத்திருப்பதால் இலகுவில் இனம் காண் பது கடினம். ஆகும். அறிகுறிகள் தோன்றி ஒன்று இரண்டு நாட்களில் இறப்பு ஏற்படலாம். சிகிச்சை செய்யாதவிடத்து இறப்பு வீதம்100 சதவீதம் ஆகும்.

இந்த நோய் வராமல் தடுப்பதற்கு தடுப்பூசியைப் பயன் படுத்த முடியும். நோய் அதிகளவில் ஏற்படும் சந்தர்ப்பம் உள்ளவர்களுக்கும் ஆடு, மாடுகளுக்குமே தடுப்பூசி போடப்படுகின்றது. வருடத்துக்கு ஒரு தடவை தடுப்பூசி போடப்பட வேண்டும். நோய்க் கிருமிகளினால் உருவாக்கப்படும் வித்திகள் சாதகமற்ற தட்ப வெட்ப நிலைகளிலும் நீண்ட காலத்துக்கு வாழக்கூடியவை. இவை சுவாசம் மூலம் உட்சென்று நோயை உருவாக்கும் போது,



நோயை இனங்காண்பது கடினமானது.

இதனால் விரைவில் இறப்பை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கிறது. இதன் காரணமாக வித்திகள் உயிரியல் ஆயுதமாகப் பயன்படுத்தக்கூடியதான தன்மை கொண்டவை. தற்போது அமெரிக்காவில் இக்கிருமிகள் கடிதம் மூலம் பரப்பப்பட்டு வருகின்றன.

செ. ஸ்ரீரகுநாதன்.

# முஸ்லிம் இளைஞர்களைப் பலி எடுத்த தேர்தல் தின வெறியாட்டம்

## புனித நோன்பு நாளில் கண்டியில் கறைபடிந்த வரலாறு

பஸ்ஸில் எடுத்துச் செல்லப்பட்ட வாக்குப் பெட்டிகளுக்குப் பாதுகாப்பாக வானில் சென்றபோது சனநடமாட்டம் குறைந்த இடம் ஒன்றில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட 10 முஸ்லிம் இளைஞர்களின் படுகொலைச் சம்பவம் கண்டி மாவட்டத்தையே ஓர் உலுக்கு உலுக்கி விட்டுள்ளது.

சுமார் 4 ஆயிரம் முஸ்லிம்கள் தனித்துவமாக வாழும் பிரதேசமே மடவளை. கண்டி பாத்ததும்பறை எனப்படும் வத்தேகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இப்பகுதி கடந்த ஆண்டு இடம் பெற்ற பொதுத்தேர்தலில் வன்முறைகள் மலிந்த பகுதியாக இனம் காணப்பட்டது. பிரதி பாதுகாப்பு அமைச்சராக இருந்த அனுருத்த ரத்வத்தை இத் தொகுதியின் பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர். கடந்த ஆண்டுத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்சார்பில் போட்டியிட்ட ரவூப் ஹக்கீம் வெற்றியீட்டியதில் இருந்து இப்பகுதி பதற்றப் பிரதேசமாக இருந்து வந்தது. அத்தேர்தலில் மாற்றுக்கட்சியின் ஆள்மாறாட்டம்வாக்கு மோசடிகளுக்கு மத்தியில் ரவூப் ஹக்கீமுக்கு இந்த வெற்றி கிட்டி இருந்தது.

அன்றிலிருந்து பெரும் சர்ச்சைக்குரிய பிரதேசமாக இந்த மடவளைப் பிரதேசம் மாறியது. அன்றைய தேர்தலில் ஆயுதபாணிகளினால் புரியப்பட்ட அட்டகாசங்கள் இப்பகுதி மக்களை தொடர்ந்து வாட்டி வருகின்றன.

இப்பகுதி முஸ்லிம்கள் கடந்த ஆண்டுத் தேர்தலைப் போன்று இம்முறையும் வன்செயல்கள் தலைதூக்காமல் இருக்க பகீரத பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்தனர். முஸ்லிம் இளைஞர்களே பெருமளவு இதில் முக்கிய பங்கு வகித்தனர்.

மடவளை மதீனா தேசியப் பாடசாலையிலும் அதன் ஆரம்ப பிரிவான கனிஷ்ட பாடசாலையிலும் இம்முறை வாக்கு சாவடிகள் இயங்கின.

ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செல்வாக்கு இங்கு பெருமளவு வேரூன்றி இருந்தது. வாக்களிப்புத் தினம் அன்று நண்பகல் 12 மணி இருக்கும். ஆண்கள் பலரும் பகல் தொழுகைக்காக பள்ளவாசலுக்குச் செல்ல காத்திருந்த நேரம்.

இவ்விரு சாவடிகளிலும் காலையிலிருந்தே போடப்பட்ட வாக்குகளால் நிறைந்த வாக்குப் பெட்டிகளை பலாத்காரமாக தூக்கிச் செல்ல சிலர் முயன்ற சம்பவம் பற்றி பரவலாகப் பேச்சடிபட்டது. இதன் காரணமாக இளைஞர்கள் உஷாராகினர்.

எங்கும் ஒரே பதற்றம். வாக்குப் பெட்டிகள் அபகரிக்கப்படுவதை தடுக்க உள்ளூர் முஸ்லிம் மக்கள் பாடசாலைக்கும் சிரிமல்வத்தை சந்திக்கும் இடையில் (கண்டி — வத்தேகம) கற்கள் முட்கள் மரக்குற்றிகள் போன்றவற்றைக் கொண்டு வந்துபோட்டு பாதையை மறித்தனர். கண்டியை நோக்கி அதே வீதியில் கறுப்பு மண்டி எண்ணெய் சுமார் 50 அடி தூரத்துக்கு பரவலாக ஊற்றப்பட்டது. இந்தச் சம்பவங்களை அடுத்து பொலிஸாரும் உஷாராகினார். பின்னர் கூட்டத்தைக் கலைக்க பொலிஸார் ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். வாகனப் போக்கு வரத்துக்கான பாதை சீராக்கப்பட்டது.

மாலை 4 மணியாகி விட்டது. வாக்குப் பெட்டிகளை இந்த இரு நிலையங்களில் இருந்தும் பஸ்கள் மூலமாக பாதுகாப்பாக கண்டிக்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பஸ்களுக்குப் பின்னால் வான் ஒன்றும் புறப்பட்டது.

வாக்குப் பெட்டிகளைப் பாதுகாக்க நீங்களும் வரலாமே என பாதை ஓரத்தில் நின்று கொண்டிருந்த இளைஞர்களிடம் வானில் வந்தவர்கள் கோரினர். முன்பின் தெரியாத அந்த இளைஞர்கள் உடடியாக அந்த வானில் ஏறிக் கொண்டனர்.



கொல்லப்பட்ட முஸ்லிம் இளைஞர் ஒருவரின் ஜனாஸா எடுத்துச்செல்லப்படுகிறது.

பஸ்ஸும் கனத்த வேகத்தில் காற்றாய்ப் பறந்தது. இளைஞர்கள் சென்ற வானின் பின்னால் ஒரு ஜீப்பும் வந்து கொண்டிருந்தது. சில கிலோ மீட்டர் தூரம் சென்றதும் திடீரென இளைஞர்கள் சென்ற வான் வழிமறிக்கப்பட்டு தொரக்கும்புர வீதி ஊடாக பல்லேதலவின்னை வரை எடுத்துச் செல்லப்பட்டது.

வாக்குப் பெட்டிகளைத் தாங்கிய பஸ் கண்டி கச்சேரியை நோக்கிப் பறந்து சென்றுவிட்டது.

இளைஞர்கள் சென்ற வான் மறைவான இடமாகிய சன நடமாட்டம் குறைந்த பல்லேகல வின்னைக்கு அருகில் உள்ள ஆடை தயாரிப்பு நிலையத்திற்குச் சற்று சமீபமாக நிறுத்தப்பட்டது.

முன்பின் தெரியாமல் சரமாரியாக துப்பாக்கிச் சன்னங்கள் அந்த இளைஞர்களின் தலை, வாய், மார்பு ஆகியவற்றைத் துளைத்தன. பத்து நொடிகளில் பத்துப் பேர் அதே இடத்தில் இந்த அனர்த்தத்தில் உயிர் நீத்தனர்.

மரண ஓலமிட்ட இளைஞர்களின் பரிதாபத்தைப் புரிந்து கொண்ட அப்பகுதியில் உள்ளோர் செய்வதறியாது திகைத்தனர்.

அப்பாவிகளான அந்த இளைஞர்களின் உடல்கள் இரவு முழுவதும் அதே இடத்தில் கிடந்தன. பின்னர் கண்டி வைத்தியசாலையின் பிரேத அறைக்கு பொலிஸாரால் அவை கொண்டுவரப்பட்டன.

ஊரடங்குச் சட்டத்தையும் பொருட்படுத்தாத நிலையில் மக்கள் இப்பரிதாப சம்பவத்தை கேட்டு பிரேத அறையை முற்றுகையிட்டனர்.

அங்கு பிரேதங்களை பரிசோதனை செய்து சடலங்களை உரியவர்களிடம் ஒப்படைக்க ஸ்ரீ.மு.காங்கிரஸ் தலைவரும் கண்டி மாவட்ட வேட்பாளருமான றவூப் ஹக்கீம் பிரயத்தனம் எடுத்தார்.

இளைஞர்களின் உடல்கள் இஸ்லாமிய முறைப்படி மடவளை பெரிய பள்ளிவாசல் மையவாடியில் ஒரே வரிசையில் அடக்கம் செய்யப்பட்டன.

புனிதநோன்பு காலமாகையால் மனம் புழுங்கி வெம்பிய நிலையில் இளைஞர்களின் உறவினர்கள் செய்வதறியாது கதி கலங்கினர்.

பல்லாயிரக் கணக்கானோர் இவர்களின் மரணச் சடங்கில் கலந்து கொண்டனர்.

அங்கு மேலும் பதற்றம் ஏற்படாத வகையில் பள்ளி வாசல் பிரதம இமாம் மௌலவி புர்ஹானுக்தீன் பெரும் பிரயத்தனம் எடுத்தார். முன்னாள் எம்.பீக்களான ஏ.ஆர்.எம். அப்துல் காதர், எம்.எச்.ஏ.ஹலீம், ரவூப் ஹக்கீம், எ.எச்.எம். அஸ்வர் கே.ரம்புக்வெல்ல உட்பட பலர் இறந்த இளைஞர்களின் தாய், தந்தை உறவினருக்கு ஆறுதல் கூறினர். இந்தப் படுகொலைச் சம்பவத்திற்கு துக்கம் தெரிவிக்கும் விதத்தில் பல இடங்களில் வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டன.

இந்தப் படுகொலையை செய்தவர்கள் யார் என்று இலகுவாக புரிந்து கொள்ளும் வகையில் குண்டர்களின் செயல்கள் அப்பகுதி மக்களுக்கு நன்கு துலாம்பரமாகி விட்டன.

கொல்லப்பட்ட இளைஞர்கள் பத்துப் பேரில் மூவர் மாத்திரமே திருமணம் புரிந்தவர்கள். ஏனையோர் வயதில் மிகவும் இளையவர்கள். இந்தச் சம்பவத்தின் எதிரொலியாக 40 நாட்கள் தொடர்ந்தும் துக்கம் அனுஷ்க்கவும் பிரார்த்தனைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இறந்த இளைஞர்களின் உடல்கள் வியாழன் மாலை மடவளை ஜும்மாப் பள்ளிவாசலில் அடக்கம் செய்யப்பட்டன. மடவளைப் பிரதேசத்தில் பொலிஸார் ஊரடங்கைத் தளர்த்தி மரணச் சடங்கில் பொது மக்கள் கலந்து கொள்ள வசதி செய்து கொடுத்தனர்.

எம்.டி.எம். பைஸால் (25), ஐ.எம். அஸ்வர் (28), எச்.எம்.எம் ரிஸ்வான் (22), கே.எம்.எம். பஸீல் (22), ஐ.எம். சபா அஹமட் (25), எம்.எம். நஸார் (21), எம். எம். மிலஸான் (24), ஆர்.ஏ.எம். மொஹிதீன் (31), ஆர். எம். நஸ்மி (26), எச். எம். ரிஸ்வான் (20) ஆகியோரே இறந்த முஸ்லிம் இளைஞர்கள் ஆவர்.


இந்த சம்பவத்தில் காயம் அடைந்த எம்.ஏ. ஸிமான், எம்.எம். மலீக், எம்.எம். ஸாஜித், எம். எம். பிர்தௌஸ் ஆகியோர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர்.

கண்டி மாவட்டத்தில் சகல பள்ளிவாசல்களிலும் கடந்த வெள்ளியன்று விசேட பிரார்த்தனைகள் இடம்பெற்றன.

இந்த சம்பவத்தின் எதிரொலியாக ஆவேசம் கொண்ட மக்கள் கூட்டம் மடவளையில் உள்ள ஒரு பெற்றோல் நிலையத்துக்கு தீவைத்துள்ளது.

— கண்டியூர்க் காவலன்

கடைக்காரன்: "எல்லாம் நல்ல சத்தமா வெடிக்கும். பேரனுக்கு வாங்கிக் கொடுங்க. ஒன்று மாத்திரம் வெடிச்சுக் காட்டட்டுமா.....?"



பையன்: "பாட்டி, போன தடவை வாங்கின வெடியெல்லாம் புஸ் வாணமாய்ப் போச்சு. அதனால எல்லாத்தையும் வெடிச்சுக் காட்டச் சொல்லு!"



கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட கண்டலடியூற்று அல்—ரவ்லா வித்தியாலயத்தின் கட்டடம் உடைந்த நிலையில் காணப்படுகிறது.

கடந்த ஒரு வருட காலமாக இந்த நிலைமைதான். இதனைத் திருத்தித் தரும்படி கோரிக்கை விடுத்தும் கல்வித் திணைக்களம் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று விசனம் தெரிவிக்கப் படுகிறது.

படம்: கிண்ணியா நிருபர்

# கிழக்கில் தேர்தல் முடிவுகளை மாற்றிய பாதைத் தடை

## அரசின் திட்டமிட்ட செயல் என்று குற்றச்சாட்டு

மட்டக்களப்பு மாவட்டத்தில் வேட்பாளர் ஒருவர் உட்பட நால்வர் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் மற்றும் நூற்றுக்கு மேற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் ஆகியவற்றுடன் தேர்தல் முடிவடைந்திருக்கிறது.

தேர்தல் தினம் இராணுவத்தினர் எடுத்த சில முடிவுகள் காரணமாக பிரதிநிதிகள் தெரிவிலும் வாக்களிப்பிலும் கூட மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு அதிக ஆசனங்களைப் பெறுவதைத் தடுக்கும் முயற்சியில் பல வழிகளிலும் ஈடுபட்ட அரசாங்கம் இறுதியில் தனது இராணுவப் பலத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்களை வாக்களிக்காமல் தடுத்திருக்கிறது.

### தமிழ் கட்சிகளுக்கு இழப்பு

இதனால் தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு ஓர் ஆசனத்தை இழந்த அதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணி ஓர் ஆசனத்தைப் பெற்றிருக்கிறது.

இதன் மூலம் தமிழர்களுக்கு வரவேண்டிய ஒரு பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டிருக்கிறது. மட்டக்களப்பு மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 2 லட்சத்து 82 ஆயிரம் வாக்காளர்களில் 76 வீதமானோர் தமிழ் வாக்காளர்கள். இதன்படி நான்கு தமிழ் பிரதிநிதிகளும் ஒரு முஸ்லிம் பிரதிநிதியும் தெரிவாகியிருக்க வேண்டும். இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் உள்ள தமிழர்கள் வாக்களிக்க முடியாமல் போனதால் மூன்று ஆசனங்களை மட்டுமே தமிழர் கூட்டமைப்பினால் பெற முடிந்திருக்கிறது.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் உள்ள 70 ஆயிரம் வாக்காளர்களுக்கு வாக்களிப்பதற்கான உரிமை மறுக்கப்பட்டதால் தமிழ் மக்கள் தங்களுடைய ஒரு பிரதிநிதித்துவத்தை இழந்திருக்கிறார்கள்.

இது ஏற்கனவே அரசாங்கத்தினாலும் பொதுஜன ஐக்கிய முன்னணியினராலும் திட்டமிடப்பட்டிருந்ததாக தமிழ்க்கட்சி வட்டாரங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

### இராணுவம் தெரிவித்த காரணம்

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வாக்காளர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அமைந்திருந்த கொத்தணி வாக்குச்சாவடிகளுக்கு வந்து வாக்களிப்பதற்கு தயாராக இருந்தபோதிலும் அவர்கள் வரும் நுழைவாயில்களான வவுணதீவுப் பாதை, செங்கலடி பதுளை வீதி, புலிபாஞ்ச கல் கிரான் வீதி, வாகரை மாங்கேணி வீதி என்பன இராணுவத்தினரால் அன்றைய தினம் போக்குவரத்திற்கு தடை செய்யப்பட்டு மூடப்பட்டிருந்தன. பொதுமக்களுடன் விடுதலைப்புலிகளும் ஊடுருவி தாக்குதல் நடத்தி தேர்தலைக் குழப்பிவிடுவார்கள் என்ற காரணத்தினாலேயே அன்றைய தினம் அப்பாதைகளைத் தடை செய்ததாக இராணுவ தளபதி அறிவித்திருந்தார்.

இப்பாதைகளில் உள்ள சோதனைச் சாவடிகளில் பலத்த சோதனைகளின் பின்னரே இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு செல்ல மக்கள் அனுமதிக்கப்படுவது வழக்கம். விடுதலைப்புலிகள் ஊடுருவித் தாக்குதல்களை நடத்துவார்கள் என்ற காரணம்தான் அப்பாதையைத் தடை செய்வதற்கு உண்மையான காரணமாக இருந்தால் வாக்காளர்களை சோதனையிட்ட பின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குச் சென்று வாக்களிக்க அனுமதித்திருக்கலாம்.

நொண்டிச் சாட்டு ஒன்றைக் கூறி தமிழ் மக்களின் வாக்களிக்கும் உரிமையைப் பறிப்பதற்காகவே அரசாங்கம் பாதைகளை தடை செய்ததாக நான்கு தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதி மக்கள் பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் பேரினவாத கட்சிகளுக்கு தமது எதிர்ப்பைக் காட்டுவதற்காகவும் —

போர் நிறுத்தம், பேச்சுவார்த்தை என்ற கோரிக்கைகளை முன்வைத்து போட்டியிடும் தமிழ்க்கட்சிகளுக்கு ஆதரவைத் தெரிவிப்பதற்காகவும் — தமிழர் கூட்டமைப்புக்கு வாக்களிப்பார்கள் என நம்பப்பட்டது.

### ஐ.தே.க வேட்பாளர் தந்த தகவல்

இது அரசாங்கத்தைப் பொறுத்தவரை கசப்பான விடயமும் கூட. அத்தோடு தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு நான்கு ஆசனங்களைக் கைப்பற்றினால் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆசனம் கிடைக்காமல் போகலாம். இதன் காரணமாகவே இம்மாவட்டத்தில் உள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியினரின் ஆலோசனையின் பேரில் இத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தேர்தல் நடைபெறுவதற்கு இருவாரங்களுக்கு முதலிலேயே இது பற்றி ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் அலிசாகிர் மௌலானா சில தகவல்களை தெரிவித்திருந்தார். இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் உள்ளவர்கள் வாக்களிப்பதைத் தடுப்பதற்காக பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தேர்தல் தினத்தன்று அவர்கள் வாக்களிக்க வரும்போது தடுக்கப்படலாம் என்றும் செய்தியாளர்களிடம் அலிசாகிர் மௌலானா தெரிவித்திருந்தார்.

எனவே இப்பாதை விடுதலைப்புலிகள் ஊடுருவுவார்கள் என்பதற்காக மூடப்படவில்லை என்பதும் மூடப்பட்டதற்கு அரசியல் காரணமே முக்கியம் என்பதும் தெளிவாகிறது.

அதுதவிர தேர்தலைக் குழப்பவேண்டிய அவசியம் விடுதலைப்புலிகளுக்கு இல்லை. அவர்கள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பிரசாரத்திற்கு தடை ஏதும் விதிக்கவில்லை. அதேசமயம் தேர்தல் காலத்தில் எறிகணைத் தாக்குதல் எதையும் அவர்கள் மேற்கொள்ளாது அமைதி காத்தனர் என்று தமிழ்க்கட்சி வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஆனால் அரசாங்கம் எதிர்பார்த்தது போல தமிழர் கூட்டமைப்புக்கு பின்னடைவு ஏற்படவில்லை என்றுதான் கூறவேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் 42 ஆயிரம் வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தையும், திருகோணமலை மாவட்டத்தில் 56 ஆயிரம் வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தையும் தமிழர் கூட்டமைப்பு பெற்றுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து பொன். செல்வராசாவும் ஜோஸப் பரராஜசிங்கமும் ரெலோ சார்பில் நிறுத்தப்பட்ட தங்கவடிவேலும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவாகியிருக்கிறார்கள்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஸ் அணி) மட்டக்களப்பு மாவட்டத்தில் வேட்பாளர்களை நிறுத்தவில்லை.

தமிழரசுக் கட்சியின் நீண்டகால உறுப்பினரான அறவழிப்போர் அரியநாயகத்தின் மகன் சந்திரநேரு அம்பாறை மாவட்டத்திலிருந்தும், ஆர்.சம்பந்தன் திருகோணமலை மாவட்டத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

### முக்கிய கடமைகள்

கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவாகியிருக்கும் தமிழ் பிரதிநிதிகளின் முன் இரு முக்கிய கடமைகள் காத்திருக்கின்றன. தமிழ் பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றங்களைத் தடுத்து எல்லைக்காவலர்களாக செயற்படவேண்டும். தமிழர் கூட்டமைப்பிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட அனைத்துப் பிரதிநிதிகளும் சேர்ந்து இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தாங்கள் எடுக்க இருக்கும் நடவடிக்கைகள் பற்றி மக்களுக்குத் தெரிவிக்கவேண்டும். தாங்கள் எடுக்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் மக்களையும் இணைத்துக்கொண்டு செயற்படவேண்டும்.

கடந்த காலங்களைப் போலன்றி இம்முறை தெரிவாகியிருக்கும் தமிழ் பிரதிநிதிகள் தம் முன் விரிந்திருக்கும் பொறுப்புக்களை உணர்ந்து செயற்படுவார்களா? பொறுத்திருந்து பார்ப்போம்.

— இரா. துரைரத்தினம்

# தொடர்கிறது குளோனிங் சர்ச்சை

'குளோனிங்' — விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களில் ஓர் அற்புதமான கண்டுபிடிப்பு.

ஓர் உயிரினத்தில் இருந்து எடுக்கப்படும் கலம் (Cell) மூலம் அதே உயிரினத்தின் தோற்றம், குணாதிசயங்கள் கொண்ட மற்றொரு உயிரினத்தை உருவாக்கும் உயிரியல் தொழில்நுட்ப முறையே குளோனிங் ஆகும்.

குளோனிங் முறையைப் பயன்படுத்தி முதன் முதலாக டோலி என்ற ஆடு உருவாக்கப்பட்டது.

இப்போது பல உயிரினங்கள் குளோனிங் மூலம் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இந்த நவீன முறையைப் பயன்படுத்தி மனித இனத்தையும் உருவாக்குவதற்கு ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

குளோனிங் மூலம் மனிதனை உருவாக்குவதற்கு பல நாடுகள் தடை விதித்துள்ளன.

ஆனாலும் சில நாடுகளில் இந்த முயற்சி மிகவும் ரகசியமாக நடந்து வருகின்றது.

சமீபத்தில் குளோனிங் முறை மூலம் குழந்தைகளை உருவாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து லண்டன் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

மனித உடல் கலத்தைப் பிரிப்பது தொடர்பான இந்த வழக்கிற்குத் தீர்ப்புக் கிடைத்துள்ளது.

மனித உடலின் கலங்களில் இருந்து உட்கருவைப் பிரித்து எடுப்பது, உயிர்க்கருவை உருவாக்குவது என்று அர்த்தப்படாது என்றும் இது 1990ஆம் ஆண்டு மனித கருத்தரிப்பு சட்டத்தின் கீழ் வரவில்லை என்றும் நீதிபதி தீர்ப்பு வழங்கியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து லண்டனில் குழந்தைகளை குளோனிங் முறையில் உருவாக்கும் முயற்சியில் ஈடுபடப்போவதாக இத்தாலி நாட்டின் மருத்துவ விஞ்ஞானி செவரினோ ஆன்டினோலி கூறியுள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில், "லண்டன் நீதிமன்றத்தின் தீர்ப்பு மனிதனை குளோனிங் முறையில் உருவாக்குவதற்கு அனுமதிப்பதாக உள்ளது.

"நான் உடனடியாக லண்டன் சென்று குளோனிங் முறையில் குழந்தைகளை உருவாக்குவேன்" என்றார்.

ஏற்கனவே இந்த இத்தாலி நாட்டு மருத்துவரின், குளோனிங் முறை மூலமாக குழந்தைகளை உருவாக்கும் முயற்சிக்கு உலக அளவிலான எதிர்ப்பு இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இது இப்படியிருக்க, இத்தாலிய மருத்துவரின் வாய்ச்சொல்லைச் செயலாக்கிக் காட்டியிருக்கின்றது அமெரிக்காவைச் சேர்ந்த பயோ டெக்னிக்கல் என்ற தனியார் கம்பனி.

இங்கு பணிபுரியும் தலைமை விஞ்ஞானி டாக்டர் ராபர்ட் லன்சா இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில், "நாங்கள் ஒன்றும் ஒரே சாயலில் பல மனிதர்களை உருவாக்கும் குளோனிங் முயற்சியில் ஈடுபடவில்லை. இளவயதில் ஏற்படும் நீரிழிவு, பல்வேறு வகையான புற்றுநோய்கள், எய்ட்ஸ் போன்றவற்றிலிருந்து மனித குலத்தை காப்பாற்றும் முயற்சியிலேயே ஈடுபட்டுள்ளோம்" என்கிறார்.

"இருதய நோயாளி ஒருவர் இருக்கிறார் என்றால் அவருக்கு மாற்று இருதயம் தேவை. அதை இறந்தவரிடம் இருந்து தேடிக்கண்டு பிடிப்பது அல்லது அதன் பகுதிகளை மட்டும் சீரமைப்பது போன்றவற்றில் ஈடுபடுவது சிரமமானதே.



இத்தாலிய மருத்துவ விஞ்ஞானி செவரினோ ஆன்டினோலி

"இந்தச் சிரமங்களை இலகுவாக்குவதற்கு எமது குளோனிங் முறை பயன்படும்.

"பாதிக்கப்பட்டவரின் தோலிலுள்ள கலங்கள் மூலம் அவருக்குத் தேவைப்படும் இருதயத்தை குளோனிங் முறை மூலம் உருவாக்க முடியும்" என்றும் இவர் கூறுகிறார்.

— ஷர்மிலா



# வில்லன்

புத்தளம் வேலாயுதன்

எல்லோர் வாழ்விலும் எத்தனையோ வடிவில் வில்லன்கள் வந்துபோகிறார்கள். என் வாழ்வில் ஒரு சாதாரண கமெராவே வில்லனாக வந்து என் வாழ்க்கையைத் திசைமாற்றிவிட்டது என்றால் நம்புவீர்களா? கொழும்பில் இருந்து மாலை ஐந்து மணிக்கு கோலாகலமாக புறப்பட்ட உடரட்டமெனிக்கா நாவலப்பிட்டி வரை அசுரவேகத்தில் ஓடி அதற்கு அப்பால் முக்கிமுனங்கி வேண்டா வெறுப்பாக ஊர்ந்து கொண்டிருந்தது.

கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து புறப்படும் பொழுது நாவலப்பிட்டிக்கு அப்பால் எல்லாப் புகையிரத நிலயங்களிலும் நின்று நிமிர்ந்து மெதுவாகத்தான் போகும் என்ற அறிவிப்பை முழுதாகக் கடைப்பிடிக்கிறது போலும். கடவுளே! இப்படிப் போனால் எப்பொழுது பதுளை போய்ச்சேருவது?

அப்புறம் பதுளையில் இருந்து பத்து மைல்களுக்கு அப்பால் இருக்கும் என் அக்கா வீட்டை போய்சேர வார இறுதி விடுமுறை முக்கால்வாசி முடிந்துவிடுமே என்று நினைக்கவே எரிச்சலாக இருந்தது. மெதுவாக ஓடும் ரயிலின் தாளத்தை சுகித்துக் கொண்டு உறங்கும் சகபிரயாணிகளைப் பார்க்க கவலையே இல்லாத ஜீவன்கள் என்று பொறாமையாக இருந்தது. புறப்பட்ட அவசரத்தில் வாசிப்பதற்குக் கூட எதையும் எடுத்து வரவில்லை. மடியில் இருந்த சிறிய பிரயாணப்பையைத் திறந்து அதில் மிகக் கவனமாகத் துணியால் சுற்றி வைத்திருந்த கமெராவை வெளியே எடுக்கிறேன்.

புத்தம் புதிய 'யசிகா கமெரா' அதிகம் பாவிக்காததால் இன்று வாங்கியதுபோல் பளபளத்தது. அதைக் கையில் எடுத்து தூங்கி வழியும் மனிதர்களைப் பார்த்துக் கொண்டு இருக்கும் போது என் அன்பு அண்ணியின் முகம் நினைவில் வந்தது.

இந்த அழகிய கமெரா அவளுடையதுதான். இதைக் கொடுக்கும் முன் அவள் சொன்னவைகள் நினைவுக்கு வந்தபோது சிரிப்பாக இருந்தது. ''சந்ரு! நானே இந்தக் கமெராவை இரண்டு முறைதான் பாவித்து இருக்கிறேன். மிகவும் விலை கூடியது. உங்க அண்ணன்கிட்ட நான்கு ஐந்து வருடமாய்க் கேட்டு போன மாதம்தான் வாங்கித்தந்தார். கொண்டுபோவது சரி ரொம்பக் கவனம். உண்மையைச் சொன்னால் இப்பவும்கூட தர மனசில்லை. அவருக்கு தெரிந்தால் கத்துவார். இருந்தாலும் உங்கள் எதிர்கால மனைவியைப் படம் எடுக்க நீங்க ஆசைப்படுவதால் மறுக்க முடியவில்லை. சும்மாவே நீங்க ஒரு மறதிக்கேஸ். அதுதான் என் பயம். கவனம் முக்கியமா ரயிலில் எங்கும் வைத்துவிட்டு தூங்கிவிடாதீர்கள்'' ஒரு குழந்தையைத் தருவதுபோல் இருகைகளாலும் கமெராவை தந்தாள்.

''சந்ரு! இதில் ஏற்கனவே போட்ட படச்சுருளில் ஆறு படங்கள் தான் எடுத்து இருக்கு. மிகுதி முப்பதும் அப்படியே இருக்கு. நீங்க கழட்டவோ போடவோ தேவையில்லை'' கமெராவில் படம் எடுக்கும் வித்தையையும் சொல்லித் தந்தாள். நான் ஒன்றும் அத்தனை மொக்கன் இல்லை.

நண்பர்களின் கமெராக்களில் எவ்வளவோ படம் எடுத்தும் இருக்கிறேன். என்றாலும் என் பயணமே கமெராவில்தான் தங்கியிருப்பதால் மௌனமாக இருந்தேன். அவள் கண் முன்பாகவே என் டவலால் கவனமாகச் சுற்றி என் பயணப்பைக்குள் வைத்தேன். நான் புறப்படும் சமயம்கூட ''பத்திரமாய் போய் வாங்க'' என்பதற்கு பதிலாக ''இரவுப்பயணம் கமெராபத்திரம்'' என்றுதான் சொன்னாள்.

அண்ணியின் நினைவுவர மீண்டும் ஒரு முறை கமெராவை நன்றாகப் பார்த்துவிட்டு பத்திரமாக என் கைப்பைக்குள் வைக்கிறேன். ஆடி அசைந்து ரயில் ஓடும் தாளத்திற்கு ஏற்றவாறு தூக்கத்தில் தள்ளாடுவோரையும் சக பயணியின் தோளில் பாசத்துடன் நிம்மதியாக உறங்குகிறவர்களையும் பார்க்க வேடிக்கையாக இருந்தது.

நானும் வேலை முடிந்து ஓடி வந்து ரயிலில் ஏறியவன்தான். களைப்பும் தூக்கமும் இருந்தாலும் கண்களை மூடப் பயமாக இருந்தது. காரணம் மடியில் இருந்த அண்ணியின் கமெரா. தூக்கத்தில் அதை எவனிடமாவது பறிகொடுத்து விட்டால் அண்ணியிடம் தப்பமுடியுமா?

தூங்க முடியாமைக்கு அது மட்டுமா காரணம்? இல்லை. நான் வார விடுமுறையில் அக்கா வீட்டுக்குப் போகிறேன் என்ற சாட்டில் என் எதிர்கால மனைவியை அந்த அழகுச்சித்திரத்தை, பேசும் பொற்கிளியைச் சந்திக்கப் போய்க் கொண்டிருக்கிறேன். போனமுறை போயிருந்தபோது அவளிடம் போட்டோ ஒன்று கேட்டேன். ''அதுதான் நேரில் பார்த்து விட்டீர்களே! பிறகு எதற்கு போட்டோ?'' என்று கூறி அழகாகச் சிரித்தாள். அவளின் வீட்டுக்காரர்களோ ''கல்யாணத்திற்கு முன்பு போட்டோ எதுவும் கொடுப்பது எங்கள் வழக்கம் இல்லை'' என்று ஒரே போடாகப் போட்டுவிட்டார்கள். என் அக்காவிடம் நச்சரித்தபோது சொன்னாள் ''டேய் முட்டாள்! இது கொழும்புக் குட்டியில்லை போட்டோவெல்லாம் கேட்டு வாங்க. எப்பவோ சின்ன வயதில் எடுத்த போட்டோ மட்டும்தான் இருக்காம். நீ எடுத்துக் கொண்டுபோய் யாரிடமும் காட்டுவது மாதிரி ஒன்றும் இல்லை. அப்படியே இருந்தாலும் தரமாட்டார்கள். கொஞ்சம் கண்டிப்பான குடும்பம். அடுத்தமுறை போகும்போது நீயே ஒரு கமெராவை கொண்டுவந்து உன்னவளை இஷ்டம் போல் படம் பிடித்துக் கொண்டு போகலாம்தானே'' என்றாள். அந்த இனிப்பான யோசனைக்கு நன்றி கூறி வந்தவன் தான்.

இப்போது கமெராவுடன் போய்க்கொண்டு இருக்கிறேன். நாளை விடிய அக்காள் வீடு. அங்கிருந்து ஒரே ஓட்டத்தில் அவள் வீடு. கமெராவில் அண்ணி மிச்சம் வைத்திருக்கும் முப்பது படங்களில் என்னவளை விதம் விதமாதக எடுக்கப் போகும் கனவுகளோடு பதுளை போய்ச்சேர்ந்தேன். அக்கா வீடு போயிறங்கியதும் கமெராவை வெளியே எடுத்துக் காட்டினேன். ''அடேயப்பா! அவசரத்தைப் பார் விட்டா தனியவே ஓடிவிடுவாய் போலிருக்கிறதே'' என்றபடி வீட்டைப் பூட்டிக் கொண்டு புறப்பட்டாள்.

'டெஸ்போட்' என்ற அந்த அழகிய தோட்டத்தில் என் மச்சான் டீமேக்கராக இருக்கிறார். மலையுச்சியில் அவர்களின் பங்களா. அதே மலையடிவராத்தில் என் காதல் கிளி வசிக்கும் சின்ன அமைதியான வீடு. மலைச்சரிவில் ஓட்டமும் நடையுமாகப் போனாலும் கமெராவை மார்போடு கெட்டியாகத்தான் பிடித்திருக்கின்றேன்.

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதாலும் புதுமாப்பிள்ளையைப் பார்பதற்காகவும் அவள் வீடு நிறைய கூட்டம். எல்லோரிடமும் அசடுவழியக் கொஞ்சங் கொஞ்சம் பேசினாலும் மனம் எப்போது, எப்படி அவளைக் கடத்திக் கொண்டு போவது என்பதையே சிந்தித்தது.

சமயசஞ்சீவியாக ''மாலாவைக் கோயிலுக்குக் கூட்டிப் போய்வரவா'' என்று என் அக்கா கேட்டாள். கொஞ்சநேர அமைதிக்குபின் பெண்ணின் தாயார், அதாவது என் வருங்கால மாமியார். ''கல்யாணத்திற்கு முன் வெளியே எங்கும் போவது சரியில்லை. இருந்தாலும் ஆசையோடு கேட்கிறீங்க. கோயிலுக்குத்தானே பரவாயில்லை போய் வாங்க'' என்று திருவாய் மலர்ந்தாள்.

ஆலமரத்தடியில் அமைதியான ஒரு பிள்ளையார் கோயில். என் அக்காவே சூடம் பற்றவைத்து பூசை செய்தாள். பச்சைச் சேலையில் என்னவள் கண்மூடி வணங்குவதைப் பார்க்க ஏதோ இன்னொரு கோயிற்சிலை போலத் தெரிந்தாள். ''பிள்ளையாரப்பா! எந்தத் தடையுமில்லாமல் எங்கள் திருமணம் நடக்க அருள் செய்யப்பா'' என்று வேண்டிக் கொண்டேன்.

சரி வெளிச்சம் போவதற்குள் படம் எடுக்க வேண்டும். நான் கமெராவை எடுத்துச் சரிசெய்வதைக் கண்டவள் என் அக்காவிடம் ''படமெல்லாம் வேண்டாம் என்று சொல்லுங்கள். வீட்டில் தெரிந்தால் பிரச்சினை பண்ணுவார்கள்'' என்றாள். எனக்கு ஏமாற்றமாக இருந்தது. அக்காவைக் கோபமாகப் பார்த்தேன். பாவம் அக்கா. எனக்கு கல்யாணம் பேசிய ஒரே குற்றத்திற்காக எத்தனை சிரமங்கள் அவளுக்கு.

''மாலா ஏன் பயப்படுகிறாய்? எங்களோடு சேர்த்துத்தானே எடுக்கப் போகிறான். நிச்சயதார்த்தம் முடிந்து வாற மாதம் கல்யாணம். அதுவும் போக எங்கள் சொந்தக்காரர்கள் தம்பியின் நண்பர்கள் உன்னைப் பார்க்க ஆசைப்படுகிறார்கள். காட்ட ஒரு நல்ல படம்கூட இல்லை. அதற்காகத்தான் கொழும்பிலிருந்து கமெராவுடன் வந்திருக்கிறான்.

''யாரும் எதுவும் சொன்னால் நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று ஒரு போடுபோடவும் அமைதியானாள். இந்த சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் கோயிலைச் சுற்றியும் தேயிலைச் செடிகளுக்கு மத்தியிலும் வைத்து விதம்விதமான கோணங்களில் படச்சுருள் முடியும்வரை சுட்டுத்தள்ளினேன்.

அப்பாடா! என் அழகுக்கிளியை பல கோணங்களில் கமெராவிற்குள் அடைத்துவிட்ட நிம்மதி. எங்களைத் தனியே பேசவிட்டு அக்கா கோயிலைச் சுற்றிவரத் தொடங்கினாள். ''என்ன படம் எடுத்தது பிடிக்கலையா? எனக் கேட்டேன். அவள் தலையைக் குனிந்தபடி ''அப்படியெல்லாம் இல்லை. இப்படித் தனியே வந்து பழக்கமில்லை. கோயிலுக்குக்கூட அம்மாவோடு அல்லது அண்ணன்மாரோடுதான் வருவேன். அக்கா கூப்பிட்டதால விட்டாங்க. கல்யாணத்திற்கு முன்பு படமெல்லாம் எடுப்பது கூடாது என்று வீட்டில் சொல்வாங்க'' என்றாள்.

நான் அவளது அழகிய முகத்தை மேய்ந்து கொண்டிருந்தேன். அவள் பேசியது ஒன்றும் மண்டையில் ஏறவில்லை. பாரதி சொன்ன காதிலே தேன்பாயும் சமாச்சாரம் மட்டும் புரிந்தது. கோயிலை விட்டுப் புறப்பட்டோம். அக்கா முன்னே செல்ல பின்னால் நடந்தோம். ''ஏதாவது பேசமாட்டாயா?'' என்றேன் மெல்லிய குரலில். ''அழகான கமெரா உங்களுடையதா?'' என்றாள். ''இல்லை நம்முடையது'' என்றதும் அழகாகச் சிரித்தாள்.

''நீங்க பொல்லாத ஆள்'' என்றாள். ஏன் என்றேன். ''கோயிலுக்கென்று பொய் சொல்லிக் கூட்டிவந்து என்னை விதம்விதமாக படம் எடுத்துவிட்டீர்களே?'' என்றாள். ''என்ன செய்வது? என் எதிர்கால அழகுமனைவியைப் பற்றி எல்லோரும் கேட்கும்பொழுது காட்ட ஒரு படம் இல்லையே?'' என்றேன். ''ஒரு படமா? சரி சொல்லுங்க மொத்தமா எத்தனை படங்கள் எடுத்தீங்க?'' என்றாள்.

''அதிகமில்லை முப்பது படங்கள் தான்'' என்றதும் அவள் ஆச்சரியத்தில் கண்ணும் வாயும் விரிய நின்ற கோலம் அவளை அப்படியே கட்டிக் கொள்ளலாம் போல இருந்தது. பேசியபடியே அவள் வீட்டை நெருங்கி விட்டோம். ''படங்களை எப்ப அனுப்புவீங்க'' அக்கறையுடன் கேட்டாள்.

''போனவுடன் முதல்வேலை இதுதான். ஒரு வாரத்திற்குள் உன்னிடம் வந்துசேரும்'' என்று உறுதியாகக் கூறியபடியே அவளை வீட்டில் விட்டுவிட்டுப் புறப்பட்டோம். அன்றிரவே கொழும்பு புறப்பட்டுவிட்டேன்.

வழியெல்லாம் அவள் நினைவுதான். கோயில் போனதும் படம் எடுத்ததும் கனவுபோல் இருந்தது. கொழும்பு போனதும் அண்ணியின் முதல் கேள்வி ''கமெராவைப் பத்திரமாக கொண்டந்தாச்சா? கெட்டிக்காரன் முழுப்படச்சுருளையும் முடிச்சிட்டீங்க போலிருக்கே. அதில எங்க படமும் ஆறு இருக்கு. கழுவியதும் தாங்க. படச்சுருள் உங்க கல்யாணத்திற்கு என் அட்வான்ஸ் பரிசு''.

அவள் பேசியது எதுவும் காதில் விழவே இல்லை. வேலைக்குப் போகும் வழியில் எனக்கு நன்கு பரிச்சயமான ஒரு ஸ்டுடியோவிற்குள் நுழைகிறேன். கமெராவைக் கொடுத்து ''எல்லாம் முக்கியமான படங்கள். உடனே டெவலப் செய்து காட்டு. பிறகு பிரின்ட் போடலாம். எல்லாவற்றிலும் மூன்று கொப்பிகள் வேணும்.'' என் படபடப்பைக் கண்டு சிரித்த வண்ணம் டாக்ரூமிற்குள் நுழைகிறான் அந்த ஸ்டுடியோ நண்பன். அலுவலகத்திற்கு நேரமாவதுகூடத் தெரியவில்லை.


அவன் கலர்கலராகக் கொண்டு வரப்போகும் என் வண்ண மயிலின் படங்களை எதிர்பார்த்துத் துடிப்போடு நிற்கிறேன். உள்ளே போனவன் அதே வேகத்தில் வெளியே வருகின்றான். ''என்னப்பா சந்ரு! தமாஸ் பண்ணுகிறாயா? உள்ளே ஒன்றுமே இல்லையே'' என்றபடி வாய்பிளந்து காலியாக இருக்கும் கமெராவைக் காட்டுகிறான். எனக்கு தலையெல்லாம் சுற்றுகிறது.

''இல்லையே உள்ளே ஆறுபடங்கள் எடுத்து மிகுதி முப்பதுபடங்கள் இருந்ததே? படம் எடுக்க எடுக்க எண்கள் ஓடியதே? பேசுகிறேனா புலம்புகிறேனா தெரியவில்லை. ஸ்டுடியோ நண்பன் கமெராவை மூடிப் பரிதாபமாக நிற்கும் என்னிடம் ''சந்ரு சார் கமெராவில் எண்கள் ஓட உள்ளே படச்சுருள் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இங்க பாருங்க'' என்றபடி கமெரா பட்டனை அழுத்த முப்பத்தியாறில் இருந்து முப்பத்தியேழு முப்பத்தியெட்டு என்று இலக்கம் மாறுகிறது.

பூமியே இரண்டாகப் பிளந்து நான் உள்ளே போய்க் கொண்டிருப்பதை உணர்கின்றேன். கடவுளே! அப்படியானால் என் மக்கு அண்ணி உள்ளே படச்சுருள் இப்பதாக ஏன் சொன்னாள். இந்த வெறும் கமெராவைத் தரவா இத்தனை பிகுபண்ணினாள். படங்களை தினம் எதிர்பார்த்து இருக்கும் என் எதிர்கால மனைவிக்கு என்ன காரணம் சொல்லப் போகிறேன். நடந்ததைச் சொன்னால் யார் நம்புவார்கள்?

எப்படியோ என் கல்யாணம் நின்று போனது. அதற்கு காரணங்கள் பல இருந்தாலும் எடுத்த படங்களை ஒழித்து வைத்துக் கொண்டு ஒன்றைக்கூட அனுப்பாமல் விட்டதுதான் பெண்ணும் அவள் வீட்டாரும் சொன்ன பெரிய காரணம். 'இப்ப சொல்லுங்கள்! என் வாழ்வில் வந்து விளையாடிய கமெரா ஒரு வில்லன் தானே!

(யாவும் கற்பனை)



ரசிகர்களிடம் தனக் கென்று ஒரு அந்தஸ்த் தைப் பெற்றிருக் கிறார். ஒரு படத்துக்கு நான் சிரமப்படுவதைப் போன்று, தனது நகைச்சுவைக் காட்சிகளுக்கு அதிக சிரத்தையுடன் உழைக் கும் விவேக். பாராட்டப்பட வேண்டியவர் என்று சுப்பர் அக்டர் கமலஹாசனே கூறி யிருக்கிறார். சரி விவேக் இதுபற்றி என்ன நினைக்கிறார். அவரிடம் பேசிப்பார்ப் போமா?

கே: நீங்கள் அமைக்கும் நகைச் சுவைக் காட்சிகளுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது போலிருக்கிறதே?

ப: ஆமாம்! இப்போதைய ரசிகர்கள் புத்திசாலிகள் நகைச்சுவைகளையும் அவர் களின் ரசனைக்குத் தகுந்தது போல் கொடுத் தாலே ஏற்றுக் கொள்வார்கள்.

கே:இப்போது 'விவரமான ஆளு' படத் தில் சத்யராஜுடன் சேர்ந்து நடிக்கிறீர்கள் அதைப்பற்றி...!

ப: இப்படத்தில் 'சூட்கேஸ் சுப்பு' என்ற ஏமாற்றுப்பேர்வழி கரெக் டரில் நடிக்கிறேன். சத்யராஜ் ஸாரும் நகைச்சுவையாக நடிக்கும் ஹீரோ தான். நாங்கள் இரண்டு பேரும் இணைந்து நடித்தால் கேட்கவும் வேண்டுமா? காட்சிகளைப் பறந்து சண்டை போட முடியாது. படத்தின் கதைக்குப் பொருந்தும் நாயகனாக நடிக்கவே விருப்பப்படு கின்றேன். நான் காதல் நாயகன் அல்ல கதையின் நாயகன்.

கே: உங்கள் வேலை நடிப்பது . ஆனால் நீங்கள் 'காமெடி டிராக்'களில் அதிக மாகத் தலையிட்டதனால் தான் இப்போது 'காமெடி டிரக்'களை எழுத வேண்டியதாகப் போய் விட்டதாமே!

ப:இல்லை. ஏதோ சில படங்களில் கதையின் ஓட்டத் திற்குச் சற்று விலகி தனி காமெடி டிராக் எழுதி நடித்ததற் குக் காரணம். ஏற்கனவே அமைக்கப் பட்டிருந்த 'காமெடி டிராக்' எடுபடாது என்று தோன்றியமையே.

கே: சமீபகாலங்களில் ரசிகர்களை அதிகமாக அர வணைக்கிறீர்களே! அரசி யலுக்கு வருவதற்கு அத்தி வாரமா?

ப: என்ன ஸார் நீங்கள் எது எதற்கோ முடிச்சுப் போடு கிறீர்கள் என் படத்தை காசு கொடுத்துப் பார்த்து என்னை இந்தளவுக்கு வளர்த்து விட்ட அன்புள்ளங்களை நானும் அரவணைக் கிறேன் அவ்வளவே!

கே: கமல்ஹாசனின் 'தெனாலி' படத்தில் உங் களை நடிப்பதற்கு கேட்ட போது மறுத்து விட்டீர் களாமே?

ப: ஆமாம், அந்த வேடம் எனக்குப் பொருந்தாது.

—ஷாம்.

## இனி இவர்கள்....!




* விஜய்டிவியில் வரும் ஒரு தொட ரில் நடிக்கப் போகிறார் ரோஜா ஒரு நாளைக்கு ஒரு லட்சமாக 50 நாட்களின் சம்பளத்தை ஒரே யடியாக வாங்கி விட்டாராம்.
* 'காதல்வைரஸ்' படத்தில் இயக்கு நர் கே. பாலசந்தர் கௌரவ வேட மொன்றில் நடிக் கிறார்.
* 'ஷாஜகான்' சக்கை போடு போடுவதனால் அவர் அடுத்து நடிக்கும் 'தமிழன்' படத் திற்கு அதிக எதிர்பார்ப்பு உள்ளது.
* அண்ணா நகரில் சொந்த வீடு கட்டி வருகிறார் நடிகை மும்தாஜ்.
* சௌத்ரி தயாரிக்கப் போகும் ஒரு படத்தில் நடிகர் மனோஜ் கதா நாயகனாக நடிக்கப் போகிறார்.

# நான் காதல் கதாநாயகன் அல்லன் கதையின் நாயகன் என்கிறார் விவேக்

சமீபகாலங்களில் விவேக் தனது நடிப்பினால் ரசிகர்களைச் சிரிக்கவைத்து நகைச்சுவை நடிகர் என்ற நம்பர் வன் ஸ்தானத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக் கிறார்.

'ஷாஜஹான்', 'பார்த்தாலே பரவசம்' 'மனதைத் திருடி விட்டாய்' ஆகிய படங்கள் சமீபத்திய வரவுகளில் விவேக்கின் நடிப்பை யும் வெளிப்படுத்தியவை.

தனது தனித்தன்மையான நகைச் சுவை நடிப்பினால் ரசிகர்களைக் கவர்ந்துள்ளவர் விவேக்.படத்துக்குப்படம் அதிக ரிஸ்க் எடுத்து நகைச் சுவைக் காட்சிகளை உருவாக்கி வருகிறார்.

படமாக்கும் போது ஷூட்டிங்கில் இருந்தவர்களே விழுந்து விழுந்து சிரித்தார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

கே: நகைச்சுவைக் காட்சிகளில் நடித்து வந்த நீங்கள் திடீரென்று கதாநாயகனாக 'பஞ்சு' படத்தில் நடிக்கத் தொடங்கினீர்கள். அது கை கொடுக்கவில்லையா?

ப: அப்படி எதுவும் இல்லை. மற்ற படங்களில் பிஸியாக இருக்கின்றதனால் 'பஞ்சு' வில் கவனம் செலுத்த முடியவில்லை. ஆனால் மிகவிரைவில் பஞ்சு படத்தின் இரண்டாம் கட்டப் படப்பிடிப்பு தொடங்கப் போகின்றது.



கே: நகைச்சுவையில் தனி ட்ரென்ட் பதித்து விட்ட உங்களால் கதாநாயகனாக டூயட் பாடமுடியுமா?

ப: ஏன் ஸார் சினிமாவில் காத லிப்பது அவ்வளவு கஷ்டமென்றா நினைக்கிறீர்கள்? இருந்தாலும் நான் ஏற்கனவே பல பேட்டி களில் குறிப்பிட்டது போல ரெகுலர் ஹீரோக்கள் செய்யும் சாக சங்களை என் னால் செய்ய முடி யாது. மரத்தைச் சுற்றி வந்து கதாநாயகியைக் கட்டிப்பிடித்து டூயட் பாட முடியாது. பறந்து

## ரசிகர்களுக்கு அஜித் உறுதி



'சாம்ராட் அசோகா' என்ற இந்திப் படத்தில் அஜித்குமார் நடித்திருக்கிறார்.

இதனைச் சாட்டாக வைத்து அவர் நடித்திருக்கிறார் என்ற ஒரே காரணத் துக்காகவே தமிழில் மொழிமாற்றம் செய்து வெளியிட்டி ருக்கிறார்கள்.

படத்தைப் பார்த்த அஜித்தின் ரசிகர்கள் 'இப்படித் தலையை மட்டும் காட்டி விட்டுப் போகும் வேடங்களில் இனிமேல் நடிக்க வேண்டாம் தலைவா. உங்களை இப்படிப்பட்ட வேடங்களில் பார்ப்பதற்கு எங்களால் முடியவில்லை'' என்று கூறியிருக்கின்றனர்.ரசிகர்கள் சொல்வதிலுள்ள உண்மையை ஏற்றுக்கொண்ட அஜித்தும் இனி மேல் இவ்வாறான வேடங் களில் நடிக்க மாட்டேன் என்று உறுதியளித்திருக்கிறாராம்.

# தொப்பை அழகியின் சுப்பர் கண்டிசன் இனி எடுபடாது!

'குஷி' மூலம் குபீரென்று உயர்ந்து விட்டவர் ஜோதிகா. தொடர்ந்து வந்த படங்கள் வெற்றி பெற் றதோ இல்லையோ அம் மணியின் சம்பளமும் புக ழும் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போகிறது.

அம்மணி காட்டில்பெய்த அடைமழையினால்ஒரு படத்தில் நடிப்பதற்கு பூவெல்லாம் உன் வாசத்தில் 35 லட்சத்திலிருந்து சம்பளம் 50 லட்சமாகி இப்போது 'ஒன் டூத்ரீ' படத்திற்காக 85 லட்சம் கேட்டிருக்கிறார்.

அதுமட்டுமல்ல விளம்பரப்படங்களையும் இவர் விடுவதில்லை மசாலா தூள், கோப்பி, எண்ணெய் என்று எந்த விளம்பர வாய்ப்பு களையும் விடாமல் ஒப்புக் கொள் கிறார்.விளம்பரப்படங்களில் நடிப் பதற்கு ஒரு நாளைக்கு எட்டு லட்சம் சம்பளம் வாங்கு வாராம் . அம்மணி ஒரு விளம்பரப் படத்திற்கு மூன்று நாட்கள் கால்ஷீட் கொடுப்பார். ஆக (8X3= 24லட்சம்) ஒரு விளம்பரப் படத்தில் நடித்தால் அம்மணிக்குக் கிடைப்பது 24லட்சம். காற்றுள்ள போதே தூற்றத் தெரிந்த நடிகை என்று உறவினர்கள் பாராட்டுப் பத்திரம் வாசித்துக் கொண்டிருக்கின்றனர்.



'தொப்பை அழகி' என்று செல்லமாக தமிழ்த் திரையுலகினரால் அழைக்கப்படும் நடிகை போடும் கண்டிசன்களி லேயே சூப்பர் கண்டி சன் இளம் நடிகர்களுடன் மட்டும் தான் ஜோடி சேர்ந்து நடிப்பேன் என்பது.

அதன்படி அஜித், பிரசாந்த்,விஜய், மாதவன் போன்றோ ருடன் மட்டும் தான் ஜோடி சேர்ந்து நடிப் பார்.மற்றும்படி பிரபுகார்த்திக், சத்யராஜ், சரத்குமார், விஜயகுமார், விஜய காந்த் போன்றவர்கள் இவரால் ஒதுக்கப்பட்டவர்கள். நடிகையின் கணிப்பில் இவர்கள் அனைவரும் மூத்த நடிகர்கள். இவர்களுடன் நடிக்கமாட்டேன் என்று பகிரங் கமாக அறிக்கை விட்டுள்ளார்.ரஜினி,கமல் இதற்கு விதி விலக்கு. இப்படி தன் கணிப்பீட்டில் ஒரு வரையறை வைத்துக் கொண்டு வலம் வருகிறார் நடிகை.

இது இப்படி இருக்க, இளைய கதாநாயகர் களுடன் புதிய மும்பை வரவுகள் அதிரடியாக தமிழ்த் திரையுல கில் நுழைந்திருக்கின்றனர்.

'தமிழன்' படத்தில் விஜய் ஜோடியாக பிரியங்கா சோப்ரா அரசாட்சியில் அர்ஜுனுடன் லாரா தத்தா 'ரெட்'டில்அஜித் ஜோடியாக ப்ரியா ஹில் என்று உலக அழகி சகிதம் மும்பை அழகிகள் படை யெடுத்திருக்கின்றனர்.இந்த நேரம் பார்த்து '12பி' படத்தில் இரண்டு கதாநாயகிகளுள் ஒருவராகவும் 'த்ரீ ரோஸஸ்' படத்தில் மூவரில் ஒருவராகவும் நடித்து விட்டார் தொப்பை நடிகை. இதனால் தனது கண்டிசன் களைக்குறைத்துக் கொள்வதற்கு முடிவெடுத்துள்ளாராம்.




Agent for all Air Lines

யாழ்ப்பாணம், வவுனியா Transport வசதியும் எம்மிடம் உண்டு.

## TRAVEL DATA TOURS & TRAVELS

நியாயமான விலையில் அனைத்து நாடுகளுக்குமான விமான டிக்கெட்டுக்களையும் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய நம்பிக்கையான ஸ்தாபனம்

Visa, Passport, Hotel வசதிகளையும் சிரமமின்றி நாம் செய்துதருகிறோம்.

இல. 63, Maliban Street, Colombo - 11. Mobile : 071-734100
Toronto: Mr.Param 416-6098381

61, Chatham Street, Colombo - 11. Tel: 385900, 338241-3 Fax: 94-1-338244

ZURICH: Militarstass 88-Ch-8004 Zurich Tel: 01 - 2412885 / 86 E-mail: slccz.travel@bluewin.ch

எம்மிடம்
Zurich - Colombo-Rtn
Toronto-Colombo-Rtn
London-Colombo-Rtn
விமான டிக்கெட்டுக்களை கொள்வனவு செய்பவர்களுக்கு விமான நிலையத்திற்கான போக்குவரத்து வசதி இலவசம்!



தெலுங்கில் வெளிவந்து வெற்றியைப்பெற்ற படம் ''பிரேமத்துரா''. வெங்கடேஷ் கதா நாயகனாகவும் சிம்ரன் — இஷா கதாநாயகிகளாகவும் நடித்திருந்தனர். இப்படம் 'காதல் கலாட்டா' என்ற பெயருடன் தமிழுக்கு வருகிறது. இன்லேண்ட் சினி கிரியே ஷன்ஸ் பட நிறுவனம் சார்பில் வை. எஸ்.டி. சேகர் வெளியிடும் இப் படத்தின் படப்பிடிப்பு சுவிட்சர் லாந்து, மலே சியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் நடைபெற்றுள்ளது.

# காதல் கலாட்டா!

# கவர்ச்சிக்குக் கட்டுப்பாடா?

ஒரே படத்தின் மூலம் பிரபலமாக முடியுமா? என்று கேட்டால் ஆம் என்ற பதிலுக்கு உதாரணமாகத் திகழ்கிறார் காயத்ரி ஜெயராம். பிரபுதேவாவுடனான கிசுகிசுவுடன் அவரின் சிபாரிசும் சேர்ந்து கொண்டது. அம்மணியும் கவர்ச்சிக்குக் கட்டுப்பாடு தேவையில்லை. என்ற தாராள மனப் பான்மையுடன் செயற்படுவதனால் வாய்ப்புகள் காயத்ரி வீட்டுக் கதவைத் தட்டிக் கொண்டிருக்கின்றன.

புதிய படங்களில் மும்தாஜிற்குப் போட்டியோ என்று நினைக்கும் விதமாக உடை அணிந்து நடிப்பதற்குச் சம்மதித்திருக்கிறாராம். இப்படிக் கட்டுப்பாடு இல் லாமல் கவர்ச்சியாக நடித்தா கதாநாயகி யாக நிலைக்க முடியாதே'' என்று அம்மணியின் நலனில் அக்கறை கொண்டவர்கள் கேட்டதற்கு'' கவர்ச்சிக்குக் கட்டுப்பாடா...! அப்படி கட்டுப்பாடு போட்டவர்கள் தான் நிலைக்க முடியாது! என்று அடித்துக்கூறியிருக்கிறார்.

# ஆக்காரியாகிறார் லைலா

'நந்தா' படத்திற்குப் பின்னர் கரெக்டரில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளார் லைலா. தனது கரெக்டர் சிறப்பாக வரவேண்டுமென்பதற்காக அதிக சிரத்தை எடுத்து வருகின்றார். 'காமராசு' படத்தில் பூக்காரி வேடம் லைலாவுக்கு இதற்காக கோவில் வாசல், பூக்கடை போன்றவற்றில் பூவிற்கும்பெண்களின் நடை, உடை, பாவனைகளை உன்னிப்பாகக் கவனிக்கிறாராம். நடிப்பதைத்தத்ரூபமாக்குவதற்காக லைலா இப்படிச் செய்தாலும் லைலா ஏன் தங்களை அப்படிப்பார்க்கிறார் என்று தெரியாத அந்தப் பெண்கள் லைலாவைக் கண்டாலே ஓடி ஒளிந்து கொள்கிறார்களாம். லைலாவும் விடுவதாக இல்லையாம்.



# அம்மனுக்காக திரிசூல நடனம்

தேனாண்டாள் பிலிம்ஸ் சார்பில் ராம நாராயணன் இயக்கி வரும் படம் 'கோட்டை மாரியம்மன்'. இதில் ரோஜா அம்மன், பக்தை என இரு வேடங்களில் நடிக்க, தேவயானி, யுவராணி, நிழல்கள் ரவி, செந்தில், வெண்ணிற ஆடை மூர்த்தி, ராமிரெட்டி, பேபி அட்சயா ஆகியோரும் நடிக்கிறார்கள். இப் படத்தில் தேவா இசையில் 'ஸ்ரீரங்கநாதரின் தங்கச் சியம்மா வாழ்த்துச் சொல்வாள் மீனாட்சியம்மா' என்ற பாடல் கிராபிக்ஸ் உதவியுடன் படமாக்கப்பட்டது. அம்மன் வேடத்தில் இருக்கும் ரோஜா நடனம் ஆட, சந் தோஷத்தினால் அவரின் கையில் இருக்கும் சூலமும் தனியாகச் சென்று நடனமாடுவது போன்று காட்சிகள் படமாக்கப்பட்டன.

# மீனா காதலுக்கு டாட்டா

காதல், கல்யாணம் என்று பரபரப்பாகியிருந்தார் மீனா. அதனால் படங்களில் இடைவெளியும் ஏற்பட்டு விட்டது

இதனை உணர்ந்து கொண்ட லைலா காதலைக் கைகழுவி விட்டு காரியத்தில் இறங்கினார் அம்மணியின் முயற்சிக்குப் பலனும் கிடைத்திருக்கிறது. தமிழ் தெலுங்கு, மலையாளம் என இன்றைய திகதிக்கு மொத்தம் 12 படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

அத்துடன் சமீபத்தில் 'நாட்டாமை' யின் கன்னடப் பதிப்பில் விஷ்ணு வர்த்தன் ஜோடியாக நடிப்பதற்கும் ஒப்பந்தமாகி யிருக்கிறார்.

இந்த திடீர் மாற்றத்திற்குக் காரணம் கேட்டால், கார்த்திக் புகழ்பாட ஆரம்பித்து விடுகிறார். உண்மையும் அதுதானாம்.

சமீபத்தில் தென்னாபிரிக்கா சென்றிருந்த போது கார்த்திக் மீனா வுக்கு நிறைய அட் வைஸ்களை அள்ளி வழங்கினாராம்.

அட்வைஸ்களினால் மனம் இளகிய மீனா காதலைத் தூக்கிப் போட்டு விட்டு நடிப்பில் கவனஞ்செலுத்த ஆரம்பித்திருக்கிறார்.





# சொந்தக் குரலில் பேசுகிறார் ரம்பா

ரம்பா முதல் முறையாக தனது 'த்ரீ ரோஸஸ்' படத்திற்காக சொந்தக் குரலில் பேசப்போகிறார். அத்துடன் தானே ஒரு பாடலையும் பாடவிருக்கிறார்.

மூன்று கதாநாயகிகள் நடிக்கும் இந்தப் படத்தில் இந்த அழகான ராட்சசிகளை ஆட்டிப்படைப்பதற்கு அஜித், விஜய் என்று முன்னணி நடிகர்களைத்தான் முதலில் அணுகினாராம் ரம்பா. ஆனால் அவர்கள் நைஸாகப் பேசி மறுத்து விட்டிருக்கிறார்கள். இறுதியில் மூன்று ரோஸ்களையும் வைத்து மல்லுக்கட்டப் போகின்றவர் அர்ஜுன்.

# திரை மறைவில்

அசத்தலாகக் கதை சொல்லி குறைந்த சம்பளத்திற்கு மஜ்னுவின் காதலியின் பெயர் கொண்ட நடிகையை ஒப்பந்தம் செய்து விடலாம் என்ற நப்பாசையுடன் நடிகை வீட்டுக்குச் சென்றாராம் புதிய தயாரிப்பாளர். ஆனால் அங்கு சென்ற பின் நடிகையின் கன்னக்குழிச் சிரிப்பில் மயங்கிய தயாரிப்பாளர் நடிகை கேட்ட சம்பளத்தைக் கொடுத்து விட்டு நடையைக் கட்டியிருக்கிறார்.

* *

'நான் ஒரேயடியாக கவர்ச்சிக்கு முழுக்குப் போட்டு விட்டேன்' என்று யாரிடமும் சொன்னதில்லை. இப்படி ஸ்டேட்மென்ட் விடுத்துக் கொண்டிருக் கிறார் 'தாஜ்' நடிகை. அவர் மேலும் கூறுகையில், கவர்ச்சிதான் எனக்கு பிளஸ் பொயின்ட். அப்படியிருக்கும் போது நான் ஏன் கவர்ச்சியைக் கைவிட வேண்டும். கவர்ச்சியுடன் சேர்த்து இரண்டு மூன்று காட்சிகளிலாவது நடித்துவிட வேண்டும் என்பதும் எனது ஆசை. அதைத்தான் வெளிப்படையாகச் சொன்னேன். மற்றவர்கள் தவறாகப் புரிந்து கொண்டு வதந்தியைப் பரப்பி விட்டு விட்டார்கள் என்கிறார்.

* *



சுந்தரம் படம் — 'ஐ லவ் யூடா'

பரவசத்திற்குப்பிறகு குடை மட்டுமே பிடித்துள்ளதனால் மாதவம் செய்த நடிகர் இந்திப் பக்கம் தனது பார்வையைத் திருப்பியிருக்கிறார்.

* *

ரஜினி, கமல் போன்றோரின் படங்கள் பூஜையின் போது எல்லா ஏரியாக்களும் விற்பனையாகி விடுவதைப் போல இளைய தளபதியின் 'தமிழன்' படமும் பூஜையின் போதே, அனைத்து ஏரியாவும் விற்பனையாகியுள்ளது.

* *

ராஜு நடிகரைத் திருமணம் செய்து கொள் ளப் போகிறார் என்ற செய்தி வந்ததும் முதல் வேலையாக ரன் நடிகையை ஒரங்கட்டிய ரசிகர்கள் இப் போது யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு திருமணச் செய்தியை யாரும் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. இதனால் குழம்பிப் போயிருப்பவர் 'ஒளிமயமான நடிகைதானாம். தனக் குப் பின்னால் துரத்தி வந்த ரன் நடிகை திருமணஞ்செய்து கொண்டு வீட்டிற்குப் போய்விடுவார் என்று எதிர்பார்த்தார். ஆனால் 'ரன்' நடிகையோ 'பம்மல், பரவசம் என்று மளமளவென முன்னேறிவருகிறார்.

* *

நீண்ட காலம் காதலர்களாக இருந்து சமீபத் தில் இரகசிய திருமணம் செய்து கொண்டவர் கள் ரோஸும். சர்ச்சைக்குரிய இயக்குநரும். இப்போது இயக்குநரின் காதலுக்கு டாட்டா காட்டிவிட்ட ரோஸ் நடிகை. இயக்குநருக்குப் போட்டியாக தனது அண்ணனை களத் தில் இறக்கி விட்டிருக் கிறார். தான் தயா ரிக்கும் படத் தில் தனது அண்ணனையே இயக்குநராக்கியிருக்கிறார்.

* *

நடிகை ஷாலினியின் துணைவர் மணியான டைரக்டர் தனது புதிய படத்தின் இசையமைப் பாளர் யார் என் பதை இரகசியமாக வைத்தி ருக்கிறாராம். இதை அறிந்த கோடம் பாக்கத் தினர் படத்தின் கதையைத்தான் இரகசியமாக வைத்திருப்பார்கள். இவர் இசையமைப் பாளரை இரகசி யமாக வைத் திருக்கிறாரே. ஏதாவது விஷயம் இல்லாமலா இருக்கும்! என்று ஆளாளுக் குப் பேசிக் கொண்டிருக் கிறார்களாம்.

* *

வெற்றிகாந்துடன் இரண்டு படங்களில் இணைந்து நடித்தவர் 'வானி' நடிகை. இப்போது அவரது படங்களில் நடிக்கிறாரோ இல் லையோ. வெற்றிகாந்தின் விழாக்களில் தவறாமல் கலந்து கொள்கிறார். அது மட்டுமல் லாது தனக்கு வாய்ப்புத் தரும் படி வாய் விட்டே கேட்கிறாராம்.

சமீபகாலங்களில் வெற்றிகாந்த் கதாநாயகிகளை வேறு மாநிலங்களில் இருந்து கொண்டு வருவதனால் 'வானி'க்கு கை கொடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக் கிறாராம்.

* *

ஆட்சி மாற்றத்தினால் சூரிய சேனலில் தனது மெகா சீரியலிற்கு ஸ்பொன்சர் குறைந்து விட்டதை உணர்ந்து கொண்டுள்ளார் 'ரயில்' நடிகை. இதனால் சின்னத்திரையிலிருந்து பெரிய திரைக்கு தாவப் போகின்றார். முதற் கட்டமாகத் தானே படமொன்றைத் தயாரிக் கப் போகின்றார். கதா நாயகன் — வேறு யார்? அம்மணியின் காதல் கணவர் எம்.பி. சரத் குமார் தான்.

* *

பாண்டிச்சேரியில் பல வைன் ஷொப்களை நடத்தி வருகிறார் முன்னாள் வில் லன் நடிகர் ஆனந்தமான ராஜ்.

* *

மாமிச அயிட்டங்களை ஒரு கை பார்க்கும் தேவலோக ஆடலரசியின் பெயர் கொண்ட நடிகை கடந்த ஒரு மாத காலமாக சுத்த சைவமாக மாறி விட்டார்.

* *

கிறுக்கல் நடிகர் தனது அலுவலுகக் கேட்டிலும் முன் அனுமதி பெற்ற பின் அனுமதி என்று 'கிறுக்கல் டச்' கொடுத்துள்ளார்.


## Rain Bow Travels (Pvt) Ltd




No. 113, Chatham Street,
(Ground Floor)
Colombo-01.
T.P.:320645, 321072, 075-363341
Fax : 075-363343

நியாயமான விலையில் மகத்தான சேவை

மத்திய கிழக்கு நாடுகள், அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், லண்டன், சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்திரேலியா, சென்னை, திருச்சி, திருவானந்தபுரம் போன்ற நாடுகளுக்கு விமானச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாம்

வெள்ளவத்தையில்

Sathu Travels, Communication and Agency Post office



429 C, Galle Road,
Wellawatte, Colombo -06.
T.P.: 075-557311-2, 075/550076
Fax : 075-522491

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கான விமானப் பயணச்சீட்டுக்களை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளவும்.

அத்துடன் எமது முகவர் தபால் நிலையமூடாக வெளிநாடுகளில் வசிக்கும் நண்பர்கள், உறவினர்களுக்கு தேவையான உடுதுணிகள், உணவுப் பொருட்கள், அன்பளிப் புக்கள் ஆகியவற்றை விரைவில் அனுப்பி வைப்பதற்கு, உத்தவாதம் வழங்கப்படும்.

24 மணி நேர சேவை

இதர சேவைகள் IDD, Local, Fax, Laminating, Translation, Typing. net2 Phone

# காலில் ஏற்படும் கடிக்கு செருப்பை மாற்றி விடிவு

கே : எனக்கு 62 வயது (ஆண்). கடந்த 12 வருடங்களாக எனக்கு நீரிழிவு நோய் இருந்து வந்தது. அதற்கு பல்வேறு வகையான ஆங்கில மருந்துவகைகளைப் பாவித்து வந்தேன். நோய் குணமாகவில்லை. கடந்த 6 மாதங்களாக இயற்கையான மூலிகைகளில் இருந்து தயாரிக்கப் பட்ட வில்லைகளைப் பயன்படுத்தி வருகிறேன். தற்பொழுது உடல் தென்பாக இருப்பதுடன் நீரிழிவு நோய்க்கான எந்த அறிகுறியும் இல்லை. இரத்தத்தில் உள்ள சீனி யின் அளவும் இப்பொழுது சாதாரண நிலையில் இருக்கிறது. இவ்வாறான இயற்கையான நடைமுறைகள் மூலம் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமான உங்கள் அபிப்பிராயம் என்ன? மூலிகைகளினாலும் ஆங்கில மருந்துகள் போல் பக்கவிளைவுகள் ஏற்படுமா? எனக்கு ஏற்பட்டுள்ள இந்த அனுபவத்தை எல்லோரிடமும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ப : கலிபோனியாவில் உள்ள சுகாதார சேவைகள் திணைக்களம், நீரிழிவு நோய்க்காக பயன்படுத்தப்படும் 5 வகையான மூலிகை மருந்துகளைப் பயன்படுத்த வேண்டாம் என எச்சரிக்கை விடுத்துள்ளது. இவ்வாறு பயன்படுத்த வேண்டாம் என அறிவுறுத்தப்பட்ட மூலிகை மருந்துகளில் *Tangyi Tang Angel capsules, Pearl capsules* போன்றவையும் அடங்கும். இந்த மருந்துகளில் மூலிகைகள் மட்டுமே இருப்பதாகக் கூறப்பட்டது.

ஆனால் இவற்றை இரசாயன முறையில் பகுப்பாய்வு செய்த பொழுது இவற்றில் உடலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய சில பதார்த்தங்களும் நீரிழிவு நோய்க்காக பயன்படுத்தப்படும் சில ஆங்கில மருந்துகளும் (கிலிபென்கிளமைட், மெற்போமின்) இருக்கக் காணப் பட்டன. இலங்கையில் இவ்வாறான பல மூலிகை மருந்துகள் விற்பனை யாகின்றன. இவை ஒவ்வொன்றினதும் பாதுகாப்புத் தன்மையை பகுப்பாராய்வு செய்வதற்கான வசதிகள் இலங்கையில் போதியளவு இல்லை. எனவே இவற்றைப் பயன்படுத்துவதால் ஆபத்து ஏற்படக் கூடும்.

தற்பொழுது இருக்கும் எந்த மருந்துகள் மூலமும் நீரிழிவு நோயைக் குணப்படுத்த முடியாது. ஆனால் நல்லமுறையில் கட்டுப் படுத்த முடியும். சிலவருடங்களுக்கு முன் நீரிழிவு நோயைக் குணபடுத்த வென இயற்கையான மூலிகை மருந்து என்று சொல்லி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இதை பலர் பயன்படுத்தினர். அவர்களுக்கு நீரிழிவு நோய் நல்லமுறை யில் கட்டுப்பாட்டுக்குள் வந்ததுடன் நீரிழிவு நோய் குணமாகிவிட்டது போன்ற தோற்றப்பாடும் ஏற்பட்டது. ஆனால் அவர்களின் சிறுநீரகங்கள் பழுதடைந்தன. சிறுநீரகங்கள் பழுதடையும் பொழுது நீரிழிவுநோய் குண மாவது போன்ற தோற்றப்பாடு ஏற்படும்.

நீங்கள் குறிப்பிட்டுள்ளது போல நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு இயற்கையான முறைகளான ஒழுங்கான உடற்பயிற்சி, மேலதிக உடல்நிறையைக் குறைத்துக் கொள்ளுதல், உணவிலே இலை வகை, மரக்கறிவகைகளை அதிகமாகச் சேர்த்து மாத்தன்மையுள்ள உணவு வகைகளை குறைத்துக் கொள்ளுதல் இனிப்பான உணவுகளைத் தவிர்த்துக் கொள்ளுதல் போன்றவற்றை கடைப் பிடிப்பதே மிகச்சிறந்தது. இந்த முறை கள் மூலம் இது பூரணகட்டுப்பாட்டிற் குள் வராவிட்டால் மட்டுமே இதற்கு மேலதிகமாக மருந்து பாவிக்க வேண்டி ஏற்படுகிறது. ஆனால் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு மூலிகை மருந்துகளைப் பாவிப்பது பாதுகாப்பானது அல்ல.

தற்பொழுது உள்ள எந்த மருந்தினாலும் நீரிழிவு நோயைக் குணமாக்க முடியாது. ஆனால் கட்டுப்படுத்த முடியும்.

கே : எனது வயது 28 (பெண்). கடந்த 2 வருடங்களாக கால்களில் ஒரே கடி இருந்து வருகிறது. அடிப்பாதத்திலும் மேற்காலிலும் இந்தக்கடி இருக்கிறது. அடிக்கடி சொறிந்து கொள்வதனால் தோல் சற்று கறுத்தும் காணப்படுகிறது. ஒரு மருத்துவரிடம் காட்டிய போது இது செருப்பிலே காணப்படும் றபர் மூலம் உடலில் ஏற்படும் அலேஜி என்றும் (ஒவ்வாமை) வேறுவகையான செருப்பை பாவிக்குமாறும் தெரிவித்தார். இப்பொழுது வேறுவகையான செருப்பையே அணிகிறேன். கடி தொடர்ந்து இருக்கிறது. செருப்பு அணியாத நாட்களில் கடி குறைவு. இதற்குஎன்ன செய்யலாம். இந்த நோயை மாற்ற முடியாதா?



ப : உங்களுக்கு மருத்துவர் குறிப்பிட்டது போல செருப்பில் உள்ளறபருக்கு உங்கள் உடலில் ஏற்படுகின்ற அலேஜி அல்லது ஒவ் வாமை காரணமாகவே இது ஏற்படுகின் றது. இதனை மாற்றுவதற்கு ஒரேவழி றபரினால் செய்யப்பட்ட செருப்புக ளைத் தவிர்த்து தோலினால் செய்யப் பட்ட செருப்புகளை அணிவதாகும்.

உங்களைப் போலறபருக்கு ஒவ் வாமையுள்ள ஒருவரின் காலின் படம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது. ஒவ்வாமை காரணமாக காலிலே செருப்பின் வடிவில் அடையாளம் ஏற்பட்டிருக் கிறது. இவ்வாறு அடையாளம் ஏற்பட்டால் அது மாறுவதற்கு சில காலம் எடுக்கும். சிலசமயம் இதில் கிருமி தொற்றுதல் களும் ஏற்படலாம். எனவே நீங்கள் இப்படி ஏற்படுவ தைத் தடுப்பதற்கு இன்றே தோலி னால் செய்யப் பட்ட செருப்பை பாவிக்க ஆரம்பியுங்கள்.

கே : எனக்கு (ஆண்) திருமணமாகி 3 வருடங்கள் ஆகின்றன. குழந்தைகள் இல்லாததால் நாம் மிகவும் மனவேத னையுடன் இருக்கின்றோம். எமக்கு குழந்தைகள் இல்லாததற்கு காரணம் நாம் குடும்பமாக இருக்கும் பொழுது விந்து வராதது ஆகும். அத்துடன் வீரியக்குறைவும் இருக்கிறது. சுயஇன்பத்தின் போது விந்துவருவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. நாம் மிகவும் ஒற்றுமையாக இருந்தாலும் இந்தக் குறைபாடு காரணமாக நாம் மிகவும் மனக் கஷ்டத்திற்கு உள்ளாகி இருக்கிறோம். இந்தப் பிரச்சினையை வெளியில் சொல்ல வெட்கமாகவும் இருக்கிறது. சுடர் ஒளியின் இந்தப் பகுதி பலரது வாழ்வில் ஒளியைக் கொடுப்பதைப்போல் எமது இருண்ட வாழ்விலும் ஒளியைக் கொடுக்கும் என எதிர்பார்த்து காத்திருக்கிறோம்.

ப : உங்களுக்கு அடிப்படையாக இருக்கும் பிரச்சினை வீரியக்குறைவே. வீரியக்குறைவு உள்ளவர்களுக்கு உறவின்போது விந்து வெளியேறாமல் இருக்கலாம். அதுவே உங்களுக்கு இருக்கிறது. இந்த வீரியக்குறைவை நிவர்த்தி செய்யமுடியும். அதற்காக நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து சுடர் ஒளியில் பிரசுரமாகியிருந்தது. வாசித்திருப் பீர்கள். என்று நினைக்கிறேன்.

இத்துடன் உங்களுக்கு சில்டி னாபில் என்று சொல்லப் படுகின்ற எடிக்ரா (*Edigra*) என்ற குளிசை மிகவும் பயனுள்ளதாக இருக்கும். வைத்தியர் ஒருவரின் நேரடியான அனுமதியுடன் *50mg* வலுவுள்ள இந்த குளிசையை உறவு கொள்வதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன் பயன்படுத் திக் கொண்டால் உங்கள் பிரச்சினை நீங்கிவிடும். குழந்தை தங்குவதிலும் பிரச்சினை இருக்காது.

உங்களுக்கு குழந்தை ஒன்று உருவாவதுதான் முக்கியமான பிரச்சினையாக இருந்தால் மகப்பேற்று வைத்திய நிபுணர் ஒருவரின் உதவியு டன் உங்களின் விந்தை உங்கள் மனை வியின் கருப்பையினுள் செயற்கை யான முறையில் செலுத்திக் கொள் வதன் மூலம் குழந்தையை தங்கச் செய்யலாம்.

நீங்கள் நிச்சயமாக ஒரு குழந்தை யைப் பெற்றுக்கொள்ள முடியும். கவலைப்படவேண்டாம். வைத்தி யரை அணுகி உங்களுக்கு இருக்கும் இவ்வாறான பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடுவதில் தயக்கம் காட்ட வேண்டிய அவசியமில்லை.

கே : எனது வயது 27 (ஆண்). எனக்கு கடந்த ஒருவருட காலமாக வாய் ஒரே நாற்றமாக உள்ளது. இதற்கு நான் அல்சர் என்றுதான் மருந்து எடுத்தேன். மாறவில்லை. வயிற்றில் இருந்துதான் இந்த மணம் வருகிறது. இதனால் பேசுவதற்கே எனக்கு கூச்சமாக இருக்கிறது. (மற்றவர்கள் இந்த மணம் காரணமாக முகம் சுழிப் பார்களோ என்ற பயம்.) எனக்கு பற்சூத்தை, முரசுகரைதல் போன்றன இல்லை. சுகதேசியாக இருக்கிறேன். வேறு எந்தவிதமான நோய்களும் இல்லை. ஏன் எனக்கு இவ்வாறு ஏற்பட்டிருக் கிறது. இதனைப் போக்குவதற்கு என்ன மருந்து சாப்பிடலாம்.

இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் சி.சிவன்சுதன். நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:—
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
36/2, பிரெட்றிகா வீதி,
கொழும்பு — 06.

ப : உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த வாய் மணக்கும் நிலையை ஹலிரோசிஸ் (*Halitosis*) என்று சொல்லுவார்கள். இது பலருக்கு இருக்கிறது. இதனால் உங்களைச் சுற்றியிருப்பவர்களே பெரிதும் அசௌகரியத்திற்கு உள்ளாகிறார் கள். காரணம் இந்த நிலையினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு தமது வாயின் மணம் தெரிவதில்லை.

இது ஏற்படுதவற்கு பிரதான மான காரணம் பல் இடுக்குகளில் சிறு உணவுப் பருக்கைகள் தங்கி அவை பக்ரீரியா தாக்கத்திற்கு உட் பட்டு அவற்றிலிருந்து துர்நாற்ற முள்ள வாயுக்கள் வெளிவருதல் ஆகும். சிலருக்கு இது ஏற்படுவதற்கு அவர்களின் பல்லின் அமைப்பும் வாய்க்குழியின் அமைப்பும் வாய்ப்பாக அமைந்து விடுகின்றன. உங்களுக்கும் இதன் காரணமாகவே இந்த வாய்மணம் ஏற்படுகின்றது.

எனவே நீங்கள் இதனைத் தடுப்பதற்கு ஒவ்வொரு தடவையும் ஏதாவது உணவு உண்டபின் பற் தூரிகை களைப் பாவித்து பல் துலக்க வேண்டும். இதன்போது தர மான பற்பசைகளைப் பாவித்தல் நல்லது. உங்களது பற்களை ஒரு பல் வைத்தியரிடம் காட்டி பற்களை ஒரு தடவை சுத்தம் செய்து கொள்வது டன் பற்களின் ஏதாவது துவாரங்கள் இருக்கின்றனவா என்பதையும் சோதித்துப் பார்த்துக் கொள்ளுங் கள். இவ்வாறு பற்களில் உள்ள துவாரங்களில் அல்லது பற்சூத்தை களில் பக்ரீரியாக்கள் பெருக்கமடை வதாலும் இது ஏற்பட முடியும். நீங்கள் இதற்கு மேற்கூறப்பட்டவாறு தகுந்த பரிகாரம் தேடாவிட்டால் நோயை ஏற்படுத்தக் கூடிய இந்தக் கிருமிகள் உடலினுள் பரவி பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும்.

ஹலிரோசிஸ் என்னும் பல் சம்பந்தப்பட்ட நோயினாலேயே வாய் மணம் ஏற்படுகிறது.

வயிற்றில் ஏற்படும் நோய்களோ அல்லது அல்சர் வருத்தமோ வாய் மணப்பதற்கு காரணமாக அமையமாட்டா. நுரையீரலில் ஏற்படுகின்ற சிதற்கட்டி அல்லது நீண்டகால கிருமித் தொற்றுகை (*Bronchiectasis*) என்பவற்றாலும் இந்த வாய்மணக்கும் நிலை ஏற்படலாம். பொதுவாக இந்த நோயாளர்களுக்கு இருமலும் உடல்நலக்குறைவும் இருக்கும். எனவே உங்கள் பிரச்சினைக்கு இது காரணமாக இருக்கமுடியாது. எனவே நீங்கள் மேற்குறிப்பிட்ட முறையைக் கையாண்டு உங்கள் பிரச்சினை யிலிருந்து தீர்வு பெறுங்கள்.

## வாசகர் இதயம் பேசுகிறது

நவம்பர் 25 இல் வெளியான "படையினரின் வாசற் படிக்கு வந்த தற்கொலைத் தாக்குதல்", "சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டுமா", "அதிகாலை வேளை புலிகள் தீர்த்த முதல் வேட்டு", "முரண்டு பிடிப்பதில் பயன் இல்லை, நிபந் தனையற்ற பேச்சு மூலம் தீர்வு", "வீதி நாட கங்கள் மூலம் கவரும் தமிழர் கூட்டமைப் பின் பிரசாரம்" போன்ற சூடான செய் திகள் மூலம் "வாசிக்கும் நெஞ்சங்களை யோசிக்க வைக்கும் ஒரே பத்திரிகை சுடர் ஒளி.

**கே. அக்கீத், செட்டிகுளம்.**

சுடர் ஒளியில் சமகால நிகழ்வுகள் உடனுக்குடன் பிரசுரமாவது வியப்பில் ஆழ்த்துகிறது. வாசகர்களை நன்கு கவரு கிறது. எனினும் இளம் சந்ததியினர் எமது வரலாற்றை அறிந்து கொள்வதில் கஷ்டங் களை எதிர்நோக்குகின்றனர். ஆகவே இந்தக் குறை விரைவில் தீர்க்கப்படவேண்டும்.

**செ. ஸ்ரீரகுநாதன், ஆனைவிழுந்தான்.**

ஒவ்வொரு வாரமும் சுடர் ஒளி படிக்கா விட்டால் என்னுடைய வாழ்கையில் ஒளி மங்கியது போல் இருக்கின்றது. அதிலும் டாக்டர் சிவன்சுதனின் மருத்துவ ஆலோ சனை, கேள்வி பதில்கள் சிறப்பாக உள்ளன.

**க. சீத்தாராம், முள்ளியவளை.**

உனது வாசக நெஞ்சங்களில் நானும் ஒருவன், உனது அத்தனை அம்சங்களும் சூப் பர். ஏன் தொடர்கதை இன்னமும் இல்லை. மேலும் வடபுலச் செய்திகள், ஓயாத அலைகள், சிறுகதை, கவிதை அத்தனைக்கும் சபாஷ்கள்.

**த.ரவிவர்மன், வவுனியா.**

வன்னிப் பகுதியில் தங்களின் சுடர் ஒளி பத்திரிகை எமக்கோர் வரப்பிரசாதம். சுடர் ஒளி ஜனரஞ்சகமான பத்திரிகையாகத் திகழ்கின்றது. அதே வேளை என்போன்ற படைப்பாளிகளையும் வளர்க்கின்றது.

போர்ச் சூழலின் மத்தியில் வாழும் எம் மக்களின் யதார்த்த நிகழ்வுகள் சுடர் ஒளியில் படைப்புக்களில் பிரதான கருத்தாக அமைகின்றன.

**அ.பிரியன், கிளிநொச்சி.**

சுடர் ஒளி சிறுகதைகள் என்னை மிகவும் கவர்ந்து வருகின்றன. சுடர் ஒளி பத்திரிகை யில் வெளிவரும் சகல விடயங்களும் அபா ரம். அரசியல் பகுதி மிகவும் நன்றாக இருக்கி றது. வெளிவராத செய்திகளை எல்லாம் சுடர் ஒளி வாரமலர் இனிமையான மொழியில் அள்ளித்தருகின்றது.

**ந. யோகராஜா, வாழைச்சேனை.**

நவம்பர் 18 சுடர் ஒளியில் வெளிவந்த "தேர்தலில் தமிழர் வழங்கிய ஆணை எப்பொ ழுதாவது நிறைவேறியதா?" என்னும் கட் டுரை மிகவும் நன்றாக இருந்தது. மேலும் ஓயாத அலைகள் தொடர் உணர்வு பூர்வமாக உள்ளது. மொத்தத்தில் உன் அனைத்து அம்சங்களும் சிறப்பு.

**க. மதிவதனி, புலோலி.**

நவம்பர் 25 சுடர் ஒளியில் வெளிவந்த "கையில் காசு வாயில் தோசை இந்தக் கதை எத்தனை நாளைக்கு?" தேரடி அரட்டை எம் எல்லோரையும் சிந்திக்க வைக்கிறது. இப்படியான சுவையான ஆக்கங்களை பேச்சுத் தமிழில் தேரடியில் எழுதும் ஏகலைவனுக்கு எமது பாராட்டுக்கள்.

**சோபனா, வவுனியா.**

சுடர் ஒளி அரசியல் அம்பலம் பகுதி முன்னரைவிடச் சிறப்பாக இருக்கிறது. மேலும் மேலும் அப்பகுதி சிறக்க எனது வாழ்த்துக்கள்.

**வாசன், மன்னார்.**



# அவுஸ்திரேலிய அணியின் முதலிடத்திற்கு அச்சுறுத்தல்

அவுஸ்திரேலிய, நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடர் வெற்றிதோல்வியின்றி முடிந்தது.

கடந்த வருடம் நடைபெற்ற இவ்விரு அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலிய அணி 3-0 விகிதத்தில் வெற்றிபெற்றிருந்தது. இதனால் இம்முறையும் அவுஸ்திரேலிய அணியே ட்ரான்ஸ் டாஸ்மன் வெற்றிக்கிண்ணத்தை தக்கவைத்துக் கொண்டது.

ஆனால் டெஸ்ட் தரவரிசையில் அவுஸ்திரேலியாவின் முதலிடத்திற்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் முதல் ஐ.சி.சி டெஸ்ட் சாம்பியன்ஷிப்பிற்கான தரப்படுத்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

நியூஸிலாந்துடனான டெஸ்ட் தொடர் ஆரம்பிப்பதற்கு முன் 1.62 சராசரியுடன் முதலிடத்தில் இருந்தது அவுஸ்திரேலியா.

டெஸ்ட் தொடர் முடிவடைந்த பின் அதன் சராசரி 1.54 ஆக குறைந்துள்ளது.

தென்னாபிரிக்கா 1.50 சராசரியுடன் இரண்டாமிடத்தில் உள்ளது. அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அவுஸ்திரேலியா தனது முதலிடத்தைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டுமானால் தென்னாபிரிக்காவுடனான தொடரில் வெற்றிபெற்றேயாக வேண்டிய கட்டாயத்திலுள்ளது.

இதேவேளை அவுஸ்திரேலிய, நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தமை குறித்து இரு அணித் தலைவர்களும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

மூன்றாவதுபோட்டியில் நியூஸிலாந்து அணி வலுவான நிலையில் இருந்தது. அவுஸ்திரேலிய அணி வெற்றிபெறுவதற்கு இரண்டாவது இன்னிங்ஸில் 440 ஓட்டங்கள் பெறவேண்டியிருந்தது.

இறுதிநாள் ஆட்டமுடிவின்போது 7 விக்கெட் இழப்பிற்கு 381 ஓட்டங்களைப் பெற்றது அவ்வணி. நடுவர் இயன் ரொபின்சன் அளித்த சில தவறான தீர்ப்புகள் அவுஸ்திரேலிய அணிக்குச் சாதமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

### ஐ.சி.சி டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளிகள் விவரம்

| | தொடர் | வெற்றி | தோல்வி | வெ.தோ.இ | புள்ளி | சராசரி |
|---|---|---|---|---|---|---|
| 1. அவுஸ்திரேலியா | 13 | 9 | 2 | 2 | 20 | 1.54 |
| 2. தென்னாபிரிக்கா | 16 | 11 | 3 | 2 | 24 | 1.50 |
| 3. இங்கிலாந்து | 14 | 7 | 5 | 2 | 16 | 1.14 |
| 3. இலங்கை | 14 | 7 | 5 | 2 | 16 | 1.14 |
| 5. நியூஸிலாந்து | 15 | 6 | 6 | 3 | 15 | 1.00 |
| 6. மே.இ.தீவுகள் | 14 | 6 | 7 | 1 | 13 | 0.93 |
| 7. பாக்கிஸ்தான் | 15 | 3 | 7 | 5 | 11 | 0.73 |
| 8. இந்தியா | 13 | 3 | 7 | 3 | 9 | 0.69 |
| 9. ஸிம்பாப்வே | 16 | 3 | 11 | 2 | 8 | 0.50 |
| 10. பங்களாதேஷ் | 2 | 0 | 2 | 0 | 0 | - |

(வெ.தோ.இ: வெற்றி தோல்வியின்றி முடிந்தவை)

# குளிர்கால ஒலிம்பிக்கின்போது விமானங்கள் பறக்கத் தடை!

19 ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் அமெரிக்காவின் சோல்ட்லேக் சிட்டி நகரில் அடுத்த வருட ஆரம்பத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளுக்காக முன்னெப்போதும் இல்லா தளவு உயர்பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த செப்டெம்பர் மாதம் பயணிகள் விமானங்களைக் கடத்தி நியூயோர்க் வாஷிங்டன் நகரங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.



ரோச்

இவ்வாறான தாக்குதல் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளின் போதும் நடைபெறாமல் தவிர்ப்பதற்காக கடும்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சோல்ட்லேக் சிட்டி நகரத்திலிருந்து 50 மைல் (80 கி.மீ) சுற்று வட்டாரத்தில் விமானங்கள் பறப்பதற்குத் தடை விதிக்கப்படவுள்ளது.

அனுமதி பெறாமல் பறக்கும் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்படவுள்ளன.

சர்வதேச ஒலிம்பிக் குழு வின் தலைவர் ஜாக் ரோச் கடந்த வாரம் இத் தகவலைத் தெரிவித்தார்.

"எவரேனும் 100 சதவீத பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க முடியாது. ஆனரல் எம்மால் முடிந்தளவு சகல பாதுகாப்பு ஏற்பாடுகளையும் நாம் மேற்கொள்வோம்.

போட்டிகள் நடைபெறும் போது ஏனைய நகர மக்களை விட சோல்ட் சிட்டியில் வசிக்கும் மக்கள் சிறந்த பாதுகாப்பைப் பெறுவர்."

இவ்வாறு ஜாக் ரோச் கூறினார். கடந்த ஜூலை மாதம் இவர் சர்வதேச ஒலிம்பிக் குழுவின் புதிய தலைவராகப் பொறுப்பேற்றார். அதன்பின் நடைபெறும் முதலாவது மிகப் பெரிய விளையாட்டுவிழா சோல்ட் லேக் சிட்டி குளிர்கால ஒலிம்பிக் விழாவாகும்.

# சனத் ஜயசூரிய விளையாட்டரங்கு

இலங்கைக் கிரிக்கெட் அணியின் தலைவர் சனத் ஜயசூரியவின் பெயரில் விளையாட்டு மைதானமொன்று அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

மாத்தறை கொட்டுவேகொடையில் இம்மைதானம் அமைந் துள்ளது.

நகர அபிவிருத்தி, வீடமைப்பு அபிவிருத்தி பொதுவசதிகள் அமைச்சர் மங்கள சமரவீர இம்மைதானத்தைத் திறந்து வைத்தார். அர்ஜுன ரணதுங்க, முத்தையா முரளிதரன், பிரமோதய விக்ரமசிங்க, சுசந்திகா ஜயசிங்க ஆகிய விளையாட்டு நட்சத்திரங்களும் இவ்வைபவத்தில் பங்குபற்றினர்.

இலங்கை அணித்தலைவர் சனத் ஜயசூரிய மாத்தறை கொட்டுவே கொடையைச் சேர்ந்தவராவார். அவர் மாத்தறை சென். சேர்வேசஸ் கல்லூரியில் கல்வி கற்றார். அக்காலத்தில் அவர் கிரிக்கெட் பயிற்சிபெற்ற விளை யாட்டுத் திடலில் புதிய பஸ் நிலையம் அமைக்கப்பட்டது.

இதையடுத்து பழைய பஸ் நிலையம் தற்போது சனத் ஜயசூரிய விளையாட்டரங்காக மாற்றப்பட்டுள்ளது.

இதற்காக நகர நிர்மாணத்துறை விளையாட்டுத்துறை அமைச்சு பல மில்லியன் ரூபாவை செலவு செய்துள்ளது.

கொட்டுவே கொடையைச் சேர்ந்த ஐந்து பாடசாலைகளுக்கு இம் மைதானத்தைப் பாவிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# பின்லேடனைப் பிடிப்பதற்கு விம்பிள்டன் டென்னிஸ் வீரர்

"சர்வதேச தீவிரவாதி ஒசாமா பின்லேடனை பிடிப்பதற்கு என்னை அனுப்பக்கூடும்." இவ்வாறு விம்பிள்டன் டென்னிஸ் சாம்பியன் கொரன் இவான்செவிக் கூறினார்.



இவான்செவிக்

இவான்செவிக் இராணுவ சிப்பாயாகியுள்ளார். குரேஷிய நாட்டைச் சேர்ந்தவர் இவான் செவிக். அந்நாட்டவர் 6 மாத காலம் கட்டாய இராணுவச் சேவையில் ஈடுபடவேண்டும்.

இதற்கிணங்கவே இராணுவத்தில் இணைந்துள்ளார். இவான் செவிக். கடந்த செப்டெம்பரில் இவான்செவிற்கு உடல் தகுதி சோதனை நடந்தது. இதில் அவர் தகுதிபெற்றார்.

இருவாரகால இராணுவப் பயிற்சி பெறவுள்ளார் இவான். டிசம்பர் 15ஆம் திகதி இராணுவ சத்தியப்பிரமாணம் செய்வார்.

கடந்த செவ்வாயன்று இவர் பயிற்சிகளை ஆரம்பித்தார். "இனி குரோஷிய மக்கள் நிம்மதியாக உறங்கலாம். ஏனெனில் நானும் பாதுகாப்புப் படை உறுப்பினராகி விட்டேன்.

நான் ஆரம்பப் பயிற்சிகளைப் பெறவேண்டியுள்ளது. அதன்பின் ஒசாமா பின் லேடனைப் பிடிப்பதற்கு என்னை அனுப்பக் கூடும்." இவ்வாறு இவான் செவிக் வேடிக்கையாகக் கூறினார்.

இராணுவத்தில் பணியாற்றும் காலத்திலும் இவான்செவிக் போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப் படுவார்.

30 வயதான இவான்செவிக் கடந்த ஜூலை மாதம் விம்பிள்டன் சாம்பியனானார். தற்போது உலக டென்னிஸ் தர வரிசையில் 13ஆவது இடத்தில் உள்ளார்.

## உலகக்கிண்ணக் கால்பந்தாட்டம்:

# தென்கொரியா கோலாகலம் வடகொரியா அலட்சியம்

அடுத்தவருடம் உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் ஜப்பானிலும் தென்கொரியாவிலும் நடைபெறவுள்ளன. இப்போட்டிகளுக்கான குலுக்கல்கள் கடந்த முதலாம் திகதி தென்கொரியாவில் விமர்சையாக நடந்தது. ஆனால் அயல் நாடான வடகொரியா இப்போட்டிகள் பற்றி அலட்டிக் கொள்ளவில்லை.

உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டிகளை இரு நாடுகள் கூட்டாக நடத்துவது இதுவே முதல் முறை. மூன்றாவது நாடாக வடகொரியாவையும் இதில் இணைத்துக் கொள்ள சர்வதேச கால் பந்தாட்டச் சம்மேளனம் (ஃபீஃபா) தயாராக இருந்தது.

64 போட்டிகளில் ஓரிரு போட்டிகளை வடகொரியாவில் நடந்த ஃபீஃபா விரும்பியது. இது தொடர்பான அழைப்பிதழ்கள் வடகொரிய பிரமுகர்களுக்கு அனுப்பப்பட்டன. ஆனால் இதற்கு வடகொரியா பதில் அனுப்பவில்லை. இதனால் உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் முதல்தடவையாக மூன்று நாடுகளில் நடைபெறும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டது.

ஃபீஃபா வில் 204 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இவற்றுள் 6 நாடுகள் மட்டும் உலகக் கிண்ணத் தகுதிகாண் போட்டிகளில் பங்குபற்றவில்லை. இவற்றுள் வடகொரியாவும் ஒன்றாகும்.

தென்கொரியாவும், ஜப்பானும் போட்டிகளை நடத்தும் நாடுகள் என்ற வகையில் நேரடியாக இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றன. ஆனால் வட கொரியாவில் போட்டி நடத்தப்பட்டாலும் அந்நாட்டு அணி போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்பட மாட்டாது என்பது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டுச் செய்திகள்!


-ஆர். சேதுராமன்

# ரசிகர்களின் திருப்தியே முக்கியம்

## - கிப்ஸ் கூறுகிறார்

தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணியில் ஹேர்சல் கிப்ஸ் முக்கியமான ஒருவர். டெஸ்ட் ஒரு நாள் இரண்டு போட்டிகளிலும் முத்திரை பதித்துள்ளார். இது தவிர, உலகத்தரம் வாய்ந்த களத் தடுப்பாளர் என்று ஜொன்டி ரோட்ஸாலேயே பாராட்டுப் பெற்றவர்.

கடந்த வருடம் இந்தியாவில் போட்டிகளில் பங்குபற்றச் சென்ற போது நாக்பூரில் நடந்த ஒருநாள் போட்டியில் 20 ஓட்டங்களுள் ஆட்டமிழப்பதாக சூதாட்டக் காரர்களிடம் சம்மதம் தெரிவித்து விட்டார்.



கிப்ஸ்

இதற்காக அவருக்கு பேசப்பட்டத் தொகை 15 ஆயிரம் அமெரிக்க டொலர்கள். ஆனால் அப் போட்டியில் அதிரடியாக 74 ஓட்டங்களைக் குவித்ததால் பணம் கொடுக்கப் படவில்லை.

இந்த சர்ச்சையில் சிக்கி கிரிக்கெட் விளையாட ஆறு மாதகாலம் தடை விதிக்கப்பட்டது. பழைய கதையெல்லாம் மறந்து விட்டு இப்போது நிம்மதியாக கிரிக்கெட் விளையாடுகிறார் கிப்ஸ். அவர் அளித்த பேட்டியொன்றின் சில பகுதிகள் பின் வருமாறு:

*கே: இந்த ஆண்டில் (2001) மூன்று சதம், ஐந்து அரைச்சதம் என்று கலக்கியிருக்கிறீர்கள். இது சிறப்பான வருடம் தானே?*

ப: இந்த ஆண்டின் துவக்கம் திருப்திகரமாக இல்லை. ஆட்டநிர்ணய விவகாரத்தில் தண்டனைக்குப் பிறகு, நான் விளையாடிய முதல் போட்டியின் இரண்டு இன்னிங்ஸ்களில் 0,1 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது. அதன் பின் எனது விடா முயற்சி தான் என்னை உயர்த்தியது.

*கே: திடீரென்று விஸ்வரூபம் எடுக்க என்ன விசேட பயிற்சி செய்தீர்கள்?*

ப: நன்றாக விளையாடுவது என்பது அனுபவத்தைப் பொறுத்த விஷயம். அனுபவம் கூடும்போது திறமை தானாக அதிகரிக்கும்.

*கே: துடுப்பாட்டத்தில் உங்கள் பாணி என்ன?*

ப: கிரிக்கெட்டுக்காக நிறைய பணம், நேரம் ஆகியவற்றை செலவிட்டு வரும் ரசிகர்களை திருப்திப்படுத்த வேண்டும். எனது ஆட்டம் அவர்கள் கொடுத்திருக்கும் பணத்தைப் பயனுள்ளதாக்கவேண்டும். அவ்வளவு தான்.

*கே: கிரிக்கெட்டில் உங்களின் இந்த வளர்ச்சிக்குக் காரணம் யார்?*

எனது தந்தை ஹெர்மன். என்னை ஊக்கப் படுத்திய பயிற்சியாளர் இவர் தான்.

*கே: ஆட்டநிர்ணய சர்ச்சைக்குப் பின் உங்கள் மனநிலை எப்படி இருந்தது?*

ப: உண்மையில் அந்த நாட்களை நான் மறக்கவே விரும்புகிறேன். கிரிக்கெட் ஆட எனக்கு ஆயுட்கால தடை விதித்து விடுவார்களோ என்று கலங்கிப் போயிருந்தேன். நல்ல வேளையாக ஆறுமாத தண்டனையுடன் முடிந்து விட்டது.

தடைக்குப் பின் டெஸ்ட் விளையாட வந்த போது, அணியினர், ரசிகர்கள் என்னை ஏற்றுக் கொள்வார்களா என்ற பயம் இருந்தது. ஆனால் சக வீரர்கள் என்னிடம் அன்பாக நடந்து கொண்டனர். கேப்டவுன் ரசிகர்கள் எனக்கு உற்சாகமளித்தனர். அதனால் தான் எந்த நெருக்கடியும் இல்லாமல் என்னால் இயல்பாக விளையாட முடிந்தது.

# மட்டக்களப்பு மாவீரர் தினத்தில் தரவையில் கூடிய ஜனசமுத்திரம்

## போராளிகளைப் பெற்றோர் கட்டித் தழுவினர்

எந்த ஓர் அரசுக்கும் அரசபடைகளுக்கும் இல்லாத அச்சத்தை ஸ்ரீலங்கா படையினருக்கு ஏற்படுத்துவது மாவீரர் வாரத்தின் இறுதி நாள். அந்த வாரத்தில் உணர்வு பூர்வமாக நடைபெறும் இறுதி நிகழ்வு அது.

நவம்பர் 27 மாலை 6மணி கடந்து சில நிமிடங்களில் ஏக காலத்தில் இல்லங்களிலும் பொது இடங்களிலும் சிறப்பாக மாவீரர் துயிலும் இல்லங்களிலும் ஈகைச்சுடர் ஏற்றப்படுவது மாவீரர் வாரத்தின் உச்சக்கட்ட நிகழ்வாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தாண்டியடி, ஆண்டான்குளம் மாவீரர் துயிலும் இல்லங்களில் சுடர் ஏற்றும் வைபவங்கள் இடம் பெற்றாலும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களின் பிரதான மாவீரர் துயிலும் இல்லமான தரவையிலேயே பிரதான வைபவம் இடம்பெற்றது.

10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் இம்முறை தரவையில் இடம்பெற்ற ஈகைச்சுடர் ஏற்றும் வைபவத்தில் கலந்து கொண்டனர். இவர்கள் அனைவரும் மாவீரர்கள் மற்றும் போராளிகளின் பெற்றோராவர். இவர்கள் அனைவருக்கும் போக்குவரத்து வசதி, உணவு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது என்பதும் ஒரு சாதனைதான். 10 ஆயிரம் பேருக்கான உணவு தயாரிக்கப்பட்டது. அதுவும் போதாமல் மேலதிக ஏற்பாடு செய்ய வேண்டியதாயிற்று என இதற்கு பொறுப்பான பொருண்மிய பொறுப்பாளர் விசு தெரிவித்தார்.

உணவை விட தமது பிள்ளைகளை பார்த்ததே பெரும் நிறைவு. அன்றிரவு முழுவதும் தமது பிள்ளைகளுடன் இருந்து உணவு உண்டு கட்டித்தழுவி சுக, துக்கம் விசாரித்த காட்சி எம்மை மெய்சிலிர்க்க வைத்தது.

மட்டக்களப்பு நகரிலிருந்து சுமார் 30 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள தரவையை சென்றடைய 5 மணித்தியாலங்கள் பிடித்தன என்றால் அந்த கரடுமுரடான காட்டுப் பாதையைப் பற்றி சொல்லால் விவரிக்க முடியாது. வான், உழவு இயந்திரம், மோட்டார் சைக்கிள், கால் நடை என தொடர்ந்த பயணத்தில் சில சந்தர்ப்பங்களில் ஆற்றைக் கடந்தும் செல்லவேண்டி ஏற்பட்டது. போராளிகள் இந்த கரடுமுரடான பாதைகளில் பயணத்துக்கு தம்மை பக்குவப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

தரவையில் அழகாக அமைக்கப்பட்டிருக்கும் மாவீரர் துயிலும் இல்லத்தில் வித்துடல் கிடைத்து விதைக்கப்பட்டவர்களின் கல்லறைகள், வித்துடல் கிடைக்கப்பெறாதவர்களின் நடுகல்கள் என் பன வரிசையாக அமைக்கப்பட்டிருந்தன.

மிகநேர்த்தியாக அமைக்கப்பட்ட கல்லறைகளின் மத்தியில் மாவீரர் நினைவாலயம் அமைக்கப்பட்டிருந்தது.

தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த உரை நிறைவு பெற்று மாவீரர் வணக்கத்திற்காக மணியோசை எழுப்பட்டு சில வினாடிகளில் பொது ஈகைச் சுடரை மட்டக்களப்பு அம்பாறை படைப்பிரிவு சிறப்பு தளபதி கருணா ஏற்றிவைத்தார்.



கரிகாலன்

தாயகக்கனவுடன் சாவினைத் தழுவிய சந்தணப்பேழைகளே என்ற சுடரேற்றல் பாடல் நெஞ்சை உருக்கி விழிநீரைப்பெருக்கி உணர்வுகளை மேலோங்க செய்தது.

கல்லறைகள் முன்பாக மாவீரர்களை நினைத்து சுடர் ஏற்றும் வேளையில் ''எங்கே உங்கள் விழிகளை இங்கே ஒருதரம் திறவுங்கள். ஒரு தரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்'' என்ற அந்தப்பாடல் தங்கள் பிள்ளைகளின் கல்லறைகளுக்கு முன்னால் ஈகைச்சுடரை ஏற்றிய மற்றும் அங்கே அகவணக்கம் செலுத்திய ஆயிரக்கணக்கான வர்களின் கண்களில் நீரைச் சொரிந்தன.

அனைவரும் ஒரு நாள் மறைந்தே தீரவேண்டும். ஆனால் மாவீரர்கள் மறைவதில்லை. அவர்கள் விதைக்கப்படுகிறார்கள். அந்த விதைகளிலிருந்த பல விருட்சங்கள் உருவாகியிருக்கின்றன என்பதற்கு அங்கிருந்த ஆயிரக்கணக்கான இளம் போராளிகளே சான்று.

விடுதலைப்புலிகளின் அம்பாறை மட்டக்களப்பு மாவட்டங்களின் பிரதான தளம் அமைந்திருக்கும் தரவையில் சாதாரண நாட்களில் பொதுமக்கள் செல்லமுடியாது. பயணத்திற்கான போக்குவரத்து மார்க்கங்களும் இல்லை.

மாவீரர்நாளில் மட்டுமே பொதுமக்கள் அங்கு செல்லக்கூடிய போக்குவரத்து வசதிகள் செய்யப்படுகின்றன. மாவீரர் தின இறுதி நாளான ஈகைச்சுடர் ஏற்றும் வைபவத்தில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர் மாவீரர்களின் பெற்றோர் உறவினர்கள். ஏனையவர்கள் போராளிகளின் உறவினர்கள். மாவீரர் நாளில் போராளிகளை சந்திப்பதற்கு பெற்றோர் உறவினர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது.

இந்த சந்திப்பு உணர்வு பூர்வமான நிகழ்வுதான். ஈகைச்சுடர் ஏற்றுவதற்கு சற்று நேரத்திற்கு முன்பு ஆயிரக்கணக்கான போராளிகள் மாவீரர் துயிலும் இல்லத்தை நோக்கி வந்த போது பெற்றோர் உறவினர்கள் உணர்ச்சி மேலிட ஓடிச்சென்று அவர்களை கட்டித்தழுவிய அந்த காட்சியும் நெஞ்சுருக வைத்தது.

போராட்டத்தில் தம்மை இணைத்துக்கொண்டபின் வருடத்திற்கு ஒரு தடவை போராளிகள் தங்கள் உறவுகளை சந்திக்கும் நிகழ்வாகவும் இது அமைகிறது. இவர்களில் சில போராளிகள் தம்மை கரும்புலிகளாக இணைத்துக் கொண்டவர்கள். தங்கள் சாவிற்கு நாளைக்குறித்து விட்டு உள்ளப்பூரிப்போடு பெற்றோர்களுடன், உறவினர்களுடன் எப்படி சந்தோஷமாக பேசமுடிகிறது. அது சாதாரணமானவர்களால் முடியாத காரியம். போராளிகளால் மட்டுமே அது முடியும்.

விடுதலைப்புலிகளின் அந்த நெஞ்சுறுதி யாருக்குத்தான் வரும். சாவின் சிறப்பு பல்வேறு வகைப்பட்டது. அது மலையை விட கனமானதாகவும், பறவையின் சிறகைவிட இலேசானதாகவும் இருக்கலாம். மக்களுக்காக வாழ்ந்து அவர்களுக்காக மடிவது என்பது மலையை விடக்கடினமானது. பிற்போக்கானவர்களுக்காகவும் சுரண்டுவோர்களுக்காகவும் வாழ்ந்து மடிவது பறவைகளின் சிறகைவிட இலேசானது என்ற மாஓ– சேதுங்கின் கூற்று மாவீரர்களின் உளவலிமையை எடுத்துக் காட்டுகிறது.

என் இனமே என் சனமே என்னை உனக்கு தெரிகிறதா? எனது குரல் புரிகிறதா? மண்ணை இன்னும் நேசிப்பவன். அதனால் மரணத்தையே யாசிப்பவன் என்று வேதம் உரைக்கும் மாவீரர்களின் மானுடப்பார்வை விசாலமானது. விழி மூடி இங்கே துயில்கின்ற எமது வீரர்கள் மீதிலும் உறுதி இழிவாக வாழோம் விடுதலைப் போரில் இனிமேலும் ஓயோம் உறுதி என மாவீரர்களின் கல்லறையில் அகவணக்கம் செலுத்தி உறுதி பூணும் போராளிகளின் ஒப்பற்ற தியாகவலிமைகளைக்கண்டு வாயடைத்து நின்றோம்.

கடந்த 19 வருட ஈழவிடுதலைப் போராட்ட வரலாற்றில் 17,472 போராளிகள் இதுவரை வீரச்சாவை தழுவிக் கொண்டிருக்கிறார்கள் என்பது இலேசான விடயமல்ல. போராட்ட களத்திலே 239 கரும்புலிகள் வீரச்சாவை தழுவிக் கொண்டிருக்கிறார்கள்.

தங்கள் இளமைக் கனவுகளை தூக்கிவீசிவிட்டு தாயகக்கனவுடன் குண்டுகளை உடல்களில் கட்டிக்கொண்டு எதிரியின் களம் நோக்கி சென்று எதிரியையும் அழித்து தங்களையும் மாய்த்துக் கொள்ளும் கரும்புலிகளின் தியாகங்களும் இலேசாக மதிப்பிடக்கூடியவையல்ல.

இதனால்தான் இம்முறை மாவீரர் தின உரையிலும் தேசியத்தலைவர் பிரபாகரன் பின்வருமாறு கூறுகிறார். ''ஒடுக்கப்படும் மானிடத்தின் விடுதலையை நோக்கிப் பயணமாகவே மனித வரலாறு நகர்கிறது. ஒடுக்கப்படும் சமுதாயங்களிலிருந்தே வரலாறு படைக்கும் சக்திபெற்ற அபூர்வ மனிதர்கள் பிறக்கிறார்கள். எமது சமூகத்திற் பிறந்த அந்த அபூர்வ மனிதர்கள்தான் எமது மாவீரர்கள்''

மாவீரர் சுடர் ஏற்றும் வைபவத்தைத் தொடர்ந்து கொக்கட்டிச்சோலை ஸ்ரீதான்தோன்றீஸ்வரர் ஆலய முன்றலில் அமைக்கப்பட்ட மாவீரர் அரங்கில் மாவீரர் நாள் இரவு கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

மட்டக்களப்பு அம்பாறை அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் துரை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மாவடி முன்மாரி கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் ஜெயா ஈகைச்சுடரை ஏற்றிவைத்தார்.

மட்டு, அம்பாறை அரசியல் பொறுப்பாளர் கரிகாலன் உரையாற்றுகையில், கடந்த 19 வருடகாலத்தில் மாவீரர்கள் செய்த தியாகங்கள் வீண்போகக்கூடாது. நமது தாயகபூமியில் மக்கள் உரிமை பெற்ற சுதந்திர புருஷர்களாக வாழவேண்டும். அந்நிய ஆதிக்கம் உடைக்கப்பட வேண்டும் என்ற மாவீரர்களின் உயர்ந்த இலட்சியம் ஈடேற தமிழ் மக்கள் அனைவரும் விடுதலைப்புலிகளின் பக்கம் அணிதிரளவேண்டும்.

நடைபெற இருக்கும் நாடாளுமன்ற தேர்தல் பிரசாரங்களில் இருபிரதான சிங்களக் கட்சிகளும் இனவாத நஞ்சை சிங்கள மக்கள் மத்தியில் விதைத்து வருகின்றன. இந்த இனவாத போக்கினால் சாதாரண சிங்கள மக்கள் தமிழ் மக்களை விரோதிகளாகவும், தமிழ் மக்களின் உரிமைகளை மறுப்பவர்களாகவும் மாறும் நிலையையே சிங்கள அரசியல்வாதிகள் தோற்றுவித்து வருகிறார்கள்.

இனவிடுதலைக்காக போராடிவரும் விடுதலைப்புலிகளை சிங்கள மக்கள் மத்தியிலும் உலக நாடுகள் மத்தியிலும் பயங்கரவாதிகள் என பிரசாரம் செய்வதன் மூலம் சமாதான சூழல் ஒன்றை இந்த நாட்டில் ஏற்படுத்த முடியாது என்பதை சந்திரிகா அரசும் சிங்கள இனவாத கட்சிகளும் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த சிங்கள பேரினவாத கட்சிகள் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுற்படுமா என்பது கேள்விக்குறியான விடயம்.

இப்படி கரிகாலன் தெரிவித்தார்.

— துவாரகன்

# பின்லேடனுடன் ஒரு மின்சாரச் சந்திப்பு

**பாகிஸ்தான் உருது மொழிப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் ஹமீத் மிர் காபூலுக்கு அருகில் உள்ள மர்மக் குகை ஒன்றில் சமீபத்தில் பின்லேடனைச் சந்தித்தார். காபூல் வடக்கு முன்னணிப் படைகளிடம் வீழ்வதற்கு முன் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. ஹமீத் மிர் தமக்கு ஏற்பட்ட அதிர்ச்சி அனுபவத்தைக் கூறுகிறார். படியுங்கள்.**

தலிபான் கமாண்டர்கள் மாலையில் என்னை காபூலுக்கு அழைத்துச் சென்றனர். அன்று இரவு அங்கே தங்கினேன். எனக்கு இரவு முழுவதும் தூக்கம் வரவே இல்லை. எப்படித் தூக்கம் வரும்? காபூல் நகரத்தைச் சுற்றி அமெரிக்க விமானங்களும் ஹெலிக்கொப்டர்களும் குண்டுகளை வீசும் சத்தம் காதுகளைத் துளைத்துக்கொண்டிருந்தது. மறுநாள் அதிகாலையில் தலிபான்கள் சில அரேபியர்களிடம் என்னை ஒப்படைத்தனர். இரண்டு பேர் என்னை ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றனர். சாப்பிட்டுவிட்டு வெகுதூர வாகனப் பயணத்தை மேற்கொண்டோம்.

மதியத்திற்கு மேல் என்னை சுடுநீரில் குளிக்கச் சொன்னார்கள். என் உடலில் ஏதாவது இரசாயனப் பொருட்கள் இருந்தால் அது பின்லேடனைத் தாக்கிவிடக் கூடாது என்பதற்காக என்னை குளிக்கச் சொன்னார்கள்.

நான் ஒரு சலூனுக்குச் சென்று ஷேவ் எடுத்துவிட்டு நன்றாகக் குளித்தேன். பின்பு அந்த அரேபியர்கள் என்னை அழைத்துக்கொண்டு எங்கேயோ சுற்றினார்கள். இரவுவரை பொழுதை கழிக்கத்தான் அவ்வாறு செய்கிறார்கள் என்பது எனக்குத் தெரிந்தது. சென்றுகொண்டிருக்கும்போது அமெரிக்க குண்டுவீச்சில் பாகிஸ்தான் முஜாகிதீன் போராளிகள் இறந்த இடத்தையும் காட்டினார்கள்.

திடீரென்று நடு இராத்திரியில் என்னை காபூலுக்கு வடக்கே உள்ள பகுதிக்கு அழைத்துச் சென்றனர். அங்கு மூன்று அரேபியர்கள் அடங்கிய ஒரு குழுவிடம் என்னை ஒப்படைத்தார்கள். அவர்கள் என் கண்களைக் கட்டி, ஒரு போர்வையில் சுற்றி வாகனத்தில் ஏற்றினர். அரபு மொழியில் அவர்கள் வயர்லெஸ் மூலம் தகவல் கொடுத்துக்கொண்டே இருந்தனர். 5 மணி நேரம் குண்டும் குழியும் நிறைந்த பகுதியில் வாகனம் சென்றது.

வாகனம் நின்றதும் என்னைத் தூக்கிக்கொண்டு சென்றனர். போர்வையை விலக்கிவிட்டு என் கண் கட்டை அவிழ்த்தபோது நான் ஒரு சிறிய அறைக்குள் அமர்ந்திருந்தேன். சுற்றிலும் நவீன துப்பாக்கிகளோடு சிலர் காவல் காத்து நின்றனர். குண்டு, குழியான பாதைப் பயணத்தால் என் உடல் வலித்தது. அதனால் வலியைப் போக்க ஒரு மாத்திரை கேட்டேன். ஒரு சில நிமிடங்களிலே கொடுத்தார்கள். பின்லேடனை சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்றும் சொன்னார்கள். என்னிடம் ஒரு சிறிய ரேப் ரெக்கோடர் மட்டுமே வைத்திருக்க அனுமதித்தனர். புகைப் படங்களை எடுத்து அவர்களே தருவதாகச் சொன்னார்கள். 45 நிமிடங்கள் கழித்து டாக்டர் சவாகிரியுடன் பின்லேடன் வந்தார். எங்களை மையமாக்கி இரண்டு வீடியோ கமெராக்கள் சுழன்றன. எங்கள் தேவைக்காக பேட்டியை வீடியோவில் பதிவு செய்கிறோம் என்று பின்லேடன் என்னிடம் சொன்னார். அப்போது அதிகாலை 6 மணி. உலகம் முழுவதும் தேடிக்கொண்டிருக்கும் பின்லேடன் என் முன்னால் அமர்ந்திருந்தார்.

முன்பெல்லாம் நான் பின்லேடனைச் சந்திக்கும்போது 'என்ன கேள்வி வேண்டுமானாலும் கேட்டுக்கொள்ளுங்கள்' என்பார். இப்போது முக்கியமான கேள்விகளை மட்டும் கேளுங்கள் என்றார். முன்பு சுதந்திரமாக பதிலளித்த அவர் இப்போது எச்சரிக்கையாக இருப்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

இரண்டு மணி நேரத்தை நான் அவருடன் செலவிட்டேன். மீண்டும் என் கண்கள் கட்டப்பட்டன. போர்வையில் சுருட்டப்பட்டேன். வாகனத்தில் ஏற்றி வெகுதூரம் பயணமாகி காபூலை வந்தடைந்தேன்.

# தேர்தல் கண்காணிப்பாளர் யோசனைக்கு முளையிலே தடை!

குடாநாட்டில் தேர்தல் வாக்களிப்புக்கு ஓரிரு தினங்களுக்கு முன்பாக ஈ.பி.டி.பி கட்சியினர் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை அவசர அவசரமாகத் தாக்கல் செய்ததும்—

அந்த மனு தொடர்பான உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பை பெற்று சூட்டோடு சூடாக அதைப் பகிரங்கப்படுத்தி விடுவதில் காட்டிய வேகமும் அவசரமும்—குடாநாட்டில் நீதியான தேர்தலுக்கு வாய்ப்பே இல்லை என்ற முடிவுக்கு வர வேண்டிய நிலையை கண்காணிப்பாளர்களுக்கு ஏற்படுத்தி இருந்தன.

பொதுத் தேர்தலில் வாக்களிக்கச் செல்பவர்கள் தமது அடையாளத்தை நிரூபிப்பதற்கு தேசிய அடையாள அட்டையையோ அல்லது வேறு விதமான அடையாள அட்டையையோ சமர்ப்பிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது என்று உயர்நீதிமன்றம் அந்தத் தடை உத்தரவில் தெரிவித்தது.

யாழ். குடாநாட்டில் வாக்களிக்கச் செல்வோர் தமது அடையாள அட்டையைச் சமர்ப்பிக்கவேண்டும் என்பதைக் கட்டாயப்படுத்தும்படி தேர்தல் ஆணையாளரிடம் சிபார்சு செய்யப்போவதாக தேர்தலுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த ஐரோப்பிய ஒன்றியத்தின் கண் காணிப்பு அதிகாரி குஷ்னஹான் அறிவித்திருந்தார்.

இது தொடர்பான செய்தி 'உதயன்', 'சுடர்ஒளி' ப்பத்திரிகைகளில் வெளியாகி இருந்தது. அந்தச் செய்தியின் அடிப்படையில் யாழ்.மாவட்டத்துக்கு மட்டும் வாக்களிப்பில் அத்தகைய நடைமுறையை விதிப்பதை ஆட்சேபித்து ஈ.பி.டி.பி கட்சி சார்பில் உடனடியாக உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

தேர்தல் ஆணையாளரும், யாழ். தெரிவத்தாட்சி அலுவலரும் அதில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர். இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம் மேற்படி தடை உத்தரவை விடுத்தது.




யாழ்ப்பாணத்தில் அண்மைக்கால தேர்தல்களில் படுமோசமான முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதைக் கருத்தில் கொண்டு—வாக்களிப்பில் மோசடிகளைத் தடுக்க வசதியாக—வாக்களிக்கச் செல்வோரின் ஆளடையாளத்தை நிரூபிக்கும் விதமான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்ற ஆலோசனை கடந்த காலத்தில் பலராலும் முன்வைக்கப்பட்ட ஒன்றுதான்.

யாழ்ப்பாணத்துக்கு வந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்பு அதிகாரியும் இந்த யோசனையை வெளியிட்டிருந்தார். குடாநாட்டில் தீவகப் பகுதியின் வாக்களிப்பு நிலைமை உட்பட பொதுவாக தேர்தலில் மோசடிகள் பரந்த அளவில் இடம்பெற வாய்ப்பான சூழ்நிலைகள் காணப்பட்டதை நேரில் அவதானித்த பின்னரே, அந்த வெளிநாட்டு அதிகாரி வாக்களிப்புக்கு அடையாள அட்டையை வலியுறுத்த வேண்டும் என்ற யோசனையை வெளியிட்டிருந்தார்.

ஆனால், இந்த யோசனைக்கு—அது செயல்வடிவம் பெற முன்பாகவே—முளையிலேயே—தடைபோடப்பட்டு விட்டது. அவசர அவசரமாக அதைச் சாதித்துவிடுவதில் ஈ.பி.டி.பியினர் வெற்றியும் பெற்றுவிட்டனர்.

பிரஜைகளின் அடிப்படை உரிமைகளை மதித்து அவற்றைப் பேணும் நோக்கில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு மிகச் சரியானதும் நீதியானதும்தான். (அதை விமர்சிப்பது இக்கட்டுரையாளரின் நோக்கமல்ல) ஆனால் அதற்கு முன்பாக சில விடயங்களை இங்கே குறிப்பிட்டுக் காட்ட வேண்டி இருக்கிறது.

வாக்களிப்புத் தொடர்பான இந்தச் சட்ட நடவடிக்கையை ஈ.பி.டி.பியினர் கடைசி நேரத்தில் அவசர மாக நாடியது ஏன்?.

யாழ்.குடாநாட்டு மக்களின் அடிப்படை உரிமை சம்பந்தப்பட்ட விடயம் ஒன்றில் அக்கட்சி நீதிமன்றத்தை நாடி தீர்வு கண்டிருப்பது இதுவே முதல் முறை.

வாக்களிப்பதற்கு அடையாள அட்டையைச் சமர்ப்பிக்கக் கோரும் விதிமுறை நாட்டின் ஏனைய பகுதிகளில் நடைமுறைப் படுத்தப்படாத ஒன்று எனத் தெரிவித்து அதனை குடாநாட்டுக்கு மட்டும் மட்டுப்படுத்தி நடைமுறைப்படுத்துவது அடிப்படை உரிமைகளை மீறும் விசமத்தன மான செயல் எனக் கருதியே அதற்கு எதிராகத் தாங்கள் உயர் நீதிமன்றத்தை நாடி சட்ட நடவடிக்கை மூலம் தீர்ப்பைப் பெற்றுக் கொண்டதாகத் தெரிவித்தது ஈ.பி.டி.பி.

குடாநாட்டு மக்களின் அடிப்படை உரிமையை மீறுகின்ற ஒரு விடயத்தில் இவ்வளவு கரிசனையோடு நீதி நடவடிக்கையை எடுத்ததற்காக ஈ.பி.டி.பியை பாராட்டலாம்.

ஆனால் நாட்டின் ஏனைய பகுதி மக்களுடன் ஒப்பிடுகையில் பல அடிப்படை உரிமைகள் குடாநாட்டு மக்களுக்கு அறவே இல்லை.

பயண அனுமதி பெறும் நடைமுறை முதல் கைதுகள் வரை அடிப்படை உரிமைகள் அப்பட்டமாக மீறப்படுகின்ற—திறந்த வெளிச் சிறைச்சாலை போன்ற—ஒரு நிலைமைக்குள் குடாநாட்டு மக்கள் அல்லற்படுவது கண்கூடு.

குடாநாட்டில் சந்திக்குச் சந்தி சோதனைச் சாவடிகளில் அடையாள அட்டைகளைக் காட்டித் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் நிலையில் இருக்கும் பொதுமக்கள் வாக்களிப்பின் போது முறைகேடுகளைத் தவிர்க்க தங்கள் அடையாளத்தை நிரூபிப்பதற்கு ஒன்றும் தயக்கமோ மறுப்போ காட்டப்போவதில்லை. அதற்குப் பூரணமாக ஒத்துழைப்பு நல்குவார்கள் என்பது தான் யதார்த்தம். அதன் மூலம் தங்கள் அடிப்படையில் எதையுமே தாங்கள் இழக்கப்போவதில்லை என்பதும் யாழ்ப்பாண மக்களுக்குத் தெரியும்.

நிலமை அவ்வாறு இருக்க வாக்களிப்புக்கு அடையாள அட்டைகளை வலியுறுத்தும் யோசனைக்கு அடியோடு ஆப்புவைக்க முயன்றமை பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன.

தமிழ் மக்களின் ஜனநாயக சக்தியாக தன்னை வளர்த்தெடுக்க கடந்த காலங்களில் அக்கட்சி புரிந்த மக்கள் பணிகள் அனைத்துமே இந்த இறுதிநேர நடவடிக்கையால் அர்த்தமிழந்து போயிருக்கிறது.

—வலிகாமத்தான்.

# பித்தர் பதில்கள்



சோபன், தெகிவளை.
கே : பித்தா, ஒவ்வொரு நாளும் குடித்து விட்டு வந்து குழப்பம் செய்யும் கணவன்மாரை ஏன் மனைவிமார் கண்டிக்கிறார்கள் இல்லை?
ப : எருமை மாட்டுக்கு மழையால் என்ன பயன்?

ரமணன், இரத்மலானை.
கே : தேர்தலில் போட்டியிட்ட சில கட்சிகள் புலிகளின் புரட்சிப் பாடல்களை ஒலிபரப்பி வாக்குக் கேட்டனவே!
ப : ஆறு தாண்டுமட்டும் அண்ணன் தம்பி – அதற்குப் பிறகு நீ ஆரோ நான் ஆரோ என்ற நிலை வந்து விடக்கூடாது.

காண்டீபன், நாரஹேன்பிட்டி.
கே : பெண்களுக்கும் வயாக்ரா வந்துவிட்டதாமே. இனி என்ன நடக்கும்.
ப : பல் செற்றிலிருந்து – பட்டுச்சேலை வரை – கியூடெக்ஸிலிருந்து – லிப்ஸ்டிக் வரை விலை கூடும்.

தனுஜா, வவுனியா.
கே : மின்சாரத் தடை காரணமாக நாட்டில் உற்பத்திகள் குறைந்து விட்டனவே...
ப : இன்னும் 4–5 மாதங்களின் பின் சனத்தொகை கணக்கெடுப்பொன்று நடத்திப் பார்த்தால் தெரியும். உற்பத்தி குறைந்ததா கூடியதா என்று.



ப. தர்ஜன், பேலியகொடை.
கே : எங்கள் வீட்டு வேலைக்காரி இந்த மாதச் சம்பளத்தில் நூறு ரூபா கூடக் கேட்கிறாளே கொடுக்கலாமா பித்தா?
ப : போன மாதத்தில் அக்கம் பக்கத்து வீட்டு நியூஸ் அதிகமாகச் சொல்லி இருப்பாள் போல.

சுதன், மன்னார்.
கே : நடிகை விந்தியா வீட்டை விட்டு ஓடிவிட்டாராமே.
ப : நண்டு கொழுத்தால் வளையில் இருக்காது.





வர்ணா, நீர்வேலி.
கே : ஒரு பெண்ணுக்கு பிறந்த வீட்டில் உள்ள மகிழ்ச்சி, புகுந்த வீட்டில் கிடைப்பதில்லையே ஏன்?
ப : பிறந்த வீட்டில் இளங்கன்று, புகுந்த வீட்டில் பொதிமாடு.

ஆர். ரட்ணம், மருதானை.
கே : பித்தா, கஷ்டத்தில் இருக்கும் போது வசதியாக இருக்கும் பல நண்பர்கள் கைகொடுக்க முன் வருகிறார்கள் இல்லையே, அது ஏன்?
ப : அப்படியானால் தானே ஏழை பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு தொடரும்.

ஆர். ஜெகன், கல்முனை.
கே : சீதனம் கொடுக்க முடியாமல் வாழா வெட்டியாக இருக்கும் பெண்களுக்கு பித்தா சத்தா ஒரு வார்த்தை கூறும்.
ப : படிக்க வேண்டும் வேலை பார்க்க வேண்டும். சம்பாதிக்க வேண்டும். சொந்தக் காலில் நிற்க வேண்டும். யாரை நம்பி நான் பிறந்தேன் போங்கடா போங்க என்று போய்க் கொண்டே இருக்க வேண்டும்.

சுபத்திரன், மன்னார்.
கே : நான் ஆறடி உயரம். என் காதலி உயரம் எவ்வளவாக இருக்க வேண்டும்.
ப : உயரம் பார்த்து வருவதில்லை காதல்.



ப. சுரேன், கல்கிசை.
கே : இம்முறை தேர்தலில் தோற்றவர்கள் என்ன செய்வார்கள்.
ப : மொட்டை அடித்துக் கொண்டு நாமம் போட்டுக் கொண்டு ஏழைக்கு வாடகை கொடுக்க வேண்டியது தான்.

சுபத்திரா, சங்கானை.
கே : பித்தனே.....! மனக் குதிரையின் கடிவாளத்தை இழுத்துப் பிடித்து நிறுத்த முடியவில்லையே?
ப : மனதை அடக்க நினைத்தால் அலையும். மனதை அறிய நினைத்தால் அடங்கும்.

வலிதுங்கிகை, கொழும்பு.
கே : பருவத்தில் கிடைத்தது இன்பம். முதுமையில் எது இன்பம்?
ப : மலரும் நினைவுகள்.

யா. மேகாதுரியன், கிளிநொச்சி.
கே : பித்தா இன்று இலங்கைத் தமிழன் இழக்கக்கூடாத ஒன்று எது.
ப : ஐ சி

சுபன், கல்முனை.
கே : எனக்கு ஒரே விக்கலாக இருக்கிறது என்ன காரணம், பித்தா. சொல்லுங்களேன்?
ப : கடன் கொடுத்தவன் பின்னால் நிற்கிறான் போல.

சுபராஜ், வெள்ளவத்தை.
கே : நீதிபதிகளை பட்டிமன்ற நடுவராக ஏன் வைக்கக் கூடாது பித்தா?
ப : தீர்ப்பை அடுத்த மாதத்துக்கு ஒத்தி வைத்து விடுவார்களே...!



சுப்பிரமணியம், கண்டி.
கே : சிம்ரன் ஓர் கட்சி அமைத்து தேர்தலில் நின்றால் என்ன சின்னம் அவரின் கட்சிக்குக் கொடுக்கலாம்.
ப : பம்பரம்.

இ. ராகவன், நல்லூர்.
கே : இலங்கையை மிதிவெடிக்குப் பஞ்சமில்லாத நாடு என்று பொது அறிவில் குறிப்பிடலாம் போல் தெரிகிறதே பித்தா?
ப : இதில் கூட சந்தேகமா?

சொரூபன், வெள்ளவத்தை.
கே : பித்தனே...! நீங்கள் பாத்ரூம் கதவை திறந்து வைத்து விட்டுத்தான் குளிப்பீர்களாமே...
ப : ஆமாம், அப்பத்தான் யாரும் எட்டிப் பார்த்தால் தெரிந்து கொள்ள முடியும்.

கவிதா, இரத்மலானை.
கே : முட்டாளுக்கும் அறிவாளிக்கும் என்ன வித்தியாசம்.
ப : முட்டாள் எதையும் உறுதியாகச் சொல்லுவான், ஆனால் அறிவாளி எதையும் சந்தேகமாகவே சொல்லுவான்.

சுதர்சன், மட்டக்களப்பு.
கே : பணத்தைப் பற்றி உங்கள் கருத்து என்ன?
ப : அளவோடு இருந்தால் அது எம்மைக் காப்பாற்றுகிறது. அதிகமாக இருந்தால் அதை நாம் காப்பாற்ற வேண்டியிருக்கும்.

பால்ராஜ், தெஹிவளை.
கே : பித்தனே ஒரு ஜோக் சொல்லுங்களேன்.
ப : புதிதாக கோடீஸ்வரரான ஒருவர் தனது பங்களாவில் மூன்று நீச்சல் தடாகங்களைக் கட்டி இருந்தார். பங்களாவுக்கு வந்த ஒருவர் ஏன் மூன்று நீச்சல் தடாகங்கள் என்று கேட்டார். ஒன்றில் வெந்நீர் மற்றதில் குளிர்நீர். மூன்றாவது வெறுமையாக இருக்கும் என்றார் கோடீஸ்வரர். தண்ணீர் இல்லாமல் ஏன் வெறுமையாக நீச்சல் தடாகம் என்று கேட்டார் வந்தவர். நீச்சல் தெரியாதவர்களுக்குத் தான் என்று பதில் அளித்தார் கோடீஸ்வரர்.

# ஜீவா கொள்கையுடன் வாழ்பவர் தன் நிலை மாறாதவர்

## தேடிவந்த பட்டத்தையே ஏற்க மறுத்தார்

4/11/01 திகதிய சுடர்ஒளியில் வெளிவந்த கட்டுரையில் ''கட்டுரையாளரின் நோக்கம் நியாயம் கவிழ்ந்து விடாமல் பார்த்துக்கொள்வது தவிர வேறொன்றுமில்லை'' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. நானும் அவரின் நோக்கத்தையே கொண்டு கீழ்க்காணும் விடயங்களை எழுதுகிறேன்.

பட்டம்தானே தேடி வரவேண்டுமே தவிர நாம் பட்டத்தைத் தேடிச் செல்லக்கூடாது என்று அக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கட்டுரையாளரின் கருத்துப்படி ஜீவா தனக்கு பட்டம் தரும்படி யாழ். பல்கலைக்கழகத்தைக் கேட்டது போலல்லவா இருக்கிறது? எவரிடம் எப்படிப்பட்ட பட்டத்தையும் தேடிப் போகாதவர் ஜீவா. அவருக்கு என அளிக்கப்படவிருந்த பட்டத்தினை மாத்திரம் ஏற்க மறுத்து அதற்கான காரணத்தையும் அவரே விளக்கிக் கூறியுள்ளார். அவர் கூறியது சரியான காரணம்.

அவருக்குரிய பட்டம் கலாநிதிப் பட்டம் என்று புத்திஜீவிகள் கூறுகிறார்களே தவிர, ஜீவா கூறவில்லை. அது தான் வேண்டும் என்று எந்தக் கட்டத்திலும் அவர் கேட்டது கிடையாது.

ஜீவாவின் கூற்றினை அலசி ஆராய்ந்த கட்டுரையாளர்கள் பலர் அவருக்குரிய பட்டம் இதுவல்ல; அது கலாநிதிப் பட்டம்தான் என்று ஆணித்தரமாக எழுதியிருந்தார்கள். அவர்களின் காரணங்களை வெட்டி எழுதியிருந்தால் உண்மையில் கட்டுரையாளரின் குரலுக்கு மரியாதை இருந்திருக்கும்.

அவர் அதைப்பற்றி எதுவுமே எழுதாமல் வேண்டுமென்றே யாழ். பல்கலைக்கழகம் யாழ்மண்ணில் அமைந்த கதையை எழுதியுள்ளார்.

இப்பல்கலைக்கழகம் அமைவதற்கு இடது சாரிகளின் உந்துதலே முக்கியக் காரணமாக இருந்த படியால் அவர்களில் டொமினிக் ஜீவாவும் அடங்கி இருக்கலாம்.

திருகோணமலையில் பல்கலைக்கழகம் அமைந்திருந்தால் பல்கலைக்கழகத்துக்கு சிங்கள மாணவரின் அனுமதியை சாட்டாக வைத்து இன்னும் சிங்களக் குடியேற்றங்கள் அதிகரித்திருக்கும் என்றும் ஒருசாரார் கருத்துக் கூறுகின்றனர். இது எவ்வளவு தூரம் பொருத்தமானது என்றுஎன்னால் கூறமுடியாது. என்றாலும் இப்போதாவதுசிங்களக்குடியேற்றம்எப்போது நடந்தது என்பது கட்டுரையாளருக்கு புரிந்தால்மிக நல்லது.

ஜீவா யாழ் மண்ணையும், மக்களையும் மறந்து கொழும்பில் இருந்து செயல்படுகிறார் என கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார். ஜீவா எந்த சூழ்நிலையில் கொழும்புசென்றார்என்று இவருக்குத் தெரியாது. தனது அலுவலகத்தில் இருந்த அத்தனைஆவணங்களும் அழிக்கப்பட்ட நிலையில்தான் ஜீவா யாழ்ப்பாணத்தை விட்டு வெறுங்கையோடு கொழும்பு சென்றார்.

அவரது விடாமுயற்சியும்,தெளிவான நோக்கமும்தான் அவரை இந்நிலைக்கு உயர்த்தியுள்ளது. முதலாளிகளை திட்டித்திட்டி அவர்களின் விளம்பரத்தில்தான் மல்லிகை பத்திரிகையை அவர் ஓட்டியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. எந்த வகையிலும் இக்கூற்றை எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது.

மல்லிகை ஜீவாவின் தோளில் ஒரு கைப்பை. அதில் மணங்கொடுக்கும் மல்லிகைகள். அவற்றை தெருத்தெருவாக கொண்டு திரிந்து விற்றுத்தான் இப்பெரும் மல்லிகைப் பந்தலை அவர் உருவாக்கினார். அவருக்கு, அவருடைய கொள்கை இலட்சியம் சார்ந்தவர்களின் ஆதரவுதான் பெரிதும் உதவியதே தவிர முதலாளிகளின் விளம்பரங்கள் அல்ல. ஒருவரைக் குறை சொல்லும் போதும் அதற்கும் ஒரு தர்மம் இருக்கின்றது.

**ஜீவாவுக்கு யாழ் பல்கலை கௌரவப் பட்ட சர்ச்சை**

மல்லிகை பத்திரிகை தமிழை வளர்த்தது .தமிழ் எழுத்தாளர்களை உருவாக்கியது. தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவித்தது. தமிழ் இலக்கியத்துக்கு புத்துயிர் கொடுத்தது. தமிழ் சமூகத்தின் ஏற்றத்தாழ்வினை அகற்றியது என்றெல்லாம் உலகமெல்லாம் சொல்லும் போது அதற்கு மாறாக எந்த பாமர எழுத்தாளனையும் மல்லிகை உருவாக்கவில்லை என்று கூறுவதை தமிழ் எழுத்தாளர்களே தீர்மானிக்க வேண்டும் .

இந்திய அமைதிகாக்கும் படை யாழ்ப்பாணத்தில் அதிகாரத்தில் இருந்த காலத்தில் என்ன, தமிழீழ விடுதலைப் புலிகள் அதிகாரத்தில் இருந்தபோது என்ன தன்னுடைய பத்திரிகையை தன்நிலையை மாற்றாமல் நடத்தி வந்துள்ளார் ஜீவா. எனவே ஜீவா ஒரு கொள்கையுடன் வாழ்பவர். அவரைப் பற்றி விமர்சிப்பவர்கள் தயவு செய்து அவருடைய கடந்த கால வாழ்க்கையை அலசி ஆராய்ந்த பின்னர் எழுதுவதே சாலச் சிறந்ததாகும்.

காரை சி. சிவா

---

## நீ காத்திடும் மௌனம் ஏன்?

விழிகளை மூடி உன்னை நினைக்கையில்
விந்தைகள் நிகழ்வது ஏன்?
மொழியினைத் தாண்டி மனம் உறவாட
மகிழ்வினில் மிதப்பது ஏன்?
அளவில்லாத உன் அன்பினை நினைக்க
அழுகை வருவதன் நியாயமென்ன?
உன்னைக் கண்டு கவலைகள் கூற
சுமைகள் கலைந்திடும் மாயமென்ன?
என் வேதனை கண்டும் காத்திடும் மௌனம்
விளங்கவில்லை அது ஏன்...?

மறந்து போனதேன்
நண்பன் என்றும் அன்பன் என்றும்
உறவு சொல்லி வந்த நீ
அன்பு மொழி பேசி என்னை
பயன்படுத்திக் கொண்ட நீ
இன்னலிலே தவிக்க விட்டு
என்னை மறந்து போனதேனோ...?

இ. அனுஷா, கட்டைப்பிராய்,

## தோல்வி...!

ஒரு நிலவு.... தேயாமல் இருக்க
முற்படுகின்றது முடியவில்லை...

ஒரு நதி... ஓடாமல் இருக்க
முற்படுகின்றது முடியவில்லை...!

ஒரு அலை... அடிக்காமல் இருக்க...
முற்படுகின்றது முடியவில்லை...!

ஒரு மலர்... வாடாமல் இருக்க
முற்படுகின்றது முடியவில்லை...!

நானும் உன்னை... நினைக்காமல் இருக்க...
முற்படுகின்றேன் முடியவில்லை...!

எஸ். தமிழாம்பிகை ஜெகன், நானாட்டான்.

## இருள் தேசத்தில் ஓர் நிலா!

பத்து மாத பந்தத்தில் முத்தாக நீ உதிக்க
உதிரம் கொடுத்து உனை உயிராக
காத்த நாட்கள்... எனக்கு நினைவில்
இருக்கிறது!
கொஞ்சும் மொழியும் — உந்தன் குறும்புத்தனமும்
எனை நெஞ்சில் உதைத்த நாளும்... எனக்கு
நினைவில் இருக்கிறது!
கொட்டும் மழையில் — உந்தன் மேனி
நனைந்த போது நினைந்து நினைந்த எந்தன்
கண்கள் கலங்கியதும் எனக்கு நினைவில்
இருக்கிறது!
அள்ளி அணைத்த போது என் ஆடை
நனைந்த நாட்கள் அதுவும் நினைவில்
இருக்கிறது!
மொட்டு மலர்ந்த நாளும்; சிறகு
முளைத்த நாளும் இன்னும் நினைவில்
இருக்கிறது.!
தாயை நாயென்றாய்; தள்ளி வைத்து விட்டாய்...
எல்லாம் நினைவில் இருக்குதடா..!
நாயை வளர்த்தேன் நான்,நன்றியை வாலாட்டி
சொன்னதடி...! பசுவை வளர்த்ததனால் பால்தந்து
என் பசியை தீர்த்ததடி...!
வேப்ப மரமெல்லாம் கிளை பரப்பி வியர்வை
துடைத்ததடி...!
தென்னை மரங்கூட பல பொழுது தாகம் தீர்த்ததடி!
உன்னை வளர்த்தேன் நான்! என் உயிரை
வதைத்தாயடி...!

சி. சுபத்ரா, திருகோணமலை.

## அமைதி

என் மௌன தேவதையே
உன் அமைதியைத்தான்
நான் நேசிக்கின்றேன்!
நீ அமைதியாகவே இருந்து
என் அமைதியை கெடுத்து
அமைதி நிலவும் இடுகாட்டிற்கு
என்னை அனுப்பி விடாதே

ஏ. என். ஜனார்த்தனன்,
வெள்ளவத்தை.

## பெண்ணே!

செத்துப் போனது
உள்மனம்
சமாதியானது என்
சந்தோசம்
உயிர் துடிக்கிறது
உனக்காக!
என் காதல்
கனவாய் போனது!!
இப்போ—
என் எழுதுகோலும்
அழுகிறது...
மொத்தத்தில்
உலக வர்த்தக
மையமாய்
நொறுங்கிப்
போனது
என் மனக்கோட்டை!!
எல்லாமே உன்
துரோகத்தால்...!

— தர்சி

## "நாடாளுமன்றமே பதில் கூறு"...

காலங்கள் மாறும்...
காட்சிகள் மாறும்— ஆனால்
'கற்பழிப்புகள்'
தொடர்ந்து கொண்டே இருக்கும்...!
ஆட்சிகள் மாறும்...
ஆசனம் மாறும் —ஆனால்
'அழிவுகள்'
அரங்கேறிக் கொண்டே இருக்கும்...!

''பதினோராவது
நாடாளு மன்றமே'' — நீ
கண்டது என்ன...?
''பன்னிரெண்டாவது
நாடாளுமன்றமே''—நீ
காணப் போவது என்ன...?

எஸ். தமிழாம்பிகை ஜெகன்

## தேர்தல் வியாபாரம்

வெள்ளைச் சேலைக்கு
வெறும் வர்ணப் பூச்சுப் பூசி
பட்டுப் புடைவை என்று மக்களை
நம்பவைத்த காலம் அது.
வான் மழையினைப் பொழியாது
நிறுத்தி வைத்தனர் வர்ணம்—
— கரைந்துவிடும் என்று
ஆனால் போர் மழையை
நிறுத்த மறந்து விட்டனர் போலும்.
இன்று சாயம் வெளுத்துவிட
திரும்பவும் தொடங்கி விட்டது
தேர்தல் எனும் பெயரில் மக்களை
ஏமாற்றும் வியாபாரம்
மும்முரமாக.

செல்வி. டி.எம். துரைராசா

## விலை

வியர்வை சிந்தி
கண்ணீர் வடித்து
காயம் பட்டு
காலை முதல்
மாலை வரை
உழைத்து உற்பத்தி
செய்த பொருளுக்கு
விலை தான் இன்னும்
சரியாக உயரவில்லை.

வீ. புண்ணிய சிகாமணி,
மடுல்சீம.

## என் காதலியே!

உன் கண்ணினை வரைந்து
என் பார்வையைத் தருகிறேன்!
உன் காதினை வரைந்து
என் கேள்வியைத் தருகிறேன்!
உன் மூக்கினை வரைந்து
என் நுகர்ச்சியைத் தருகிறேன்!
உன் நாக்கினை வரைந்து
என் உமிழ் நீரைத் தருகிறேன்!
உன் இதயத்தினை வரைந்து
என் சுவாசத்தைத் தருகிறேன்!
உன் கைகளை வரைந்து
என் விரல்களை தருகின்றேன்!
உன் கால்களை வரைந்து
என் நடையைத் தருகின்றேன்!
உன் குடலை வரைந்து
என் உணவினைத் தருகின்றேன்!
மொத்தத்தில்,
உன் உடலை வரைந்து
என் உயிரையே தருகின்றேன்!
இதுதான் காதல்!!

— ஆர்.வி.கவன்,, கொழும்பு — 13.

## சிந்தித்துப்பார்!

அரசியல் நாற்காலிகளை
அள்ளிப் பெற்று
ஆளுக்கொரு திசையில்
ஆட்சி பீட மேறுவதற்கு
மூலைக் கொன்றாய் முளைக்கும்
முந்தநாள் மழைக் காளான்களாய்
வாலைக் கிளப்பிக்கொண்டு
வ ருகுது பார் கூட்டமொன்று!

வாக்குப் பெறுமட்டும்
வாயளந்து விட்டு—உனக்குப்
பேக்குக் காட்டிவிட்டு
போய்விடும் இந்தக் கூட்டம்

ஒன்றுபட்டு நிற்காது
ஓர்மம் கொண்டு நிற்கும்
பேர ாசை பிடித்த கட்சிகள்
தொன்று தொட்டு எமக்கு
செய்து சென்ற தென்ன?

சிந்தித்துப் பார்!
சீக்கிரமிணை ந்தால்...
சாத்திய மாகும் சமாதானம்
சிந்திச் சிதறிப் போனால் காய்ந்து
போகும்
எம் உரிமைகள்!

ஓரணியில் இணைந்தால்
ஒன்று சேர்ந்திடு வாக்கு!
பேரணியில் நின்றால்
நீக்கி விடவே அவரை நோக்கு!

—புதுவை

## உறங்கும் உண்மைகள்

விண்மீன்கள் ஒரு விடியலுக்கு
தம் ஒளியை விற்பனை செய்யினும்
பகலில் தெரிவது சூரியன் மட்டும்...

பூக்கள் கிளை மீது இதழ்விரித்தாடினும்
வேர் தான் அதன் உயிர் நாடி!
ஒரு உயிர் கொடுத்த உணர்வின்றி
வேர் மண்ணுக்குள் மண்டிக் கிடக்கும்.

ஒலிப் பாஷைகளுக்கு பரிநாமம் தரும்
காற்றுக் கூட முகம் காட்டாது ஓடும்!

வானவில் கூட மழையினதும் வெய்யிலினதும்
சங்கமத்தில் தான் ஜனிக்கும்! — நம்
கண்கள் ரசிப்பதோ அதன் வர்ணங்களை மட்டும்...

காட்சிகளை காண்பிக்கும் கண்களுக்கு
தம்மைப் பார்க்கத் தெரிவதில்லை!

இப்படித்தான் நாமும் இத்தேசத்தில் பிறந்தும்
அந்நியராய் அலைக்கழிக்கப் படுகின்றோம்
ஈழத்தவர் என்ற உண்மையைத் தொலைத்து

வி. யோகேஸ்
அண்ணா சிலையடி.

## புறங்களுக்கு ஏனிந்த புராணங்கள்?

உலகம் சுற்றும் வேகத்தில்
புறங்களே அதிகம் பூசிக்கப்படுகின்றன
அகங்களை யாரும் அறிவதில்லை!
வெள்ளை வேட்டிகட்டிய பக்தன்.
பக அருகேயிருந்து கள்ளருந்துகிறான்...
பகலெல்லாம் பல்லாண்டு பாடப்பட்டவன்
இரவு படுகொலைக்கத்தியுடன்...
ஆம்!...
உலகம் சுற்றும் வேகத்தில் நிஜங்களை விட்டு விட்டு
நிழல்களே புகழ்பாடப்படுகின்றன
உண்மைகள் கொல்லப்படுவதோடு பொய்கள்
போற்றப்படுகின்றன
இங்கு பூக்களுக்கே அதிக புராணங்கள் உண்டு
வேர்களுக்கு — ஒரு வெண்பா கூட இல்லையே!!!
ஏ மனித சமூகமே!! விளங்கிக் கொள்
போர்த்திக் கொள்வதால் அழகு தான்
ஆனால் பொன்னாடையில் எங்கு பொன்?

— என். தனுசுஜன், சண்டிலிப்பாய்.




இங்குள்ள சித்திரத்தில் ஒரே மாதிரியான எழுத்துக்களைத்தாங்கியுள்ள பொம்மை களைக்கண்டுபிடித்து அவற்றுக்கு வட்டமிட்டுக்காட்டுங்கள்.

*வெங்காயத்தை உரிக்கும் போது வெளிப்படும் ப்ரோப்பின் ஸல் போனிக் அமிலம் எளிதில் ஆவியாகி காற்றில் கலந்து நம் கண்களை அடைவதனாலேயே கண்களிலிருந்து கண்ணீர் தோன்றுகின்றது.

*நகங்களிலும் மயிர்களிலும் உயிர் அணுக்கள் இல்லை என்று கூறப்படுகின்றது. அது தவறு முடியின்வேரில் உயிர் அணுக்கள் இருக்கின்றன. தலைக்கு வெளியில் தெரியக்கூடிய முடியின் மேற்பகுதி மட்டுமே இறந்த கலங்களினால் ஆனது.

## ஔவையார்

ஔவையார் சிறந்த தமிழ்ப் புலவர் ஆவார். இவர் தமிழ் நாட்டில் வாழ்ந்தார். தெளிந்த அறிவுடன் தேனினுமினிய பாடல்கள் பலவற்றை இயற்றினார். ஆத்தி சூடி, நல்வழி போன்றவை இதற்கு சான்றாகும். நன்றே வாழ வழிகூறும் கொன்றை வேந்தனும் இவரது ஆக்கமேயாகும். இவர் முருகக் கடவுளின் மீது மிகுந்த பக்தி யுடையவர். தெள்ளு தமிழ் இவர் நாவில் துள்ளி விளையாடும. இவர் கூறும் குறுகிய வரிகளும் பெரிகிடும் கருத்தை உடையன. நன் நெறிகள் பல சொன்ன ஔவைப்பாட்டியை என்றும் போற்றுவோம். ஔவையின் அமுத மொழிகள் அகிலம் உள்ளவரை வாழும் என்பது திண்ணம்.

கு.விந்துஜா, தரம்3, யா/சா.இ.ஆ.பாடசாலை.

## தெரிந்து கொள்ளுங்கள்

1.ஒலிவ் இலை ..................................சமாதானம்
2.வெண்புறா..........................................அமைதி
3.சிவப்புச் சக்கரம்...............................வளர்ச்சி
4.கறுப்புக் கொடி........................................துக்கம்
5.சிவப்பு முக்கோணம்........குடும்பக்கட்டுப்பாடு
6.சிவப்பு நிறச்சிலுவை........... மருத்துவ உதவி
7.மஞ்சள் கொடி......... தொற்றுநோய்(கப்பலில்)
8.சிவப்பு விளக்கு ....................................ஆபத்து

வி.ர.குணாளன்
ஆண்டு – 10 "D", யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.




விண்வெளியில் சர்வதேச மிதக்கும் ஆராய்ச்சி நிலையம் செயற்பட்டு வருகிறது. இதில் பணிபுரியும் விண்வெளி வீரர்களுக் காக ரஷ்யா ஒரு விண்கலத்தில் உணவுப் பொருட்களை அனுப்பி வைத்தது.

ஆனால் அந்த விண்கலம் குறிப்பிட்ட இடத்தில் நிற்கவில்லை. இதனால் இவ்விண் கலத்தைப் பழுது பார்ப்பதற்காக 2 விண் வெளி வீரர்களை ரஷ்யா இம்மாதம் 3ஆம் திகதி விண்வெளிக்கு அனுப்பி வைத்தது. இதன் காரணமாக அமெரிக்கா அனுப்புவதற்கு தயாராக இருந்த எண்டீவர் விண் கலத்தின் பயணம் பிற்போடப்பட்டுள்ளது.



## அறிவியல் விந்தைகள்

கிரேட் ஹான்பில் என்ற நீண்ட அலகு கொண்ட பறவை இந்தியா, சீனா ,சுமாத்திரா ஆகிய நாடுகளில் காணப்படுகின்றது. இந்த அழகிய பறவைக்குப் பிடித்த உணவு பழங்கள் ஆனால் குரல் கடின மானது கத்தும் போது கரகரவென்று பயத்தை ஏற்படுத்தும்.

*நீருக்கடியிலும் பறக்கக் கூடியது .

*பறவைகளைப் பற்றிப் படிப்பதற்கு 'ஆர்னிதாலஜி' என்று பெயர்.

*உடல் முழுவதும் ரத்தம் பாய்ந்தோடுவதற்கு 60 விநாடி கள் தேவைப்படுகின்றன.

*லெமில் எனப்படும் நீண்ட வாலுடைய எலி போன்ற சிறிய பிராணி நோர்வே நாட்டில் உள்ளது. இதன் ஆயுட் காலம் – நான்கு வருடங்களே

'பென்குவின் பையா'இது மனிதனைப் போலவே வி[illegible]டிக்கவும் கூடியது.

## பட்டங்கள்

தெருவிலே போகும் வரை............................பயங்கர வாதிப்பட்டம்!
நாடிழந்து நிற்கும் போது .........................................அகதிப்பட்டம்!
சொந்தங்கள் இழந்த போது..................................அநாதைப் பட்டம்!
சிறையினில் இருக்கும் போது.......................சந்தேகக் கைதிப்பட்டம்!
படிக்காமல் தமிழருக்கு கிடைத்த பட்டங்கள் இவை!

ஆர்.கம்ஷா, தரம் – 8, மல்லாவி.



ஷர்மிலா

## பசு

உலகத்தில் எத்தனையோ பிராணிகள் இருந்தாலும் பசுவையே நாம் தெய்வமாகத் தொழுகின்றோம். பசுவைக் கோமாதா என்கின்றோம். தாய்க்கு அடுத்தபடியாகப் பசுவைத்தான் மாதா என்கிறோம். பசுவின் பால்,தயிர்,நெய், கோசலம்,கோமயம் ஆகிய இந்த ஐந்தும் பஞ்ச கவ்வியம் எனப்படும். வீடு மெழுகவும் ,கரைத்துத் தெளிக்கவும் கோமயத்தைப் பாவிக்கின்றோம். தீய கிருமிகளை அழிக்கும் இயல்பு இதற்கு உண்டு.

பசு அன்பின் உருவமாக விளங்குகின்றது. அதன் பாலைக் கன்று மட்டும் குடித்துப் பயன் அடைவதில்லை. எத்தனையோ குழந்தைகள் அந்தப் பாலினால் உயிர் வாழ்கின்றனர். இதன்மூலம் தன்னலம் கருதாத பண்பைப் பசுவின் மூலம் நாம் கற்றுக் கொள்ளலாம். பசுவைப் போற்றிக் காப்பது நமது கடமையாகும்

பா. புகழ்யா, கிங்ஸ்ரன் சர்வதேச பாடசாலை, வெள்ளவத்தை.

## சிறுவர் கைவண்ணம்



கோ. மதுஷன்
தரம்-8
யா/மத்திய கல்லூரி
வண்ணார் பண்ணை.



• தீபகரன்
ஆண்டு -5 கிங்ஸ்டன் கல்லூரி
வெள்ளவத்தை.

## பூத்த மலர்கள்

எங்கிருந்தோ பூத்த மலர்கள் எல்லாம் இறைவன் சந்நிதியில் ஒன்று கூடுவது போல எங்கிருந்தோ பிறந்த நாம் எல்லோரும் அன்பு என்னும் சந்நிதியில் ஒன்று கூடுவோம்.

ஏகாம்பரராசா றதி,7 ஆம் வட்டாரம்
மு/புதுக்குடியிருப்பு. முல்லைத்தீவு.

## மாணவரின் கடமை

இன்றைய மாணவரே நாளைய சமுதாயத்தை உருவாக்குகின்றவர்கள். அவர்களே நாளை நாட்டை ஆளப்போகும் மன்னர்கள். 'தொட்டில் பழக்கம் சுடுகாடு வரையும்' என்பதற்கொப்ப மாணவர் மனதை இன்று பண்படுத்தினாலே நாளைய சமுதாயத்தை சீராக உருவாக்க முடியும். எவ்விஷயத்தையும் தத்தம் சிந்தனைக்குட்படுத்தி தீர ஆலோசித்து முடிவெடுக்க வேண்டியது. எந்நேர மும் விழிப்புடன் இருந்து செயலாற்ற வேண்டியது அவர்களுடைய கடமை ஆகும். மாணவர்கள் தாமும் வாழ்ந்து மற்றவர்களை யும் வாழ வைக்க வேண்டும் என்னும் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண் டும். ஒழுக்கத்தில் விழுப்பமடைவது மாணவரின் தலையாய கடமையாகும். மாற்றான் படும் துன்பத்தைக் கண்டு மனமிரங்கி அவனுக்கு கை கொடுப்பது மாணவர்களில் இயல்பாக இருத்தல் வேண் டும். மாண வர்கள் கடமை, கண்ணி யம், கட்டுப்பாடு என்பவற்றை மனதில் வைத்து நாட்டிற்கும் ,சமூகத்திற்கும் பாட சாலைக்கும் சேவை செய்து நற் பெயர் பெற வேண்டும்.

செ.ரியுடர் கொட்வின்,
ஆண்டு –9'C'
புனித பத்திரிசியார் கல்லூரி,யாழ்ப்பாணம்

## கார்களும் உற்பத்தி செய்யும் நாடுகளும்

1.மாருதி .... இந்தியா 2.போர்ட் ....அமெரிக்கா
3. டொயாட்டா .......................................யப்பான்
4. பியட்.................................................இத்தாலி
5.பேர்ஜோ.............................................பிரான்ஸ
6.றெனோல்ட்.......................................இங்கிலாந்து
7.மேர்சிடஸ் பென்ஸ் ...............................ஜேர்மனி

எஸ். கிரிதரன், ஆண்டு 4 'B',
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி, கொழும்பு 15

## வானியல் அதிசயம் நட்சத்திர உருவங்கள்

வருடத்தின் வெவ்வேறு காலப் பகுதிகளில் கோள்கள் வெவ்வேறு கோலங்களில் இருப்பதை இரவில் எம்மால் காண முடியும். நட்சத்திர அமைவுக் கோலங்கள் பன்னிரண்டும் காலச்சக்கரம் எனப்படுகிறது. இந்த நட்சத்திரத்தை மையமாக வைத்தே சூரியன், சந்திரன் போன்ற கோள்கள் சுற்றி வருகின்றன. நட்சத்திரங்கள் தமது கற்பனைக் கடவுள்களின் வடிவங்களில் இருப்பதாக முற் காலத்து மக்கள் இனங்கண்டு கொண்டனர். இவ்வடிவங்கள் இப்போதும் வானத்தில் குறிகாட்டிகளாக இருந்து எமக்கு உதவுகின்றன. நட்சத்திரங்கள் அமைந் துள்ள பாதைகளை நேர்கோடுகளினால் இணைத்தால் கீழ்காணப்படு வதைப் போன்ற நேர்கோட்டு உருவத்தைப் பெற முடியும் என்று வானிய லாளர்கள் தெரிவிக் கின்றனர். பூமி சுழலும் போது நட்சத்திரங்கள் தோன்றுவதும் , மறைவதுமாயிருக்கின்றன. வட துருவ நட்சத்திரம் மட்டும் இவ்வாறு தோன்றி மறைவதில்லை. இது பூமியின் வடமுனைக்கு மேலே நேராக வானத்தில் அதே இடத்தில் எப்போதுமிருப்பது போல தெரிகிறது. இதற்கு மிகவும் நெருக்கமாக உள்ளது துருவ நட்சத்திரங்கள்





## தபால் சுவல்கள்

16 ஆம் நூற்றாண்டில்தான் முதன் முதலாக முறை யான அஞ்சல் முறை ஆரம்பமானது. அதற்கு முன்பு வரை புறா, அன்னம், போன்றவற் றின் மூலம் தூது விடும் முறையே இருந்தது. மன்னர் களது சந்தேக புத்தியைத் தடுக்கவும், நாட்டிற்கு வரு மானத்தைப் பெருக்கவும், பொதுமக்களுக்கு உதவ வும், என்ற மூன்று காரணங்களுக்காகவே தபால் தலை அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டாம் ஹென்றி முதன் முதலாக இங்கிலாந்தில் அரசாங்க அஞ்சல் சேவையைத் தொடங்கினார். அரசாங்க அங் கீகாரமில்லாமல் யாரும் தபால் சேவையில் ஈடுபடக்கூடாது என 1609 இல் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது? 1680 இல் இலண்டனைச் சேர்ந்த வியா பாரி ஒருவர் சொந்தமாக தபால் சேவையை ஆரம் பித்தார். பின்னர் அரசாங்கம் அதைத் தன்வசம் எடுத்துக் கொண்டு 1801 ஆம் ஆண்டு வரை வெற்றிகரமாக நடத்தியது. இப்போதுள்ளது போன்று முறையான தபால் சேவை 1840 இல் ஆரம்பமானது. இங்கிலாந்தில் ஆரம்பகாலத்தில் பின்பற்றப்பட்ட தபால் முறையையே இப்போது எல்லா நாடுகளும் பின்பற்றுகின்றன.

இ.குகப்பிரியா,தரம்—9,யாழ்ப்பாணக் கல்லூரி.

## உலகில் முக்கியம் வாய்ந்தவை

1. மிகப் பெரிய தீவு ....... கிறீன்லாந்து
2.மிக உயரமான மலை உச்சி...எவரெஸ்ட்
3. மிகப் பெரிய பூங்கா ..............கனடா அல்பெடா என்னும் இடத்திலுள்ள 'உப்பபில் லோ'
4. மிகப் பெரிய கடல்... தென்சீனக்கடல்
5. பெரிய வளைகுடா .....மெக்சிக்கோ
6. மிகப்பெரியவிரிகுடா ஹட்சன்விரிகுடா
7. மிகப் பெரிய கண்டம் ......... ஆசியா
8. மிக நீளமான நதி .......... நைல் நதி
9. மிகப் பெரிய பாலைவனம் ...சகாரா
10. மிகப் பெரிய பறவை......தீக்கோழி
11. நீளமான மலைத்தொடர்.. அந்தீஸ்
12.மிக உயரமான அணை....போஸ்டர்
13மிக வெப்பமான இடம் ................எதியோப்பியா" டால்லொல்"
14. அதிகமழைபெறும் இடம்..... இந்தியா
15. முதல்விமானத்தின்பெயர்...பிளயர்01
16. புகழ் பெற்ற நீர்வீழ்ச்சி – நயாகரா

தொகுப்பு:—ஏ. நிதாகரன்
மண்டூர்—02

## நான்

எனது பெயர் வேலுப்பிள்ளை குகன். எனது வயது எட்டு. நான் உடை யார்கட்டு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கிறேன். நான் விரும்பும் பாடம் கணிதம் ஆகும். எனது பாடசாலை அதிபரின் பெயர் ராஜா. எனது வகுப்பாசிரியரின் பெயர் மதுரா. எனது பொழுதுபோக்கு சித்திரம் வரைதல். நண்பனின் பெயர் சுஜன். எனக்கு பிடித்த விளையாட்டு வலைப் பந்தாட்டம் ஆகும்.

வே.குகன் .தரம்—3
முல்லை. உடையார் கட்டு
மகா வித்தியாலயம்.

## வண்ணத்துப் பூச்சிக்குப் பாதுகாப்பு

கார்கன் வாண்டரி ஸ்கிப்பர் என்ற அபூர்வமான வண்ணத்துப்பூச்சிகள் வடக்கு நிவேடா மற்றும் வடகிழக்கு் கலிபோனிய பகுதிகளில் வாழ்கின்றன. இந்த வகை வண்ணத்துப்பூச்சிகளுக்கு அந் நாடுகளின் அரசாங்கங்கள் பாதுகாப்பு வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளது

இந்த ஸ்கிப்பர் இன வண்ணத்துப் பூச்சிகள் விரைவாக அழிந்து வருவதே இதற்குக் காரணம்.



சர்வதேச நல்லொழுக்க தினத்தை யொட்டி வவுனியா யூனியன் குளத்தில் நல்லொழுக்க தின விழா நடைபெற்றது. விழா வில் சிறுமி யொருவர் நடனமாடும் காட்சி.

# பெண்கள் கேட்பது சுதந்திரமா, விடுதலையா?



பெண்களுக்காகவும் அவர்களின் உரிமைக்காகவும் இன்று குரல் எழுப்பப்படுகிறது. பெண்களுக்கு சமுதாயத் தில் உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன. இதனை அவர்கள் நன்கு உணர்கிறார்கள். ஆனால் ஒப்பீட்டளவில் முன்பை விட தற்போது சமுதாயத்தின் பல்வேறுபட்ட துறைகளிலும் பெண்கள் முன்நிற்பதாக கருதுபவர்களும் உள்ளனர்.

அவ்வாறாயின் உண்மையாகவே இங்கு இருக்கும் சிக்கல் என்ன?

சுதந்திரம் என்பது மனரீதியானது. விடுதலை என்பது உடல் ரீதியானது. எந்த ஒரு பொறுப்பும் இல்லாமல் கூட விடுதலை பெறலாம். விடுதலை கிடைத்து விட்ட வெறும் உணர்வு மட்டும் இருந்தால் சுதந்திரம் பறிபோய் விடும். விடுதலை கிடைத்து விட்டால் நிரந்தர சுதந்திரம் கிடைத்து விட்டது என்று அர்த்தமல்ல, சுதந்திரத்தை உழைப்பின் மூலம் பெற்றுப் பாதுகாக்க வேண்டும்.

பெண்களின் சுதந்திரத்திற்கும் விடுதலைக்கும் இடையிலான வேறுபாடும் இதுதான். வெளியில் சென்று பெண்கள் கல்வி கற்கிறார்கள், வேலை செய்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் அவர்களின் சிந்தனைக்கும் ஆலோசனைகளுக்கும் எந்தளவு மதிப்பளிக்கப்படுகிறது? உயர் தொழில் பதவிகளில் இருக்கும் பெண்கள் தமது தீர்மானங்களை தொழில் நிறுவனங்களில் அமுல்படுத்து கிறார்கள். ஆனால் அதே பெண்களின் கருத்துக்களுக்கு அவர்களின் வீடுகளில் எந்தளவு மதிப்பளிக்கப்படுகிறது என்று பார்த்தால் அது மிக குறைவாகவே இருக்கும். இங்கே அவர்களின் சிந்தனை இயந்திரமயமாக்கப் படுகிறது. தொழிலில் இருப்பது நிறுவன ரீதியான தீர்மானங்கள், ஆனால் உணர்ச்சிபூர்வமாக ஆழ்மனதிலி ருந்து வரும் சிந்தனைகளை வீட்டில் வெளியிடும் போது, அவை ஏற்றுக் கொள்ளப்பட்டால் தான் ஒரு பெண்ணுக்கு மனத்திருப்தி ஏற்படும். இந்த திருப்தி கிடைக்காத போது பெண்களின் சுதந்திரம் மறுக்கப்பட்டிருப்பதை உணர முடியும்.

சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் ஒரு கைதி தனது சிந்தனைகளை புத்தகமாக எழுதி வெளியிடுகின்றான். அவன் சிறையில் உடல் ரீதியாக அடைக்கப்பட்டுள்ளான், ஆனால் அக் கைதியினுடைய கருத்துக்களுக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை சிறைக்கு வெளியில் இருக்கும் பலர் தமது கருத்துக்களை வெளியே கூற முடியாமல் இருப்பார்கள். இது தான் விடுதலைக்கும் சுதந்திரத்திற்கும் இடையிலான வேறுபாடு.

இன்றைய பெண்கள் உயர் கல்வி கற்கிறார்கள், நல்ல பதவிகளில் இருக்கிறார்கள். வேறு என்ன வேண்டும், என்று கேட்பவர்களைச் சந்தித்திருப்பீர்கள். இவர்கள் மேலோட்டமாக தெரிவதை மட்டுமே பார்க்கிறார்கள். இந்த வெளிப்படையான விடயங்களை காட்டியே நியாயம் தேட முனைகிறார்கள். இது நியாயமான ஒரு முயற்சி அல்ல.

பெண்களின் சிந்தனைக்கு மதிப்பளிக்கப்படுவது அவசியம். அப்போது தான் அந்த குடும்பத்தின் வளர்ச்சி ஆக்க பூர்வமானதாக அமையும். குறிப்பாக பிள்ளைகளின் வளர்ச் சிக்கு இது உறுதுணையாக இருக்கும். ஒரு பெண்ணின் சிந்தனை உயர்த்தப்படும் போது அவளை சார்ந்தவர்களே பயன் அடைகின்றனர் என்பதை பலர் மறந்து போகிறார்கள்.

இன்று பெண்களுக்கு சுதந்திரம் கிடைத்து விட்டது என்று கூறுவோர் இன்னொரு முறை சிந்தித்துப் பாருங்கள். உங்களுக்கு உங்கள் வீட்டில் கருத்துச் சுதந்திரம் இருக்கிறதா? முடிவுகள் எடுக்கப்படும் போது உங்கள் கருத்துக்களுக்கு எந்தளவுக்கு மதிப்புக் கொடுக்கிறார்கள்?

உங்கள் தீர்மானங்களுக்கு வீட்டில் மதிப்பிருக்கிறதா? இல்லை என்றால் நீங்கள் புரட்சி செய்ய முடியும். குடும்ப அங்கத்தவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்க உங்கள் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுங்கள். இனி வளரும் சமுதாயத்தின் சிந்தனைகள் திருத்தமானவையாக இருக்கட்டும்.



# உத்தரவாதம் தேவை

தொழிலுக்குப்போவதென்பது இக்காலத்துப்பெண்கள் அனைவருக்கும் பொதுவான ஒன்றாகும். பெண்கள் ஒருவரை ஒருவர் சந்தித்தால் சேலையையும் நகையையும் பற்றிப் பேசிய காலம் மாறிவிட்டது. உன் வேலை எப்படி இருக்கிறது, மேலே என்ன செய்யப் போகிறாய்' என்று தான் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் நலம் விசாரித்துக் கொள்கிறார்கள்.

தொழில் என்பது, வேலைக்கு போகிறோம், சம்பளம் தருகிறார்கள் என்பதுடன் முடிந்து போகும் சமாச்சாரம் அல்ல. ஏதோ தொழில் செய்கிறோம் என்பதுடன் போதும் என்று நிறுத்திக் கொள்ளக் கூடாது. நீங்கள் செய்யும் தொழில் மூலம் உங்கள் எதிர்காலம் எந்தளவிற்கு உறுதியாக அமையப் போகிறது என்பது முக்கியமானது.

செய்யும் தொழிலின் மீதும் நிறுவனத்தின் மீதும் நம்பிக்கை ஏற்பட வேண்டும். அதாவது உங்கள் தொழிலுக்கு உத்தரவாதம் (Job Gurantee) தேவை. நாளைக்கே உங்களை வேலையை விட்டு நீக்கி விட்டோம் என்று நிர்வாகம் சொன்னால் நீங்கள் தெருவில் நிற்க முடியாதல்லவா?

உங்களுக்கென்று கொடுக்கப்பட்டிருக்கும் வேலையை எப்போதும் திறம்படச் சரியாக செய்யுங்கள். தவறுகள் நடப்பது இயற்கை, ஆனால் அவற்றை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டாம். உங்கள் தவறுகள் சுட்டிக்காட்டப்படும் போது அவற்றிற்கான காரணத்தை தெளிவாக விளங்கிக் கொள்ளுங்கள். வேலை செய்யும் போது எமக்கென்று சில வரையறைகள் இருக்கின்றன. எல்லாவற்றையும் தூக்கிப் போட்டுக் கொண்டால் வேலைப்பளுதான் அதிகரிக்கும். உங்களுக்குரியது சிறிய பொறுப்பானாலும் அதனை சரியாகச் செய்வதே முக்கியம்.

உங்களுக்கும் சக ஊழியர்களுக்கும் இடையே தொழில் ரீதியான முரண்பாடுகள் ஏற்படுவதை இயன்றளவு தவிருங்கள். தனிப் பட்ட பிரச்சினைகள் இருப்பின் அவற்றை தொழிலுடன் கலக்கவும் வேண்டாம்.

செய்யும் தொழிலில் திருப்தி இருந்தால் மட்டுமே அதில் நிலைத்திருக்க முடியும்.

## கவனம்... ஆபத்து

முகம், கை, மற்றும் கால் பகுதிகளில் வளரும் முடியை அகற்றிவிட பல பெண்கள் விரும்புகிறார் கள். இதற்காக திரெட்டிங், வாக்ஸிங், ஷேவிங் ஆகிய மூன்று முறைகளை கையாள்கிறார்கள்.

திரெட்டிங்: பிரத்தியேக நூல் ஒன்றை கைகளால் இறுக்கமாக பிடித்து நூலால் முடியை கத்தரிக்கும் முறை. இதனால் முடி வேரோடு வராது, அதே வேளை சருமமும் பாதிக்கப்படாது.

வாக்ஷிங் : முடியை அகற்றும் மெழுகை சருமத்தில் பூசி, துணியால் அழுத்தி எதிர்திசையில் இழுக்க வேண்டும். இதனால் முடி வேருடன் கழன்று வரும்.

ஷேவிங் : சருமத்தில் சவர்க்காரத்தை பூசி விட்டு ரேசரால் முடியை அகற்றும் முறை இதன்மூலம் முடி மேலோட்டமாக மட்டுமே அகற்றப்படும்.

இம்மூன்று வழிகளிலும் ஷேவிங் சற்று ஆபத்தானது. பெண்களின் சருமம் மென்மையானது, எனவே சருமம் பாதிப்படையும் வாய்ப்புகள் அதிகம். ஷேவிங் மூலம் முடி மேலோட்டமாக தான் நீக்கப்படும் வேருடன் அகற்றப்படுவதில்லை, எனவே மீண்டும் மீண்டும் முடி விரைவாக வளர்ந்து விடும்.

ரேசர் கூர்மையானது, எனவே காயங்கள் ஏற்படுவதுடன் கூர்மைகுறையும் போது சருமம் சிராய்ந்து போகும் அபாயமும் இருக்கிறது. அத்துடன் தொடர்ந்து ரேசரை உபயோகிப்பதன் மூலம் சருமம் அதன் மென்மையை இழக்கக் கூடும்.

எனவே ஷேவிங்கை விட திரெட்டில் வாக்சிஸ் முறைகளை நீங்கள் பின்பற்றலாம். இவற்றில் எந்த ஒரு பக்க விளைவும் இல்லை என்று கூற முடியாது. ஆனால் ஒப்பீட்டளவில் தாக்கங்கள் குறைவாகவே இருக்கும்.

# பெண

பசீனா

# தயக்கம் வேண்டாம்

பெண்களுக்கு உடல்ரீதியான சிக்கல்கள் ஏற்படுவது அதிகம். ஆனால் அவற்றைப் பற்றி வெளியில் சொல்ல பலர் வெட்கப்படுகிறார்கள். இதனால் சில சந்தர்ப்பங்களில் எதிர்பாராத அளவுக்கு பாரதூரமான நோய்களும் ஏற்பட்டு விடுகின்றன.

தமக்குள்ள உடல்ரீதியான பிரச் சினைகளை வைத்தியரிடம் கூறுவ தற்கு தயக்கப்பட தேவையில்லை. ஆண் வைத்தியர் ஒருவரிடம் பேச முடியாது என நினைத்தால் பெண் வைத்தியரை நாடுங்கள். இதை விட்டு பேசாமல் இருந்தால் நெருக்கடியான முடிவுகளை சந்திக்க நேரிடும்.

மாத விலக்கு சிக்கல்கள், பாலியல்நோய்கள் சில விடயங்கள் தொடர்பான சரியான விளக்கமின்மை போன்ற பிரச்சினைகள் பெண்களுக் குள்ளன. இவற்றை பற்றி சிலர் தமது தாயிடம் கூட சொல்லாது இருக்கிறார்கள், நண்பிகளுடன் கலந்து பேசினாலும் சரியான தீர்வைத்தர அவர்களால் முடியாது. பெண்களுக்கு ஏற்படும் உடல் ரீதியான சில சிக்கல்கள் பற்றி அவர்களின் கணவர்களுக்கு பல சந் தர்ப்பங்களில் குறைவான அறிவே இருக்கிறது. இதற்கு சரியான தீர்வு பொருத்தமான வைத்தியரை நாடுவது தான்.

பொருத்தமான வைத்தியரை எவ்வாறு தெரிவு செய்யப்போகிறீர்கள்? சற்று அதிகமாக பணம் செலவானாலும் வைத்திய நிபுணர் ஒருவரை நாடுவதே சிறந்தது. அந்த வைத்தியரிடம் உங்கள் பிரச் சினை பற்றி தெளிவாகக் கூறுங்கள். மேலோட்டமாக கூறிவிட்டால் சில சந்தர்ப்பங்களில் வைத்தியருக்கு நோயை சரியாக கண்டுபிடிக்க முடியாமல் போகும்.

உடல் ரீதியாக ஏற்படும் இந்த



பிரச்சினைகள் யாருக்கும் ஏற்படாத விசித்திரமானவை அல்ல. ஏனைய நோய்களுக்கு வைத்தியரை நாடுவதைப் போல் தான் இதுவும். இதில் தயக்கமடைய வேண்டிய எந்த தேவையும் இல்லை.

# பசுமையான பால்



- கர்ப்பிணிப் பெண்கள் ஒரு நாளைக்கு மூன்று குவளை பாலை கட்டாயம் அருந்த வேண்டும்.
- எடையை குறைக்க விரும்புபவர் கள், இதயம் பலவீனமாக இருப்பவர்கள், ஆகியோர் கொழுப்புச் சத்துள்ள பாலைக் குடிக்க கூடாது.
- நூறு கிராம் பாலில் 87.5 கிராம் தண்ணீர் இருக்கிறது. மிகுதி 12.5 கிராமில் தான் புரதமும் கனியுப்பும் ஏனைய சத்துகளும் இருக்கின்றன.
- பால் அதிகம் சுரப்பதற்காக பசுக்களுக்கு ஊசி ஏற்றப்படுகிறது. இவ்வாறான பசுக்களின் பாலை அருந்தும் குழந்தைக ளுக்கு ஒவ்வாமை ஏற்படலாம்.
- உலக அளவிலான கணக்கெடுப்பின் படி ஒரு நாளில் ஒருவர் சராசரியாக 285 கிராம் பால் அருந்துவார்.
- சரியாக புல், தாவரங்கள் சாப்பிடாத பசு விலிருந்து கிடைக்கும் பாலில் புரத மும் கல்சியமும் குறைவாகவே இருக்கும்.

# இசைத்தேன் சுரந்த இசை வேள்வி

கொழும்பு கம்பன் கழகம் ஏற்பாடு செய்திருந்த ''ஸ்ரீராமநாம கானாமிர்தம்'' என்னும் இசைக் கோயிலின் திருவிழாக் கொண்டாட்டங்கள் மிகவும் சிறப்பாக நிகழ்ந்து நிறைவடைந்தன.



சின்மியா சகோதரிகள் வழங்கிய இசை அரங்கு

வெகு பிரசித்தமாகிவிட்ட கொழும்புக் கம்பன் கழகத்தின் இசை வேள்வி வரிசையிலே இம்முறை நிகழ்ந்தது 5ஆவது இசை வேள்வியாகும்.

இது நவம்பர் 25ஆம் திகதி தொடக்கம் 2 ஆம் திகதி வரை இசை அரங்கு, நாத அரங்கு, வீணை இசையரங்கு, கெஞ்சிற் கச்சேரி என தொடர்ந்து 8 நாட்கள் இசைப் பிரியர்களுக்கு இசைத்தேன் ஊட்டி, அவர்களின் கவலைகளைக்களைந்து ஆனந்தசயனத்தில் ஆழ்த்தியது.

இம்முறையும் இசைவேள்வி கொழும்பு இராம கிருஷ்ண மிஷன் மண்டபத்திலேயே நிகழ்ந்தது.

தமிழகத்தின் முன்னணி இசை மேதைகளும் ஈழத்து இசைப் பிரபலங்களும் வாய்ப்பாட்டு, இசைக் கருவிகள் என்னும் ஆகுதிப் பொருட்களைச் சொரிந்து இசை வேள்வியை வளர்த்தார்கள்.

இசை மேதை மதுரை ரி.என். சேஷகோபாலனின் வீணை இசை அரங்கு, ஏனைய இசை வேள்விகளில் வீணை இசைக் கச்சேரி இடம் பெறாத குறையை நீக்கியது.

இசை வேள்வியில் தமிழகக் கலைஞர்களுக்கு சற்றும் சளைக்காத எம்நாட்டு இசைமேதைகளான ஏ.கே. கருணாகரன், திருமதி கிரிஷ்ணப்பிரியா, திருமதி சுப்பிலட்சுமி, சச்சிதானந்தன், எம்.பி. பாலகிருஷ்ணன், ஆர். புண்ணியமூர்த்தி ரி. உதயசங்கர், என். ஆர். எஸ். சுதாகரன் ஆகியோரும் இளம் கலைஞர்களும்சேர்ந்து ரசிகர்கள் மனதைகவர்ந்து கொண்டார்கள்.

ஒலி, ஒளி, மேடை அமைப்புகளாலும், நிகழ்ச்சிகளை திட்டமிட்டு திறம்பட நடத்தும் முறையாலும் இரசிகர்களை கவரும் கம்பன் கழகம். இம்முறையும் தனது தனித்துவத்தையும், சிறப்பையும் நிரூபித்துக்கொண்டது.

நாத கணபதி நர்த்தனமாடும் தேவலோகத்து இசைக் கூடமோ என்று சொக்கும் வண்ணம் பல வண்ண மின் குமிழ்கள் விட்டு விட்டு சிரிக்கும் வண்ணம் கண்ணைக் கவரும்படி மேடையை அலங்கரித்திருந்தனர்.

சிம்மயா சகோதரிகள் எனப் புகழ் பெற்ற உமா, ராதிகா சகோதரிகளின் இசை அரங்கு இரசிகர்களை வெகுவாகக் கொள்ளை கொண்டது. ஏழுஸ்வரங்களும் இவர்களின் இதழ்வழி அருவியெனத் தவழ்ந்து அணி செய்தன.

இறுதிநாள் சிறப்பு நிகழ்ச் சியாக மதுரை ரி.என். சேஷ கோபாலனின் இசை அரங்கு அமைந்தது.

மறைந்த இசைக் கலை ஞர்களின் உருவப் படங் கள் திரை நீக்கம் செய்யப் பட்டன. இவர் களுக்கான அஞ்சலி உரையை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபன தமிழ் நிகழ்ச்சிப் பணிப் பாளர் அருந்ததி ஸ்ரீரங்க நாதன் நிகழ்த் தினார்.



7ஆவது இசையரங்கின் பிரதம அதிதி இந்திய தூதரககவுன்ஸிலர் கே.பி. கோகுலச்சந்திரனும் அவரது பாரியாரும் மற்றும் சபையின் ஒரு பகுதியினரும்

இசை வேள்வியில் இணைந்து கொண்ட இசைக்கலை ஞர்கள் கௌரவிக்கப் பட்டார்கள். மதுரை ரி. என். சேஷ கோபாலனை, உயர் நீதிமன்ற நீதியரசர் சி. வி. விக்னேஸ் வரன் கௌரவப்படுத்தினார்.

கம்பவாரிதி இ. ஜெயராஜை தங்க உருத்திராட்ச மாலையால் அலங்கரித்து, அழகு செய்து, கௌரவப்படுத்தி மகிழ்ந்தார். மயூராபதி தேவஸ்தான அறங்காவலர் பொன். வல்லிபுரம்.

கொழும்புக் கம்பன் கழகம் எட்டுத் தினங்களும் வழங்கிய இசைத்தேன் விருந்தின் போதை மயக்கம் 6ஆவது இசைவேள்வி வரை இரசிகர்களை இன்பத்தில் ஆழ்த்திக் கொண்டே இருக்கும்.

— சிவக

# திருக்குறள் விநோத நிகழ்வு

பாடசாலை மாணவ மாணவிகளிடையே திருக் குறளைக் கற்பதற்கு ஆர்வத்தையும், உற்சாகத்தையும் அளித்து ஊக்கப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு திருக்குறளில் பாட்டுக்குப் பாட்டு என்னும் நிகழ்ச்சி ஒன்று கொழும்பு தமிழ்ச்சங்க ஆதரவில் நடைபெறவுள்ளது.

நான்கு பிரிவுகளாக இப்போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

1. ஆண்டு 6,7,8 கீழ்ப்பிரிவு 1 முதல் 150 குறள்கள்
2. ஆண்டு 9,10,11 மத்திய பிரிவு 1 முதல் 250 குறள்கள்
3. ஆண்டு 12,13 மேற்பிரிவு 1 முதல் 380 குறள்கள்
4. 4ஆவது பிரிவு சகலரும் பங்குபற்றும் நிகழ்ச்சி, இப்போட்டிக்கு வயதுக் கட்டுப்பாடு கிடையாது. இப்பிரிவுக்கு 1330 குறள்களும் அடங்கும்.

பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் பாடசாலைப் பெயர், தமது பெயர், ஆண்டு பிரிவு, வயது என்பவற்றை தாங்களே எழுதி வகுப்பாசிரியர், அல்லது அதிபரினால் உறுதிப்படுத் தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் திகதி 10.01.2002

மேலதிக விவரங்களுக்கு

கொழும்பு தமிழ்ச் சங்கம்
7. 57ஆவது ஒழுங்கை,
உருத்திரா மாவத்தை, கொழும்பு — 06.
01 — 583759

# வள்ளுவரின் படத்துடன் கடித உறைகளில் திருக்குறள்

உலகப் பொது நூலாகக் கொள்ளப்படும் திருக்குற ளின் அறிவை மக்களிடையே விருத்தி செய்து பரவச் செய் யும் நோக்கில் அரிய பல முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண் டிருப்பவர், திருக்குறள் சிந்தனையாளர் இ. சிறிஸ்கந்தராசா.

இவர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ''திருக்குறள் ஓவியத்தில் திகழும் வர்ண ஜாலங்கள்'' என்ற நூலை வெளியிட்டிருந்தார்.

திருக்குறள் சமுத்திரத்திற்குள் முத்துக்குளித்து அரிய பல முத்துக் கருத்துக்களை அனைவரும் அறியும் படி திருக்குறள் மூலம் வள்ளுவர் உலகுக்கு எடுத்துக் காட்டிய சிந்தனைகள், கருத்துக்கள், என்பவற்றை தனது நூலின் மூலம் தெளிவாக காட்டியுள்ளார் இவர்.

திருக்குறளைப் பரவச் செய்யும் இவரது அடுத்த முயற்சியாக கடித உறைகளில் பல வண்ணங்களில் திருவள்ளுவரின் படத்துடன் கூடிய குறள்களை அச்சிட்டு விநியோகிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

அத்துடன் இவர் நகைச்சுவைக் கதம்பம். என்ற நூலை வெளியிட்டுள்ளதும் ஆயிரம் விடுகதைகள் என்னும் நூலை வெளியிடவுள்ளதும் குறிப்பிடத்தக்கவை.

## கலையமுதம்

க. சிவகுமார்

# பெருமை சேர்த்த மாணவர்களை பெருமைப்படுத்திய நிகழ்வு

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் கள் கடந்த நவம்பர் 24ஆம் திகதி (Colours Night) கலர்ஸ் நைட் என்னும் நிகழ்ச்சியொன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

பாடசாலைக்கு பல்வேறு துறைகளிலும் பெருமையை யும், புகழையும் ஈட்டித் தந்த மாணவர்களை கௌரவிக்கும் முகமாகவே இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் உதயன் மற்றும் சுடர் ஒளி பத்திரிகைகளின் நிர்வாக இயக்குநர் ஈ. சரவணபவன் கலந்து கொண்டார்.

கடந்த காலங்களில் எமது பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு பெரும் புகழை ஈட்டித் தந்திருக்கிறார்கள். பாடசாலை மட்டங்களிலும் மாவட்ட, மாகாண மட்டங்களி லும் பிரகாசித்திருக்கிறார்கள். இவர்களைக் கௌரவிப்ப தில் உண்மையில் நாம் பெருமையடைகின்றோம் என்றார் பாடசாலையின் அதிபர் க. முத்துக்குமாரசாமி.

இதனையடுத்து சிறப்புக்குரிய மாணவர்கள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

கல்லூரியின் பழைய மாணவர்கள், புதிய மாணவர் கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்கள் என பலரும் நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

பாடசாலை மாணவர்கள் வழங்கிய இசை விருந்து பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது.

— சர்மிலன்



கவிஞர் இக்பால் அலியின் ''புள்ளிகளில் சில புள்ளிகள்'' எனும் கவிதை நூலின் வெளியீட்டுவிழா கல்முனை மஹ்மூத்தமகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.
விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பிரபல தொழிலதிபரும், ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினருமான எம். முகம்மட் முஸ்தபா (மயோன்) நூலின் முதற்பிரதியை தென்கிழக்குப் பல்கலைக்கழகப் பீடாதிபதி கலாநிதி கே. எம். எச். காலிதீனுக்கு வழங்குவதையும் —
விழாவில் கல ந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காண்க. நூலாசிரியர் கவிஞர் இக்பால் அலி, கவிச்சுடர் முகைதீன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# கவின் கலை மன்றத்துக்கு வயது 45

நாடகக் கலை வளர்ச்சிக்கும் அதனை உயர்ந்தோங்கச் செய்வதற்கும், நாடகக் கலையில் ஆர்வமுள்ளவர்களை அரவணைத்துப் பல ஆக்கங்களை மேடையேற்றுவதற்கும் புதிய நடிக நடிகர்களை அறிமுகப்படுத்துவதற்கும், கலைப் பணி செய்வதற்கும் கவின் கலை மன்றம் கடந்த 1956.11.7 கொழும்பு 3 இல் உள்ள சென். அந்தனிஸ் மாவத்தையில் ஆரம்பிக்கப்பட்டது.

ஜே. பி. றொபட், காலம் சென்ற ஜோன்சாமிதாஸன் காலம் சென்ற எஸ். ஈ செல்லையா காலம் சென்ற எம். டி. மோசஸ் ஆகியோர் கலை மன்ற உருவாக்க முயற்சி களில் முன்நின்று உழைத்த பெயர் குறிப்பிடக் கூடிய வர்களாவர்.




1957 ஆம் ஆண்டு கொழும்பு 10ல் இருந்து அல்லு ஜனதுல் ஜலானியா என்ற முஸ்லிம் சங்கத்தினருக்காக காலம் சென்ற ஜோன் சாமிதாஸன் எழுதிய ''சீதனம்'', கவிஞர்யுவன் எழுதிய ''நூதன லஞ்சம்'' ஆகிய நாடகங்கள் கொழும்பு—10 பிச்சக்ஸ் லேனில் (மொயிதின் மஜீத்றோட்) மேடையமைத்து நடிக்கப்பட்டன.

04.08.1957 இல் சா. சண்முகவேலு எழுதிய ''றோமியோ ஜூலியட்'' நாடகமும் 11.01.1959 இல் சி. கணேசன் எழுதிய ''எழுத்தாளன் காதலி'' நாடகமும் பொரள்ள வை. எம். பி.ஏ. மண்டபத்தில் மேடை யேற்றப்பட்டன. இந்த இரு நாடகங்களையும் காலம் சென்ற ஜோன்சாமி தாஸன் நெறிப்படுத்தியிருந்தார்.

கவின் கலைமன்றம் இது வரைக்கும் ஜே. பி. றொபட், ஜோ. ஜி. ஜெய சீலன், கே. வி. எஸ். நாதன், சி. சண்முகம், பி. எஸ். ராமச்சந்திரன், மாத்தளை கார்த்திகேசு, கே. கோவிந்தராஜ், மாவை வரோதயன், மொழிவாணன் ஆகி யோரால் எழுதப்பட்ட 50க்கு மேற்பட்ட நாடகங் களை மேடையேற்றி யிருக்கின்றது.

அத்துடன் திரைப்படம், தொலைக்காட்சி நாடகங் கள், நடன நிகழ்ச் சிகள், நூல்வெளியீடுகள் ஆகிய நிகழ்வுகளுக்கும் பங்களிப்பு செய்திருக்கிறது.

கவின் கலை மன்றம் பல நாடக போட்டிகளிலும் நாடக விழாக்களிலும் பங்கு பற்றி பல பரிசில்களையும் விருது களையும், பணப் பரிசில்களையும் பெற்றிருக்கின்றது.

இம் மன்றம் பல நடிக, நடிகர்களை கலை உலகத்திற்கு அறிமுகப்படுத்தியிருக்கின்றது.

# திருஞான சம்பந்தரின் வாழ்க்கை வரலாறு

எஸ். சபாரட்ண முதலியார் எழுதிய திருஞான சம்பந்தரின் வாழ்க்கை வரலாறு என்னும் ஆங்கில நூலின் வெளியீட்டு விழா பம்பலப்பிட்டியில் உள்ள இந்து சமய கலாசார திணைக் கள கேட்போர் கூடத்தில் நவம்பர் 24 நடைபெற்றது.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளர் ப. ரகுநாதன் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து நிகழ்வை நகர்த்திச் சென்றார்.

நிகழ்வின் பிரதம அதிதியாக உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார். இவர் இந்து மதத்தின் தொன்மை, சமயக் குரவர்களின் இறைபணி, திருஞான சம்பந்தரின் வரலாறு ஆகிய கருத்துக்களின் தொனி ததும்ப தனது பேச்சினை ஆங்கிலத்தில் நிகழ்த்தினார்.

நூல் ஆய்வினை அகில இலங்கை இந்துமாமன்றச் செயலாளர், கே. நீலகண்டன், கல்வி அமைச்சின் ஆலோசகர் கே. சோமசுந்தரம் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

சமய ரசம் கலந்து நூலின் குறை நிறைகளை எடுத்துக்கூறின இவர்களின் நூல் ஆய்வு.

# வாக்குறுதிகள் நிறைவேறுமா? காற்றிலே பறக்குமா?

தேர்தல் மேடைகளில் வழங்கப்பட்டவாக்குறுதிகள் நிறைவேற்றப்படுமா? அரசியல் வாதிகள் தந்த உறுதி மொழிகள் எல்லாம் காப்பாற்றப்படுமா?

ஏக்கப்பெருமூச்சுடன் காத்திருக்கின்றார்கள் தோட்டத் தொழிலாளர்கள்.

தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் இந்த மலையக அரசியல் தலைவர்கள் ஆற்றிய உரைகளும் அள்ளி அள்ளித் தந்த செயல்திட்டங்களும் தொழிலாளர்களின் காதுகளில் ரீங்காரமிட்டுக் கொண்டே இருக்கின்றன.

இந்த அப்பாவித் தொழிலாளர்கள் எத்தனையோ எதிர்பார்ப்புகளுடன் வாக்களித்தனர். இவர்களுக்கு எதிராக கட்ட விழ்த்து விடப்பட்ட காடைத்தனங்கள் எத்தனை? வன்முறைச் சம்பவங்கள் எத்தனை?

தமது கட்சிகளின் தலைவர்களுக்காகவும் வேட்பாளர்களுக்காகவும் களம் இறங்கி வாக்கு வேட்டையாடினர். அடி உதைபட்டனர். இதனால் பட்ட காயங்கள் கூட இன்னும் மாறவில்லை. உடைக்கப்பட்ட வீடுகளும்,எரிக்கப்பட்ட கடைகளும் கூட இன்னும் புகைந்து கொண்டிருக்கின்றன. கொலை மிரட்டல்கள் அச்சுறுத்தல்கள் அத்தனைக்கும் முகம் கொடுத்து வாக்களித்தனர்.

தோட்டத் தொழிலாளர்கள் மாட மாளிகை வேண்டும். ஆடம்பர வாகனம் வேண்டும் என்றா வாக்களித்தனர்? இல்லை தொழிலாளர்கள் கேட்பதும் எதிர்பார்ப்பதும் அமைதியான நிம்மதியான ஒரு வாழ்க்கையே.

இந்த அரசியல்வாதிகள் என்ன சொன்னார்கள். ''அவர்கள் செய்யவில்லை. நாங்கள் செய்கிறோம். அவர்களால் முடியாததை நாங்கள் செய்வோம்'' என்றனர். இருபக்கத்தாருமே வாரிவழங்கிய வாக்குறுதிகளில் ஒரளவையாவது நிறைவேற்றினால் தோட்டங்கள் சொர்க்க புரியாக மாறிவிடும்.

''அடிப்படை அத்தியாவசிய தேவையான குடியிருப்புகள் அமைத்துக் கொடுக்கப்படும், லயன் முறை மாற்றப்படும். இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். போதிய வருமானத்திற்கு வழி வகுக்கப்படும். வாழ்க்கைத்தரத்தை உயர்த்த சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். வங்கிக் கடன்கள் இலகுவாகப் பெற்றுக் கொடுக்கப்படும். உயர்கல்விக்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும் என்றெல்லாம் பலர் கூறினார்கள்.

''நாங்கள் இம்மாதிரி எதையும் கூறமாட்டோம். எங்களுக்கு வாக்களியுங்கள் நாம் வந்தவுடன் உங்களுக்குத் தேவையானவற்றை எல்லாம் செய்வோம்'' என்று கூறியவர்களும் உண்டு.

எப்படியோ தேர்தல் அலை ஒருபடியாக ஓய்ந்துவிட்டது. தொழிலாளர்களின் கனவுகள் நனவாகுமோ? தேர்தல் கால வாக்குறுதிகள் அந்த மேடைகளோடு ஓய்ந்துவிடுமா என்ற கேள்வியே இப்பொழுது மலையகம் எங்கும் எதிரொலிக்கின்றது.

இதுவரை காலமும் இந்த மலையக அரசியல் வாதிகள் என்ன செய்தனர். தொழிலாளர்களின் வாக்குகளில் நாடாளுமன்றம் சென்றனர். தொழிலாளர்களைக் காட்டிப் பேரம் பேசி பதவிகளை வாங்கிக் கொண்டனர். ஒருசிலர் அரசுடனும் மறு சிலர் எதிர்க்கட்சியினருடனும் அமர்ந்து கொண்டு ஒருவர் செய்வதை மற்றவர் செய்யவிடாமல் தடைகளை ஏற்படுத்திக் கொண்டே இருந்தனர். இறுதியாக ஏமாற்றப்பட்டவர்கள் தோட்டத்தொழிலாளர்களே இனிமேலும் இப்படி ஏமாற்றப்படக்கூடாது. தோட்டத் தொழிலாளர்கள் அரச ஊழியர்கள் என்ற பார பட்சம் களைந்து எறியப்படவேண்டும்.

இப்பொழுதும் கூட அனைத்து தேயிலை றப்பர் தோட்டங்களும் அரசாங்கத்திற்கே சொந்தமானவை. கம்பெனிகள் வெறும் ஒப்பந்தக்காரர்களே என்ற உண்மை மூடி மறைக்கப்பட்டு தோட்டங்கள் தனியார் கம்பெனிகளுடையவை. எனவே அரசு இதில் தலையிடமுடியாது என்று கூறுவது கண்துடைப்பு. இது மலையகத் தலைவர்களுக்கும் நன்கு தெரியும். உண்மை தெரிந்தும் வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றனர். தாம் சார்ந்துள்ள பெரும்பான்மை அரசியல் கட்சிகள் இவர்களைப் பேச விடாமல் கட்டி வைத்துள்ளன என்பது தான் உண்மை.

தோட்டக் கம்பெனிகள் மாதாந்த வருமானத்தில் 40வீதத்தை அரசாங்கத்திற்கு வழங்குகின்றன மொத்த வருமானத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கினால் அரசுக்கு கிடைத்து வரும் இலாபப் பணம் குறைந்துவிடும். இந்த ஒரே காரணத்திற்காகவே அரசாங்கம் கம்பெனிகள் மீது பழியைப் போட்டு விடுகின்றது. இனிமேலும் இதை மூடி மறைக்காமல் இந்த மலையகத் தலைவர்கள் ஒரே குரலில் இதனை வெளிப்படுத்தி நியாயம் பெற்றுக் கொடுக்கவேண்டும்.

வாழ்க்கைச் செலவு உயர்வும் பொருட்களின் விலைவாசி அதிகரிப்பும் அரச ஊழியர்களுக்கு மட்டுமில்லை. தோட்டத் தொழிலாளர்களையும் வாட்டி வதைக்கின்றன.

எனவே பட்ஜட் மூலமாகவும், அவசர கால விதிகளின் மூலமும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் இடைக்கால கொடுப்பனவுகளையும் சம்பள உயர்வுகளையும் ஏக காலத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்குப் பெற்றுக்கொடுக்க இந்த மலையகத் தலைவர்கள் முன்வரவேண்டும்.

சில ரூபாய்கள் சம்பள உயர்வுக்காக பல ஆயிரம் ரூபாய்களை இழந்து போராட்டம் நடத்தும் அவல நிலை மாற வேண்டும். தொழிலாளர்களின் அடிப்படைத் தேவையான பொருளாதாரம் உறுதிப் படுத்தப்படவேண்டும். நிரந்தரமான வருமானத்திற்கு அடித்தளமிடப்பட வேண்டும். முதற்கட்டமாகஇந்த மலையக அரசியல் வாதிகள் இதை செய்து விட்டால் தொழிலாளர்கள் மத்தியில் சற்று மகிழ்ச்சி ஏற்படும் என்பது உறுதி. இதையாவது செய்வார்களா?

# சப்ரகமுவா மாகாணத்திலும் டியூட்டரி மோகம்

சப்ரகமுவா மாகாணத்திலும் டியூட்டரி மோகம். வகுப்புகளில் நேரத்தை போக்கும் ஆசிரியர்கள் டியூட்டரிகளிலேயே பாடங்களை நடத்துகின்றனர். இதனால் இம்முறை வெளியான ஜி.சி.ஈ. உயர்தர பரீட்சைப் பெறுபேறுகளில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதற்கு யார் பொறுப்பு, ஆசிரியர்களா, மாணவர்களா இல்லை நிர்வாகத் திறமையற்ற அதிபர்களா என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இதனை எவரும் அசட்டை செய்து விடமுடியாது. எழுபதுகளுக்கு முன் இப்பிரதேசத்தில் எங்குமே டியூட்டரிகளோ டியூசன் வகுப்புகளோ இருந்ததில்லை. எல்லா ஆசிரியர்களும் தமது பாட நேரமான 45 நிமிடத்தில் பாடம் புகட்டினார்கள். தவிர்க்க முடியாத சில சந்தர்ப்பங்களில் பின்தங்கியிருக்கும் மாணவர்களின் நலன் கருதி பின்னேரங்களிலும், சனிக்கிழமைகளிலும் மேலதிக வகுப்புகளை நடத்தினர்.

அவற்றையும் கூட இலவசமாகவே நடத்தினார்கள். மாணவர்களிடம் சதமேனும் பெற்றுக் கொள்வதில்லை. மாறாக இந்த மேலதிக வகுப்புகளுக்கு வரும் மாணவர்களுக்கு, தமது சொந்தச் செலவில் தேநீர் சிற்றுண்டிகளையும் கொடுத்து உற்சாகப்படுத்தினர். மாணவர்களும் தமது ஆசிரியர்களை தமது பெற்றோர்போன்று கருதி மதித்து வந்தனர். இப்படி பாடசாலை நேரத்தில் படித்தவர்கள் தான் இன்று அதிபர்களாக, ஆசிரியர்களாக, கல்வி அதிகாரிகளாக, சட்டத்தரணிகளாக, கணக்காளர்களாக, பத்திரிகையாளர்களாக, இருக்கின்றனர். சிலர் நாடாளுமன்றத்திலும் அமர்ந்து விட்டனர். அப்போது டியூசனும் இல்லை. டியூட்டரிகளும் இல்லை என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

இன்றைய நிலை என்ன. வகுப்புகளில் பாடங்கள் முறையாக நடைபெறுவதில்லை. வகுப்புகளில் அரட்டையில் காலத்தைப் போக்கி விடுகின்றனர். விளங்காதவர்கள் டியூட்டரிக்கு வாருங்கள் என வகுப்பிலேயே கூறி விடுகின்றனர். வசதி உள்ள மாணவர்கள் டியூட்டரிக்குப் போகின்றனர். வசதி குறைந்தவர்கள் போவதில்லை. இதனால் இரு வழிகளில் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

காரணம் டியூட்டரியில் படிப்பிக்கும் பாடம் மறுநாள் வகுப்புகளில் படிப்பிக்கப்படுவதில்லை. அதை விட்டு அடுத்த பாடமே ஆரம்பிக்கப்படுகிறது. இப்பாடத்தின் தொடர்ச்சி டியூட்டரியில் படிப்பிக்கப்படுகிறது. அது வகுப்பில் நடைபெறுவதில்லை. இதனால் டியூட்டரிகளுக்கும் போகாத மாணவர்களுக்கு அரைகுறையாகவே பாடங்கள் நடத்தப்படுகின்றன. மாணவர்களும் சில பாடத்திட்டங்கள் முடியாமல் பரீட்சையில் கோட்டை விட்டு விடுகின்றனர். இதற்கு யார் பொறுப்பு?

அடுத்தது பாடசாலை அதிபர்கள். இவர்கள் என்ன செய்கின்றார்கள். வகுப்பில் பாடங்கள் நடத்தப்படுகின்றனவா? பாடத்திட்டம் முடிக்கப்பட்டுள்ளதா? வகுப்பில் உள்ள பாடக்குறிப்பு புத்தகங்களில் பதியப்பட்டுள்ளனவா? ஆசிரியர்கள் நேரத்திற்குப் பாடசாலைக்கு வருகின்றனரா? தமது கடமையை சரியாக செய்கின்றனரா? என்பதை எல்லாம் பரீட்சிப்பதில்லை. வகுப்புகளுக்குச் சென்று பார்ப்பதில்லை. அலுவலகத்தில் இருந்து கொண்டு பாடசாலையை நிர்வகிக்கின்றனர். சில அதிபர்களுக்கு தம்மிடம் படிக்கும் மாணவர்களைக் கூட அடையாளம் தெரிவதில்லை. தனக்கு வேண்டிய சில ஆசிரியர்கள் தரும் தகவல்களை மட்டும் வைத்துக் கொண்டு ஏனைய ஆசிரியர்களை பழி வாங்குகின்றனர். இதனால் பாடசாலை நிர்வாகம் உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதையாகி உள்ளது.

இதனால் பாடசாலைகளில் ஒழுக்கம் கட்டுப்பாடு சீர்குலைந்துள்ளன. இதற்கு விதிவிலக்காக சில திறமையான அதிபர்களும் ஆசிரியர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். இப்படியான ஒரு சிலரின் சேவை காற்றில் அடிபட்டுப் போகிறது.

எனவே வலயக் கல்விப் பணிப்பாளர்களும், உதவிக்கல்விப் பணிப்பாளர்களும் ஆசிரியர் ஆலோசகர்களும், இந்த ஏழை மாணவர்கள் மீது கருணை காட்ட வேண்டும். திடீர் விஜயங்களை மேற் கொள்ள வேண்டும், மாணவர்களின் கல்வித் தரத்தைப் பரீட்சிக்க வேண்டும். ஆசிரியர்களின் பணிகளை கண்காணிக்க வேண்டும். இல்லையேல் இப்பிரதேசக் கல்வி தேய்பிறையாகி விடும் என்பது உறுதி.

— பலாங்கொடை பரமேஸ்வரன்

## மலையகக் கண்ணோட்டம்

இரா,புத்திரசிகாமணி

# டேஸ்ட் கடை தணிகாசலம்



பூஜைத்தட்டுக்களுடன் கோயிலில் இருந்து வந்த தொழிலாளர்கள் தணிகாசலத்தின் கடைமுன் நின்றனர். அவர்களுக்கு மரியாதை கொடுக்கும் வகையில் தணிகாசலம் கடைக்கு வெளியே வந்தார்.

வாங்க தணி. அண்ணே, இந்தாங்க பிரசாதம் எடுத்துக்கங்க'' என்று பூஜைத்தட்டை நீட்டினார் அப்பாவு தலைவர். ரொம்ப சந்தோசம் ''தலைவரே இப்ப எலக்ஷன் முடிந்த பொறவும் நீங்க எல்லாரும் இப்படி ஒத்துமையா இருக்கிறத பார்த்தா மிச்சம் சந்தோஷமா இருக்கு'' என்று கூறிக் கொண்டே பிரசாதத்தை எடுத்துக் கொண்டார் தணிகாசலம்.

''ஆமாங்க அண்ணே ஆரம்பத்துல இருந்து நீங்க எங்களுக்கு புத்திமதி சொன்னீங்க. அது கேட்டு நடந்ததால் இப்பவும் ஒத்துமையா இருக்கோம்'' என்றான் கந்தசாமி.

''சரி இப்ப எல்லாரும் எங்க கோயிலுக்குப் பொயிட்டு வாரீங்க. இன்னைக்கு வேலக்கி போகலியா'' என்றார் தணிகாசலம்.

''எலக்சனுக்கு முந்தி எல்லாம் அமைதியா நடக்கணும்னு அம்மனுக்கு நேர்த்தி வைச்சோம். சண்டசரவ இல்லாம முடிச்சிரிச்ச அது தான் இப்ப கோயில்ல ஒரு பூசை வைச்சோம். நாளையில இருந்து வேலக்கி போவம் அண்ணே''

''அதுசரி சாமி கிட்ட மட்டும் வெளையாடக் கூடாது சாமி குத்தம் பொல்லாதது அதை கண்டிப்பா செஞ்சிரனும்.''

''தலைவரே எலக்ஷன் முடிஞ்சிபோச்சி தலைவர்மாரும் பார்லி மெண்டுக்கு போறாங்கள் அவுங்ககிட்ட நம்ப என்னா கேக்கப் போறம்'' என்றான் கந்தசாமி மீண்டும்.

''அவசரப்படாத, கந்தா இப்பதானே ஒத்த கால ஊனி இருக்காங்க. அவுங்க மொதல்ல அவுங்க சீட்ட பெலமா வச்சிக்கிடட்டும்; அப்பறம் ஆற அமற நாம போய் கேப்போம்'' என்றான் தணிகாசலம்.

''தணி அண்ணே நீங்க சொன்னமாதிரி நம்ம அவசரப்படக் கூடாது. மெதுவா என்னா கேக்கப்போரம்கிறத யோசிச்சி எழுதிக்கிட்டு போய் குடுப்போம்''

''எல்லாரும் கேக்கிற மாதிரி சம்பளம் குடு வீடு கொடு, கடன் கொடுன்னு கேக்கக் கூடாது. அதை எல்லாம் விட முக்கியமான விசயங்க இருக்கு அதைதான் கேக்கணும்''

''இப்ப பாருங்க இந்த தோட்டத்துல பாதிப் பேருக்கு ஓட்டு இல்ல. காரணம் அவுங்க எல்லாரும் இந்தியா பாஸ்போட் காரவுங் களாம்'' ''பாஸ்போட்டு எடுத்த ஆயி அப்ப னெல்லாம் மண்டையைப் போட்டுட்டாங்க'' இப்ப அவுங்க புள்ள குட்டிங்க மட்டும் இருக்காங்க இவுங்களுக்கு இந்தியா என்ன நெறமுனு கூட தெரி யாது. இவுங்க எப்படி இந்தியாவுக்கு போவாங்க?''

''அதத்தான் நம்ப மந்திரி இங்க கூட்டத்துக்கு வந்தப்ப சொன்னாரே இந்தியா பாஸ்போட்காரவுங்க எல்லாத்துக்கும் எலங்கை சிட்டிசன் தருவோம்னு''

''ஆமா, ஆமா அப்ப சொன்னதை அதோட உட்டுப்புடாம அதையே திரும்ப நெனவுபடுத்தி சிட்டிசன் வாங்கித்தார சொல்லி அடிச்சி கேக்கணும்''

ரெண்டாவுதா இந்த ஐடிங்காடு இல்லாம நம்ப பசங்க எத்தனபேரு டவுன்பக்கம் கூட போய் ஒரு பொலப்பு செய்ய முடியாம இருக்கு''

சும்மா பேருக்கு நடமாடும் சேவை நடமாடும் சேவைனு வைச்சி பேரு ஏயாத்தாம ஐடிங் கார்டு வாங்கி குடுக்கணும். ''மூணாவுதா பொறந்த குறிப்பு இல்லாம நம்ப ஆத்தாமாரும் தாத்தாமாரும் பொறாவுடன் பண்டுசல்லி எடுக்க முடியாம தவிக்கிறாங்க''

''அவுங்க பொறந்த தேதியும் தெரியில பொறந்த எடமும் தெரியில' பாதிபேரு இந்தியாவுல பொறந்து இங்க வந்தவுங்க. இவுங்ககிட்ட பொறந்த குறிப்பு கேட்டா எப்படி கொண்டுவருவாங்க''

''அது சரி அதுசரி எங்க பெரிய ஆயிகூட பண்டு சல்லிய எடுக்க முடியாமலே மண்டையை போட்டுரிச்சி'' அதுநால இதுக்கு ஏதாவது ஒரு மாத்து வழி செஞ்சி கொடுக்கனும்''

''இன்னொரு சங்கதி இருக்கிங்க அண்ணே நம்ப தோட்டங்கள்ல பாருங்க எவ்வளவு தேயிலை மலைங்க காடுமண்டி கைவிடப்பட்ட நிலையில கிடக்கு'' அந்த மலைகளை புளக் புளக்கா பிரிச்சி இங்க வேலை வெட்டி இல்லாம இருக்கிற தம்பி மாருக்கு குடுக்கணும். அதுல வாறதேயிலை கொழுந்தை தோட்டமே வாங்கிகிட்டு அவுங்களுக்கு பணம் கொடுக்கணும். மலையும் துப்பரவாகும், தம்பிமாருக்கு வருமானமும் கிடைக்கும்'' என்றான் கந்தன்.

''நம்ப கந்தனும் திடீர் திடீர்னு நல்லனுடியா தொடுக்கிறான். எல்லாம் ஒங்ககிட்ட ஒட்டிக்கிட்டபெறவு கெடச்ச மௌசுங்க அண்ணே.''

''என்னங்க தலைவரே இன்னும் ஒரு முக்கிய சங்கதி மறந்திட்டாமே''

''அது என்னாங்க தணி அண்ணே நம்ம தோட்டத்தில எத்தன தம்பி தங்கச்சிமார் நல்லா படிச்சிட்டு வேலை இல்லாம இருக்காங்க. அவுங்களுக்கு இந்த தோட்டத்து ஆபிஸ், ஸ்டோர், பெக்டரி, மத்த வேலங்க ளுக்கு புதுசா ஆள் எடுக்கிறப்ப நம்ப தோட்டத்துல உள்ளவுங்களுக்கே தொழில் கொடுக்கனும் இல்லியா''

''மறந்தே போச்சிங்க தணி அண்ணே இதத்தான் மொதல்ல எழுதிக்கனும்''

''எப்படியோ தேர்தல் முடிஞ்சிரிச்சி கட்சிக்காரங்க எல்லாம் ஒஞ்சிட்டாங்க. பழைய கோவத் தாவங்கள மறந்துபுட்டு ஒன்னாயிட்டாங்க அந்த மாதிரி நாமலும் ஒத்துமையா இருந்து நமக்கு வேண்டியத கேட்டு வாங்கிக்க ஒன்னா முயற்சி பண்ணுவோம்'' என்று கூறிய தணிகாசலம் வந்தவுங்க எல்லாத்துக்கும் தேத்தண்ணி கொடுத்து உபசரித்தார்.

''அப்புடியே எந்த நாளும் சேர்ந்து இருந்தா இந்த மலையகத்துக்கு எப்பவோ விடிவு கிடைச்சிருக்கும்'' என்று கூறிக்கொண்டே எல்லோரும் வீடுகளுக்கு திரும்பினாங்க.

— இராகிகா.

# கூட்டமைப்பை கொச்சைப்படுத்தியோருக்கு மலையக மக்கள் சரியான பாடம்

மலையகத்தில் சுயநல அரசியல் வாதிகளுக்கு இடமில்லை. ஒன்றுபட்ட ஐக்கிய மலையகத்தையே தோட்டத் தொழிலாளர்கள் விரும்புகின்றனர். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி கூட்டமைப்பை கொச்சைப்படுத்தியவர்களுக்கு மலையக தொழிலாளர்கள் சரியான பாடம் புகட்டி விட்டனர். இது தனிப்பட்ட முறையில் எமக்கு கிடைத்த வெற்றி இல்லை. இங்கு வாழும் 15 லட்சம் இந்திய வம்சாவளியினருக்கும் கிடைத்த வெற்றி

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திர சேகரனும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஆறுமுகம் தொண்டமானும் இப்படிக் கூறினார்.


நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் 12ஆவது பொதுத்தேர்தல் முடிவடைந்துவிட்டது. எல்லா அரசியல் கட்சிகளும் மலையக தோட்டத் தொழிலாளர்களின் வாக்கைப் பெறுவதில் பெரிதும் ஆர்வம் காட்டின.

மலை நாட்டில், கண்டி, நுவரெலியா, மாத்தளை, பதுளை ,இரத்தினபுரி,கேகாலை ஆகிய மாவட்டங்களில் வாழும் தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளைப் பெறுவதே அரசியல் கட்சிகளின் குறிக்கோளாக இருந்தது.

மலையக மக்கள் முன்னணியும் இலங்கை தொழிலாளர் காங்கிரசும் நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு ஒரு வருடத்தின் முன்பே உறுதியான கூட்டமைப்பை உருவாக்கிவிட்டன.இரண்டு வித்தியாசமான அரசியல் கட்சிகளில் இருந்தாலும் மலையக மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான பொதுவேலைத்திட்டத்தில் இணைந்து செயல்படுவதென அப்போதே தீர்மானித்து விட்டன. நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன் ஐக்கியம் தேவை ஆகா!ஓகோ!எனக் கூறியவர்கள் ,தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டவுடன் தமது சுயரூபத்தை வெளிப்படுத்திவிட்டனர்.

தமது சுயஇலாபங்களுக்காகவும்,தேவைகளுக்காகவும் பேரம்பேச ஆரம்பித்ததோடு நாம் ஏற்படுத்திய கூட்டமைப்பை கொச்சைப்படுத்தவும் ஆரம்பித்து விட்டனர்.

சீட்டுக்காகவும்,வோட்டுக்காகவும் முண்டியடித்தவர்களை ஐ.தே.க நிராகரித்து விட்டது. அதேவேளை சுயநலவாதக் கும்பலை அரசாங்கம் கௌவிப்பிடித்துக் கொண்டது. பதவிக்கும் பகட்டிற்கும் ஆசைப்பட்டவர்கள் மலையக சமுதாயத்தையே காட்டிக் கொடுத்தனர். எம்மீது சேற்றை வாரி வீசுவதற்காகவே ஜனாதிபதி இவர்களுக்குப் புதிய,புதிய பதவிகளையும் வாகனங்களையும் கொடுத்ததோடு பல கோடி ரூபாய்களை தேர்தல் செலவுகளுக்காகவும் வாரி வழங்கினர்.


சந்திரசேகரன்


ஆறுமுகம்

அற்ப சொற்ப வசதிகளுக்காக அரச ஊடகங்கள் மூலமும் பத்திரிகைகள் வாயிலாகவும் எம்மீது பாரதூரமான குற்றச்சாட்டுக்களை சுமத்தினர். கடைசி நேரத்தில் எவராலுமே வழங்க முடியாத வாக்குறுதிகளை அளித்து தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றினர்.

இந்த சுயநலவாதிகள் இனத்தையே ஈடு வைத்து எடுப்பார் கை பொம்மைகளாக இருந்தாலும் தொழிலாளர்கள் விழித்துக் கொண்டனர். உண்மையை உணர்ந்து கொண்டனர். எனவே பகடை ஆடவந்தவர்களை,ஒன்றுபட்ட தொழிலாளர் சக்தி ஒட்டுமொத்தமாக ஒதுக்கித் தள்ளி விட்டது.

இதற்கு ஓர் எடுத்துக் காட்டு நாம் ஈட்டிக் கொடுத்துள்ள வெற்றி. மாத்ளை,கண்டி,நுவாரெலியா ,பதுளை ,இரத்தினபுரி,கொழும்பு ஆகிய மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அமோக வெற்றியைப் பெற்றுக் கொடுத்துள்ளோம். எமக்கு எதிராக செயற்பட்டவர்கள் இருந்த இடம்தெரியாமல் போய்விட்டனர். இவர்களை நாம் வெறுக்கவில்லை.இவர்களுக்காக அனுதாபப்படுகின்றோம்.

விசேடமாக நுவரெலியா மாவட்டம் மலையகத்தின் கேந்திர நிலையம்

நுவரெலியாவின் தீர்ப்பு முழு மலையகத்தினதும் தீர்ப்பாகும். மலையகத்தில் உறுதியான ஒரு கூட்டு வேண்டும். ஐக்கியப்படவேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்திவிட்டனர்.

தேர்தலோடு எமது கூட்டணி ஓய்ந்து விடாது .தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம்.இது உறுதி. எமக்கு ஆதரவளித்த மலையக தொழிலாளர்கள் அமைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது எங்கள் முதற்கடமை இப்படி ஆறுமுகம் தொண்டமானும் சந்திரசேகரனும் குறிப்பிட்டார்.

தேர்தல் முடிவுகள் உண்மையான தலைவர்கள் யார்? சேவை செய்யக்கூடியவர்கள் யார்? வெறும் வெற்று வேட்டுகள் யார்? என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டி விட்டன. இது

ஒரு பாடமாக அமையவேண்டும். இனிமேலாவது இந்த மலையகத் தலைவர்கள் மனம் திருந்துவார்களா?

# இமாலய சாதனை வெற்றி தலைவர்களுக்கு அல்ல

மலையகத் தொழிலாளர்கள் தமது ஒன்றுபட்ட சக்தியால் இமாலய சாதனை படைத்து விட்டனர். ஆனால் தலைமைகள் இந்தத் தொழிலாளர்களின் நாடித் துடிப்பை அறிந்து செயல்படத் தவறி விட்டன. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் இந்திய வம்சாவளி மக்களே. நுவரெலியா மாவட்டத்தில் இந்திய வம்சாவளி மக்களின் பிரதிநிதித்துவம் ஐந்தில் இருந்து மூன்றாக குறைந்து விட்டது. தலைமைகள் சற்று தூர நோக்குடன் சிந்தித்து செயற்பட்டிருந்தால் ஐந்து பிரதிநிதிகளை நாடாளுமன்றத்தில் இடம் பெறச் செய்திருக்க முடியும்.

15 லட்சம் இந்திய வம்சாவளி மக்களுக்கு 16 நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் வேண்டும் என குரல் எழுப்பிக் கொண்டிருந்த இந்த மலையகத் தலைவர்கள் மக்களுக்கு என்ன பதில் சொல்லப் போகின்றார்கள்.

கடந்த ஆண்டு நடந்த பொதுத் தேர்தலின் போதும் ஐ.தே.க வில் போட்டியிட்ட சந்திரசேகரனையும் சதாசிவத்தையும் மலையக மக்கள் தெரிவு செய்தனர்.

அதே வேளை பொதுஜன ஐக்கிய முன்னணியில் போட்டியிட்ட ஆறுமுகம் தொண்டமான், முத்து சிவலிங்கம், ஜெகதீஸ்வரன் ஆகிய மூவரையும் தெரிவு செய்தனர். இதன் மூலம் நுவரெலியா மாவட்டத்தில் இருந்து ஐந்து தமிழர்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைத்தனர். இது எந்த ஒரு பெரும்பான்மை இனக் கட்சிக்கும் அளிக்கப்பட்ட வாக்குகள் அல்ல. தமது இனத்திற்காக, இன உணர்வுடன் அளிக்கப்பட்ட வாக்குகள்.

இன்று என்ன? நடந்தது. தோட்டத் தொழிலாளர்களை எவராலும் ஏமாற்றி விடமுடியாது. நேர்மையற்ற அரசியல் வாதிகளை அவர்கள் ஏற்கவில்லை. பொய்யான வாக்குறுதிகளையும், போலி வேட தாரிகளையும், கோடரிக் காம்பு களையும் இனம் கண்டு கொண்டனர்.

வேட்பாளர்களின் நோக்கம் என்ன அவர்கள் முன்வைத்துள்ள வாக்குறுதிகள் என்ன, அவர்களின் இலச்சியம் என்ன, அவர்களை நம்பலாமா என்பதை எல்லாம் ஆராய்ந்து அதன் பின்னரே வாக்களிக்கும் தெளிவைப் பெற்றுள்ளனர்.

இந்த அடிப்படையிலேயே நுவரெலியா பிரதேச தொழிலாளர்கள் வாக்களித்துள்ளனர். இ.தொ.கா. மலையக மக்கள் முன்னணி கூட்டமைப்பின் சார்பில் ஐந்து பேர் ஐ.தே.க பட்டியலில் இடம் பெற்றிருந்த போதும் ஆறுமுகம் தொண்டமான், பெரிய சாமி சந்திரசேகரன், முத்து சிவலிங்கம் ஆகிய மூவர் மட்டுமே வாக்கு கேட்டனர். ஏனைய இருவரும் டம்மிகளாக்கப்பட்டனர்.

ஆறுமுகம் தொண்டமானுக்கு ஒரு லட்சத்து 21 ஆயிரத்து 542 வாக்குகளையும் சந்திரசேகரனுக்கு ஒரு லட்சத்து 21 ஆயிரத்து 421 வாக்குகளையும் முத்து சிவலிங்கத்திற் ஒரு லட்சத்து ஏழாயிரத்து 338 வாக்குகளையும் அளித்து வெற்றி பெறச் செய்துள்ளனர்.

இந்த வாக்குகள் அனைத்தும் இத்தலைவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குகள் அல்ல. இவர்கள் முன்வைத்த வாக்குறுதிகளுக்கும் ஒன்றுபட்ட மலையகத்திற்கும் இன உணர்வுடனும், இலட்சிய வெறியுடனும் வழங்கப்பட்ட வாக்குகள். இப்படி வாக்களித்து இமாலய சாதனை படைத்தவர்கள் நாம் தான் என மார்தட்டிக் கொள்ளும் யோக்கியதை மலையகத் தொழிலாளர்களுக்கே உண்டு.

இத்தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் காணப்படும் இன உணர்வும் சமுதாயப் பற்றும் மலையகத் தலைவர்களிடம் இல்லையே என்பது தான் வேதனை. இம்மூன்று தலைவர்களுடன் நான்காவதாக வந்தவர் சிரேஷ்ட தலைவர் காலஞ்சென்ற காமினி திஸாநாயக்காவின் புதல்வன் நவீன் திஸாநாயக்க. அவர் பெற்ற வாக்குகள் 74894 மட்டுமே. இவர்களுக்குகிடையிலான வித்தியாசம் 46528 வாக்குகள். இந்த இடைவெளியை சற்று உற்று நோக்க வேண்டும். நம்மை நாமே ஆள வேண்டும் பிறர் அல்ல என்பதை உணர்த்தி விட்டார்கள் மலையத் தமிழர்.

இவர்களின்நாடித்துடிப்பைஅறிந்து செயற்படத்தவறிவிட்டனர்தலைவர்கள்.சற்று ஆழமாகவும்தூரநோக்குடனும்சிந்தித்து செயல்பட்டிருந்தால்நுவரெலியாமாவட்டத்தில்இருந்துஐந்துதமிழ்உறுப்பினர்களை தெரிவுசெய்திருக்கமுடியும்என்பதுஉறுதி.


மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

தொலை நிலைக் கல்வி இயக்கம்



மாணவர் அனுமதி

விண்ணப்ப முடிவு 31-12-2001

க.பொ.த. (உயர்தரம்) பரீட்சை முடிவுகள் வெளிவந்து விட்டன. உங்களின் அடுத்த திட்டம் என்ன

காலம் பொன்னானது அல்லவா? இன்றே இப்பல்கலைக்கழக மூலம் ஒரு பட்டதாரி ஆகுங்கள். காலத்தின் தேவைக் கேற்ப பல்வேறு துறை சார்ந்த பட்டப்படிப்புக்கள் மேற்படிப்புக்கள் டிப்ளோமா போன்ற 40 பாட நெறிகள் உண்டு.

2001ஆம் ஆண்டுக்கான நேரடி அனுமதிகளிற்கும் மேலதிக விபரங்களுக்கும் :-

அம்பிகா உயர் கல்வி நிலையம்

48, புதுச்செட்டித்தெரு, கொழும்பு 13.

தொலைபேசி : 384722 தொலை நகல் 430000

Hotline : 077-322684


# ஊவாவின் தமிழ் குரல் நாடாளுமன்றில் வேலாயுதம்

ஊவா மாகாணத்தின் தமிழ்க் குரல் நாடாளுமன்றத்தில் ஒலிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மலையக மக்கள் முன்னணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கூட்டணியின் சார்பில் ஐ.தே.க யானை சின்னத்தில் போட்டியிட்ட கே. வேலாயுதம் வெற்றி பெற்றுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும், தொழிலாளர் நலக்கல்வி இயக்குனராகவும், ஊவா பிராந்திய அமைப்பாளராகவும் இவர் செயற்பட்டவர்.

கட்சியின் வளர்ச்சிக்காகவும் தொழிற்சங்கத்தின் வளர்ச்சிக்காகவும் பெரும் அர்ப்பணிப்புடன் செயலாற்றியவர் வேலாயுதம். ஆனால் வேலாயுதத்தின் வெற்றியில் இந்த தொழிற்சங்கம் பங்கு போட்டுக் கொள்ள முடியாது.

கடந்த பொதுத் தேர்தலின் போது தேசிய பட்டியலில் இடமளிக்கப்பட்டிருந்த போதும் நாடாளுமன்றம் செல்லும் வாய்ப்பு அளிக்கப்படவில்லை. இம்முறையும் போட்டியிடும் வாய்ப்பு முழு மனதாக வழங்கப்படவில்லை.

இந்த சந்தர்ப்பத்திலாவது இவர் சார்ந்த தொழிற்சங்கம் குரல் எழுப்பவோ, தலைமைத்துவத்தை நிர்ப்பந்திக்கவோ தவறிவிட்டது.

எது எப்படியோ, எவ்வழியாகவோ தனக்கு கிடைத்த வாய்ப்பை உரிய முறையில் பயன்படுத்தி தன்னை அடையாளம் காட்டிக் கொண்டார் வேலாயுதம்.

ஊவா மாகாணத்தில் அவர் மாகாணசபை உறுப்பினராகவும், சமூக சேவையாளராகவும் இருந்து இப்பிரதேச மக்களுக்கு ஆற்றிய பணிகளும், சேவையும், அவருக்கு ஒரு தனி மதிப்பையும், கௌரவத்தையும் தேடித் தந்துள்ளன. இந்த நல்லெண்ணங் கொண்டவர்களே அவரை நாடாளுமன்றத்திற்கு அனுப்பி உள்ளனர். இந்த வெற்றி வேலாயுதத்தின் தனித்துவமான வெற்றி என்பதே சரி.

# தேர்தலில் வென்றவர் தோற்றது எப்படி?

## புத்தளத்தில் மக்கள் ஆர்ப்பாட்டம்

புத்தளம் மாவட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த எம்.ஐ.பிஸ்ருல் ஹாபி தெரிவு செய்யப்பட்டார் என்ற அறிவிப்பை அடுத்து அவருக்குப் பொது மக்களால் பெரும் வரவேற்பு அளிக்கப் பட்டது.

ஆனால் புத்தளம் மாவட்டச் செயல கத்தில் ஐ.தே. முன்னணியின் விருப்பு வாக்குகள் மறுபடியும் எண்ணப்பட்டன. மாலை ஐந்து மணியள வில் எம்.ஐ.பிஸ்ருல்ஹாபி தெரிவு செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இச்செய்தி பரவியதும் புத்தளம் தொகுதி யைச் சேர்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் கட்சி இன,மத, பேதமின்றி ஊரடங் குச் சட்டத்தையும் பொருட்படுத்தாது மாவட் டச் செயலகம் முன்பு திரண்டனர்.

எமக்கு எப்படியும் ஒரு எம்.பி.வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். ஹாபிக்கு எம்.பி. பதவி கிடைக்காவிட்டால் புத்தளம் மாவட்டத்தில் ஐ.தே.முன்னணியில் வகிக் கும் சகல பதவிகளையும் அவர் துறக்க வேண்டுமென்று கோஷம் எழுப்பினர். இக்கோரிக்கையை ஹாபியும் ஏற்றுக் கொண்டனர்.

தேர்தலில் வெற்றி பெற்றவர் எப்படித் தோல்வி கண்டார் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று மக்கள் கேள்வி எழுப்பினர்.

இதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா ஹாபியைக் கொழும்புக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ள தாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (க)



பொதுத் தேர்தல் தினத்தில் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த பொலிஸாரின் மோட்டார் சைக்கிள் ரோந்து அணி.

### அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டு

'' அம்பாறை மாவட்டத் தமிழ் மக்களின் ஒற்றுமையின் எடுத்துக்காட்டே வெற்றி. தமிழினப் போராட்டத்திற்குக் கிடைத்த தனிப்பெரும் அங்கீகாரமும் இதுவாகும்'' என்று அம்பாறை மாவட்டத்தில் தமிழர் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய முதன்மை வேட்பாளர் அரியநாயகம் சந்திரநேரு தெரிவித்தார். தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட முதன்மை வேட்பாளர் அ.சந்திரநேரு பெற்ற வாக்குகள் — 26,282. இரண்டாவது வேட்பாளர் க.பத்மநாதன் பெற்றவாக்குகள் 19428 இங்கு மொத்தமாக கூட்டமைப்பு 48789 வாக்குகளைப் பெற்றுள்ளது. (க)

## ஒன்றுபட்ட தலைமையே மலையக மக்களின் விரும்பம்

''மலையகத்தில் கூட்டமைப்பையும் ஐக்கிய உணர்வையும் கொச்சைப்படுத்தியவர்களுக்க மலையக மக்கள் சரியான பாடம் புகட்டிவிட்டனர். ஒன்று பட்ட தலைமை யையே மலையக மக்கள் விரும்புகின்றனர் என்பதை நடந்து முடிந்த தேர்தல் உணர்த்தி விட்டது.'' எனக் கூறுகிறார் மலையக மக்கள் முன்னணி தலைவர் பெ.சந்திரசேகரன்.

பெரும்பான்மைக் கட்சியுடன் இணைந்து போட்டியிட் டாலும் தனித்துவத்தை இழந்துவிட வில்லை. இதனாலேயே மலையக மக்கள், மலையக மக்கள் முன்னணியையும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசையும் அங்கீகரித்துள் ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் இ.தொ.கா.பொதுச் செய லாளர் ஆறுமுகம் தொண்டமான் 121, 542 வாக்குகளையும் மலையக மக்கள் முன்னணி தலைவர் பெரியசாமி சந்திர சேகரன் 1,21 421 வாக்குகளையும இ.தொ.கா நிதிச் செயலா ளர் முத்து சிவலிங்கம் 107,338 வாக்குகளைப் பெற்று ஆகக் கூடுதலான விருப்பு வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## யாழ். வாசிக்கு 6 மாதச் சிறை

கசிப்பு வைத்திருந்தமை தொடர்பான வழக்கில் தண்டப் பணம் செலுத்தத் தவறிய ஒருவருக்கு யாழ். நீதிவான் நீதிமன்றம் 6 மாதச் சிறைத் தண்டனை வழங்கியது.

யாழ்ப்பாணம் அபூபக்கர் வீதியைச் சேர்ந்த சண்முகம் சந்திரன் என்ற நபருக்கே கசிப்பு வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டமை அடுத்து தண்டப் பணமாக 2 ஆயிரத்து 500 ரூபாவும் தர்மப் பணமாக ஆயிரம் ரூபாவும் செலுத்தவேண்டும் என்று நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார்.

குற்றப்பணம் செலுத்த வசதி இல்லை என்று குற்றவாளி தெரிவித்ததைத் தொடர்ந்து இவருக்கு 6 மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவர் பிறிதொரு வழக்கில் 2 வருட மறியல் தண்டனை அனுபவித்து வருவதால் அதே காலப்பகுதிக்குள் தற்போது விதிக்கப்பட்டுள்ள 6 மாத கால மறியல் தண்டனையையும் வழங்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# திகாமடுல்ல மாவட்டத்தில் மு.காவுக்கு வரலாறு காணாத பெரும் வெற்றி

## அன்வர் இஸ்மாயில் பெருமிதம்

திகாமடுல்ல மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்குக் கிடைத்த வரலாறுகாணாத வெற்றி எமது தலைவர் ரவூப் ஹக்கீமின் சிறந்த தலைமைத்துவத்திற்கு கிடைத்த அங்கீகாரமாகும்.

இவ்வாறு அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி அன்வர் இஸ்மாயில் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

''அம்பாறை மாவட்டத்தில் மூன்று ஆசனங்களைப் பெறுவதென்பது மறைந்த தலைவர் அஷ்ரப் அவர்களின் நீண்டகாலக்கனவாக இருந்தது. இதற்குப் புதிய தலைமைத்துவத்தினூடாக மக்கள் எமக்கு அங்கீகாரம் அளித்துள்ளனர்.

குறிப்பாக சம்மாந்துறைத் தொகுதியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு மக்கள் பூரண அங்கீகாரமளித்துள்ளனர். முஸ்லிம் காங்கிரசைப் புறக்கணித்தவர்களுக்கு மக்கள் தக்கபாடம் புகட்டியுள்ளனர்.

எமது தனித்துவம் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதற்காக நாம் தனித்துப் போட்டியிட்டோம். மக்களின் நூறு வீத அங்கீகாரம் எமக்கே கிடைத்துள்ளது. '' இப்படி அவர் தெரிவித்தார். மடவளைச் சம்பவத்திற்கு அவர் கண்டனம் தெரிவித்துள்ளார். (க)

| தேர்தல் மாவட்டங்கள் | ஐ.தே.க | பொ.ஐ.மு | ஜே.வி.பி | த.வி.கூ | ஸ்ரீ.மு.கா. | ஈ.பி.டி.பி | புளொட் |
|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 12 | 7 | 2 | | | | |
| கம்பஹா | 9 | 7 | 2 | | | | |
| களுத்துறை | 5 | 4 | 1 | | | | |
| கண்டி | 7 | 4 | 1 | | | | |
| மாத்தளை | 3 | 2 | | | | | |
| நுவரெலியா | 5 | 2 | | | | | |
| காலி | 5 | 4 | 1 | | | | |
| மாத்தறை | 4 | 3 | 1 | | | | |
| அம்பாந்தோட்டை | 4 | 2 | 1 | | | | |
| யாழ்ப்பாணம் | 1 | | | 6 | | 2 | |
| வன்னி | 2 | | | 3 | | | 1 |
| மட்டக்களப்பு | | 1 | | 3 | 1 | | |
| திகாமடுல்ல | 1 | 2 | | 1 | 3 | | |
| திருகோணமலை | 2 | 1 | | 1 | | | |
| குருநாகல் | 8 | 6 | 1 | | | | |
| புத்தளம் | 4 | 3 | | | | | |
| அநுராதபுரம் | 4 | 3 | 1 | | | | |
| பொலநறுவ | 3 | 2 | | | | | |
| பதுளை | 5 | 3 | | | | | |
| மொனராகலை | 2 | 3 | | | | | |
| ரத்தினபுரி | 5 | 4 | 1 | | | | |
| கேகாலை | 5 | 3 | 1 | | | | |
| மொத்தம் | 96 | 66 | 13 | 14 | 4 | 2 | 1 |
| தேசியப்பட்டியல் எம்.பிக்கள் | 13 | 11 | 3 | 1 | 1 | | |
| எம்.பிக்களின் மொத்த எண்ணிக்கை | 109 | 77 | 16 | 15 | 5 | 2 | 1 |

## ஒரே வீதியில் இரு எம்.பிக்கள்

திருகோணமலை மாவட்டத்தில் ஐ.தே.க சார்பாக வெற்றி பெற்ற இரு முஸ்லிம்களும் கிண்ணியாவின் ஹிஜ்ரா வீதியைச் சேர்ந்தவர்களாவர். இவர்களுள் எம்.ஏ.எம் மஹ்ரூப் ஐ.தே.க. அங்கத்தவர், கே.எம். தௌபீக் மு.கா. அங்கத்தவர்.

கடந்த 11ஆவது பொதுத் தேர்தலில் கிண்ணியாவில் இருந்து மூன்று முஸ்லிம்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அவர்களுள் முன்னாள் பிரதியமைச்சர் நஜீப் ஏ.மஜீத், எம்.எஸ்.தௌபீக் ஆகியோர் இம் முறை வெற்றி பெறவில்லை. தற்போது வெற்றி பெற்றுள்ள கே.எம்.தௌபீக் புதுமுகம் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## எதிர்காலத்திற்கேற்ப தொழிற்சங்கத்தை வழிநடத்திச் செல்வோம்

''மலையக மக்களின் தனித்துவத்தைக் காப்பாற்றத் தொடர்ந்தும் செயற்பட வேண்டியதன் அவசியத்தை நாடாளுமன்றத் தேர்தல் உணர்த்தியுள்ளது. ''எனத் தேசிய ஜனநாயகக்கட்சியின் பொதுச்செயலாளர் எஸ்.ஏ.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது: தோட்டத்தொழிலாளர்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அவர்கள் பணத்துக்கும் மதுவுக்கும் அடிமையாகி விடக்கூடாது என்ற நோக்கத்துடனேயே தேர்தலில் தனித்துப் போட்டியிட்டோம். இதன் மூலம் இன்னும் எமது மக்கள் தெளிவு பெற்றவர்களாக மாறவேண்டும் என்பதை அறிந்து கொண்டோம். எமது தேசிய ஜனநாயகக் கட்சியின் கொள்கையை ஏற்றுக் கொண்டு வாக்களித்த மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாம் கடந்து வந்த பாதையை விட எதிர்காலத்தில் கடக்க வேண்டிய கடினமான பாதைகள் ஏராளம் உள்ளன. அவற்றை அரசியல் ரீதியில் எதிர்கொள்ளத் தயாராக இருக்கின்றோம். எனவே எதிர்காலத்துக்கு ஏற்ற அரசியலையும், தொழிற்சங்கத்தையும் நடத்திச் செல்லவேண்டிய உரிமையை ஏற்றுள்ளோம். அதன்படி வெற்றி தோல்வி எதுவாக இருந்தாலும் சமமாக மதித்துப் பணிபுரிவோம் என்றார் அவர்.



# அன்பார்ந்த இலங்கைப் பிரஜைகளே,

**கடந்த 18 வருடங்களாக நம் நாட்டின் உள்நாட்டு யுத்தத்தையிட்டு நாம் அக்கறை கொள்ளவில்லை. இந்த யுத்தத்தால் எம்மக்கள் மீது, விஷேடமாக எம் இளம் சந்ததியினர் மீது ஏற்படக்கூடிய அழிவிற்கிடமான பொருளாதார, சமூக மற்றும் அரசியல் பாதிப்புக்களை நீண்டகாலமாக நாம் புறக்கணித்தே வந்துள்ளோம்.**

**அனைத்துப் பகைமை உணர்ச்சிகளையும் ஒரு முடிவிற்குக் கொண்டு வர வேண்டும் என நாம் வேண்டுகிறோம். எம் நாட்டின் தலைவர்கள் அனைவரும் தமது சொந்தத் திட்டங்களை ஒரு புறத்தே வைத்துவிட்டு இலங்கை என்ற உணர்விற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுகிறோம்.**

**சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பித்து பேச்சுவார்த்தை மூலம் யுத்தத்திற்கு ஒரு நிரந்தர முடிவைக் காண வேண்டும் என நாம் வேண்டுகிறோம். அவ்வாறாயின் அனைத்து இலங்கையரும் சிறந்த மகிழ்ச்சிகரமான ஒரு எதிர்காலத்தை அனுபவிக்கலாம்.**

**இலங்கையினதும் அதன் அனைத்து மக்களினதும் நன்மை கருதி இவ்வறிக்கையைப் பின்வருவோர் கூட்டாக விடுத்துள்ளனர்**

பியகம ஏற்றுமதி வலய உற்பத்தியாளர் ஒன்றியம், இலங்கை கப்பல் முகவர்கள் ஒன்றியம், இலங்கை வர்த்தக சம்மேளனம், இலங்கை சரக்கு அனுப்புவோர் ஒன்றியம், கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் ஒன்றியம், கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய உற்பத்தியாளர்கள் ஒன்றியம், இலங்கை IATA முகவர்கள் ஒன்றியம், இலங்கை கைத்தொழிலாளர்கள் ஒன்றியம், இலங்கை அப்பரல் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், இலங்கை உல்லாசப் பயண ஏற்பாட்டாளர்கள் ஒன்றியம், இலங்கை ஆடை வாங்கும் அலுவலர்கள் ஒன்றியம், இலங்கை ஏற்றுமதியாளர்கள் ஒன்றியம், இலங்கை உல்லாசப் பயண ஹோட்டல்கள் ஒன்றியம், இலங்கை பிரயாண முகவர்கள் ஒன்றியம்.

ශ්‍රී ලංකා First

இன்றே செய்வோம் அன்றேல் என்றும் இல்லை

# யுத்தத்துக்கு முடிவு வராதா?
# இந்த அவலம் நீங்காதா?

கொடூரயுத்த நெருப்பினால் இன்று கருகிக் கொண்டிருப்பது நாடு மட்டும் அல்ல இளம் தளிர்களான சிறுவர் சிறுமியரும் தான்.

இலங்கையின் 12ஆவது நாடாளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் முடிந்து விட்டது.

இந்த கோர யுத்தத்தக்கு



குண்டுவீச்சில் இரு கால்களையும் இழந்த கிளிநொச்சிப் பகுதி சிறுமி ஒருத்தி.

இனியாவது முடிவு வராதா என்று ஏங்கும் வட்சக் கணக்கான உள்ளங்களில் இந்த இளம் தளிர்களும் அடங்காமல் இல்லை.

யுத்தத்தின் கொடுமை அவர்களை அந்த அளவுக்கு வாட்டி வதைத்து சின்னா பின்னமாக்கி விட்டது. அவர்களது எதிர்காலம் இருள் சூழ்ந்து விட்டது.

உயிர் போவதை விட கொடூரமானது அவயவங்களை இழப்பது. அதிலும் ஆடிப்பாடி, ஓடி விளையாட வேண்டிய சிறுவர்கள், தமது கால், கை, கண் போன்ற முக்கிய உறுப்புகளை இழந்துவிட்டு தமது வாழ்வின் பெரும்பகுதியை கழிக்கப் படும் வேதனை வார்த்தைகளால் சொல்ல முடியாதது.

இந்தக் கொடிய யுத்தம் கருக்குவது சிறுவர்களின் உடலை மட்டுமல்ல. அவர்களின் மனங்களையும் தான். கண்முன்னே குண்டு வீழ்ந்து சிதறிக் கிடந்த தாய் தந்தையரைக் கண்டு இதயம் வெடித்து நின்ற உள்ளங்கள் எத்தனை? இதை விட உலகில் கொடுமையானது ஏதாவது இருக்கும் என்று கருத முடியுமா?

தன் மண்ணிழந்து, வாழ்விழந்து, தாய் தந்தையரை இழந்து நிற்கும் இந்த குழந்தைகளின் உள்ளக் குமுறலை தான் என்னவென்பது?

இங்கே வடக்கில் இரக்கமில்லாமல் துவேசத்துடன் வீசப்பட்ட குண்டுகளில் சிக்குண்டு பாதி சிதறியும் பாதி சிதறாமலும் இருக்கும் இந்த உள்ளங்களைப் பாருங்கள்.

இவர்கள் என்ன பாவம் செய்தார்கள்? இவர்கள் என்ன ஆயுதம் ஏந்திப் போராடினார்களா? இல்லை ஈழம் கேட்டு எழுந்து நின்றார்களா?

இந்த குழந்தைச் செல்வங்களை ஏன் குண்டு போட்டு துண்டாடுகிறார்கள்? நாளைய உலகின் நாயகர்கள் என்பதாலா?

எமக்கென்று ஒரு எதிர்காலம் இல்லையா? எங்களுடைய வாழ்வே சூனியமாகி விட்டதா? என்று இவர்கள் ஏக்கப் பெருமூச்சு விடுகின்றனர். பாடசாலை செல்லும் சிறார்களையும், பெற்றோருடன் போகும் குழந்தைகளையும் பார்க்கும் போது இந்த இளம் உள்ளங்கள் பாசத்திற்காக ஏங்குகின்றன.

இவர்களுக்கு ஏன் இந்த தண்டனை? காலம் செய்த கோலமா? இல்லை கர்மவினையா?

துப்பாக்கி ஏந்துபவர்களும் குண்டை வீசுபவர்களும் தாய், தந்தை, சகோதரங்கள், பிள்ளைகளுடன் வாழ்பவர்கள் தானே!

துப்பாக்கியில் குறிவைக்கும் போதும் குண்டை வீச முனையும் போதும் தமது



கிளிநொச்சி, பூநகரிப் பகுதிகளில் மிதிவெடிகளில் சிக்கி காலை இழந்த சிறுவர்கள்



கிளிநொச்சிப் பகுதியில் மிதிவெடியில் சிக்கி தனது காலை இழந்த சிறுவன் ஒருவ...

குடும்பத்தை சற்று நினைத்துக் கொண்டால் போதும் இந்த விபரீதம் நிகழாது.

கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் 1990 ஆம் ஆண்டு ஆரம்பமானது. இந்த சங்கம் ஆரம்பமானபோது சிலரே இதில் தங்கி இருந்தனர். ஆனால் காலப் போக்கில் யுத்தக் கொடுமையால் இங்குள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது.

கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தில் ஊனமுற்றோர் மொத்தம் 1612 பேர் இருக்கின்றனர். இதில் பெண்கள் 1011 பேர் ஆண்கள் 601 பேர்.

ஊனமுற்றோர் புனர்வாழ்வு சங்கத்தில் தங்கியிருக்கும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சில சிறுவர் சிறுமிகளையே படங்களில் காண்கிறீர்கள்.

— நெடுங்கேணியூரான்

# அரசியல் அம்பலம்



### அண்ணன் என்னடா, தம்பி என்னடா

ஜொலிபப்பாவுக்கு எதிரணி தலைமை இல்லை என்றாகி விட்டதாம். மங்களத்தாருக்கும் மஹிந்த தர்மனுக்கும் இடையில் இப்பொழுதே எதிரணித் தலைமையைக் கைப்பற்ற கயிறிழுப்பு ஏற்பட்டு விட்டதாம்.

இருவருக்குமே ஒரு கவலை அனுராகம் பாடிக் கொண்டிருந்தவர் அப்பதவியை அப்பிக் கொண்டு போய் விடுவாரோ என்று.

இதனால் ஒருவருக்கு தெரியாமல் மற்றவர் தோல்வியின் நாயகனைப் பற்றி அம்மணியிடம் அள்ளி வைக்கின்றனராம். இதைக் கண்ட ஜொலிபப்பா இடையில் புகுந்து, ''என்னதான் சொன்னாலும் இரத்த உறவுக்கு விட்டுக் கொடுக்காதீர்கள். கடைசிவரை இருக்கும் சொந்தம் அல்லவா?'' என தூபம் போடுகின்றாராம்.

அம்மணியோ அண்ணன் என்னடா தம்பி என்னடா அவசரமான உலகத்திலே என புலம்புகின்றாராம். இதை ஜொலிபப்பாவே கூறிச் சிரிக்கின்றாராம்.

### மாத்தறை மங்களத்திற்கு மங்களம்

மாத்தறையில் மங்களகரமாக உலாவந்தவருக்கு அதிகார அம்மணி மங்களம் பாடிவிட்டாராம். உன்னை நம்பி நான் நாசமாய்ப் போனேன் என்று நெருப்பெடுக்கின்றாராம் அம்மணி. ஜாதகத்தை மாற்றி எழுதி வெற்றிமீது வெற்றி வந்து நம்மை சேரும் என நம்பவைத்த விடயம் இப்பொழுது தான் தெரிய வந்ததாம்.

''சூரிய – சந்திரன்'' என்ற பெயரில் வெளிவரும் ஜோதிட இதழின் உரிமையாளரும் மாத்தறை மங்களமும் செய்த தில்லு முல்லுகளை சமுர்த்தி நாயகன் அப்போதே அம்பலப்படுத்தி விட்டாரே, அப்போது இந்த அம்மா எங்கே போனார்களாம் என அலரி மரத்தடியில் இருந்து ஒரு குரல் ஒலிக்கின்றதாம்.

### யார் தமிழன் – கண்டுபிடி

கொழும்பில் தமிழர்கள் இருக்கின்றனரா? என ஆராய்ச்சி செய்கின்றார்களாம், யோகமானவரும் சுவாமியாரும் ஏன் தெரியுமா? தமிழன் வாக்கு தமிழனுக்கே என்று தீவிர பிரசாரம் செய்தும் தமிழர்கள் தம்மை கை விட்டுவிட்டனரே என்று அவர்கள் அங்கலாய்கின்றனராம். சுவாமி சந்நிதானத்தில் கேட்ட பூஜை ஒலி அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அதாவது தானைத்தளபதி கொழும்பில் ஆற்றிய உரைதான் நிலைமையை மாற்றி விட்டது என உரமாக அர்ச்சனை நடத்துகிறாராம்.

அந்த விநாயகனின் தம்பி அப்படி என்ன கூறிவிட்டார் என துருவியபோது எனக்கு ஆட்கள் யார் என்பது அவசியம் இல்லை. தமிழனை எம்.பியாக்குங்கள்'' என்று போட்டு உடைத்து விட்டாராம்.

அப்படியானால் யார் அந்தத் தமிழன் என யோகர் – சுவாமி கோட்டைக்குள் மண்டை குழம்பி உள்ளதாம்.

### காய்ச்சலும் பேதியும் கலந்தேவந்ததே

தேர்தலுக்கு முன் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்த புசல்லாவை ரட்ணத்துக்கு தேர்தல் முடிவுகள் வெளிவர வெளிவர காய்ச்சல் கண்டு விட்டதாம்.

கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்த கம்பளை ரத்னாவிடம் காய்ச்சலுக்கு மருந்து கேட்டாராம். உன்னை கம்பளைக்கு அமைப்பாளராய் போட்டபின் என் சகோதரங்கள் என்னையே கை கழுவி விட்டார்கள். இப்பொழுது என் கோட்டையே ஆட்டம் கண்டுவிட்டது. நானும் ஜுரத்தால் வாடுகிறேன், நீயே உனக்கு வைத்தியம் பார்த்துக் கொள் என்று கைவிரித்து விட்டாராம் கம்பளை ரத்னமானவர்.

பாவம் புசல்லாவை ரட்ணமானவரின் கனவில் ''தூங்குகின்ற சிங்கத்தை தட்டி எழுப்பி விட்டாய்'' என்று ஆறுமுகப் பெருமான் விடுத்த போஸினால் வயிற்றோட்டமும் சேர்ந்து பிடித்து விட்டது என்கிறார் ஐயனுக்கே சுவாமியான புசல்லாவை நண்டர்.

### நானா சொன்னேன் இருக்காது

இரத்தினக்கல் விளையும் பூமியில் ஏற்பட்ட ஒரு சம்பவம் தொடர்பாக காவத்தை நாயகனையும் பெல்மதுளை சந்திரனையும் கைது செய்யும்படி மேலிடம் உத்தரவிட்டிருந்ததாம்.

ஆனால் தேர்தல் தடல்புடலில் பொலிஸார் கிட்டப் போகவும் அஞ்சினராம். பச்சை வயலின் அசைக்க முடியாதவர் காவத்தை நாயகன் அவரைக் கைது செய்யும்படி சட்ட மேதையின் நீலமேக ரத்னாவும் அடிக்கடி பொலிஸாருக்கு தொல்லை கொடுத்தாராம்.

இப்பொழுது தேர்தல் முடிவுகள் வெளி வந்தவுடன் நீலமேகத்தாரிடம் பொலிஸார் கேட்டனராம் இப்போது கைது செய்யவா என்று?

நீலமேக சட்டமேதை நான் அப்படி ஒன்றும் சொல்லவில்லையே என்று நைசாக மாறிவிட்டாராம். இதை காக்கிச் சட்டைக்காரர்கள் சந்திப்பவர்களிடம் எல்லாம் கூறிச் சிரிக்கின்றனராம்.

பலர் அறிந்த உண்மை... நீங்கள் இன்னும் அறியவில்லையா?
Accredited by National Gem & Jewellery Authority
வெளிநாட்டு ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்
ARUL Jewellers 3 அருள்
3, Sea Street, Colombo 11. T.P. 436331
Nathan: 436331 or Siva: 027 80047...

இப்பத்திரிகை கொழும்பு —06, வெள்ளவத்தை பெரக்கும்பா பிளேஸ் 1/5ஆம் இலக்கத்தில் உள்ள ... 2001 ... 09ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.